கலை
இலக்கிய
மாத
சஞ்சிகை

191

மாசி 2023

01.02.2023

100/-

# ஜீவநதி

பிரதம ஆசிரியர் : க.பரணீதரன்



ஐங்கரன் விக்கினேஸ்வரா
ப.கண்ணன்
இ.தனஞ்செயன்
கி.நடராசா
கோகிலா மகேந்திரன்
உயிரோவியன்
மதுராந்தகன்
சோ.ப
வில்லரசன்
பொலிகைஜெயா
த.ஜெயசீலன்
எம்.எம்.மன்சூர்
ஆதிலட்சமி சிவகுமார்
குரு அரவிந்தன்
மலரன்னை
இராஜினிதேவி சிவலிங்கம்
கே.எம்.செல்வதாஸ்
தாட்சாயணி
சிவ.ஆரூரன்
கனிவுமதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
18 MAR 2023
மா நகர சபை
யாழ்ப்பாணம்

கலை இலக்கிய மாத சஞ்சிகை
2023 - மாசி

# பொருளடக்கம்




சிறுகதைகள்

ஆதிலட்சுமி சிவகுமாரன் - 06
குரு அரவிந்தன் - 12
மலரன்னை - 21
இராஜினிதேவி சிவலிங்கம் - 27

கவிதைகள்

மதுராந்தகன் - 06
சோ.ப. - 14
வில்லரசன் - 20
பொலிகை ஜெயா - 26
த.ஜெயசீலன் - 32
எம்.எம்.மன்ஸூர் - 37





நூல் விமர்சனம்

கே.எம்.செல்வதாஸ் - 33
தாட்சாயணி - 35
சிவ.ஆரூரன் - 38

உள் ஓவியங்கள்

கனிவுமதி

அட்டைப்படம்

கனிவுமதி

கட்டுரைகள்

**ஈழத்துதில் சிறுவர் இலக்கியமும் குழந்தைக் கவிஞர் அம்பியும்**
ஜங்கரன் விக்கினேஸ்வரா - 03





**காந்தாரா திரைப்படமும் அதில் காணப்பட்ட சர்ச்சைகளும்**
ப.கண்ணன் - 09

**கவிஞர் முருகு என்கின்ற முருகையா**
இ.தனஞ்செயன் - 15





**குற்றம் குற்றமே**
கி.நடராசா - 24

**குடும்பம் என்றொரு கோயிலிலே... - 13**
கோகிலா மகேந்திரன் -30

**உயிரோவியன் பக்கம்...** 4 - 40


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜீவநதி

**2023 மாசி இதழ் - 191**

**பிரதம ஆசிரியர்**
க.பரணீதரன்

**துணை ஆசிரியர்கள்**
வெற்றிவேல் துஷ்யந்தன்
ப.விஷ்ணுவர்த்தினி

**பதிப்பாசிரியர்**
கலாநிதி த.கலாமணி

**தொடர்புகளுக்கு :**
கலை அகம்
சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் வீதி
அல்வாய் வடமேற்கு
அல்வாய்
இலங்கை.

**ஆலோசகர் :**
திரு.கி.நடராஜா

**தொலைபேசி** : 0775991949
0212262225

**E-mail** : jeevanathy@yahoo.com

**வங்கித் தொடர்புகள்**
K.Bharaneetharan
Commercial Bank, Nelliady
A/C - 8108021808 - CCEYLKLY



இச்சஞ்சிகையில் இடம்பெறும் அனைத்து ஆக்கங்களின் கருத்துக்களுக்கும் அவற்றை எழுதிய ஆசிரியர்களே பொறுப்புடையவர்கள்.



## ஜீவநதி சந்தா விபரம்

தனிப்பிரதி - 100/= ஆண்டுச்சந்தா - 3000/=
வெளிநாடு - $ 100U.S
மணியோடரை
அல்வாய் தபால் நிலையத்தில்
மாற்றக்கூடியதாக அனுப்பி வைக்கவும்.
அனுப்ப வேண்டிய பெயர்/முகவரி
**K .Bharaneetharan,**
**Kalaiaham ,**
**Alvai North west, Alvai.**
வங்கி மூலம் சந்தா செலுத்த விரும்புவோர்
K.Bharaneetharan Commercial Bank - Nelliady Branch
A/C No.- 8108021808 CCEYLKLY


# ஜீவநதி

**(கலை இலக்கிய மாத சஞ்சிகை)**

அறிஞர் தம் இதய ஓடை
ஆழ நீர் தன்னை மொண்டு
செறி தரும் மக்கள் எண்ணம்
செழித்திட ஊற்றி ஊற்றி...
புதியதோர் உலகம் செய்வோம்.!
- பாரதிதாசன்-

## மின் அதிர்ச்சியில் நாம்

எமது நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார வீழ்ச்சி நிலை இன்று எமது மக்களை எவ்வளவு தூரம் பாதித்துள்ளது என்பது அனைவரும் உணர்ந்ததே. இதன் காரணமாக எடுக்கப்படுகின்ற அரச நடவடிக்கைகள் எமது மக்கள் வாழ்வைத் திண்டாடச் செய்து கொண்டிருக்கின்றன. பொருளாதார வீழ்ச்சிநிலையிலிருந்து நாட்டை மீட்டெடுப்பது என்பது அரசுக்குப் பெரும் பிரச்சினையாக உள்ளது என்பது உண்மை தான். ஆனால், இவ்வாறு மீட்டெடுப்பதற்கான நடவடிக்கைகள் எமது மக்களின் வாழ்க்கையைத் தான் சூறையாடிக் கொண்டிருக்கின்றன.

இறக்குமதிப் பொருட்களுக்கான தடை, இறக்குமதிப் பொருட்களுக்கான வரி. மின்சாரத்தடை என அரசு மேற்கொண்டு வருகின்ற நடவடிக்கைளை அடுக்கிக்கொண்டே போகலாம். குறிப்பாக மின்சாரத்தடையினால் பல தொழில்நிலையங்களும் கல்வி நிறுவனங்களும் பாதிக்கப்பட்டன. மாணவர்கள் தேசிய பரீட்சைகளுக்கு தயார் செய்வதற்கும் கூட மின்வெட்டு இடைஞ்சலாகவே இருந்தது.

இவை எல்லாவற்றையும் தாண்டி, இன்று மின் கட்டணங்கள் 66 சதவீதத்தால் உயர்த்தப்படும் என்ற செய்தி மக்களை ஒரு மின் அதிர்ச்சியாகவே தாக்கியுள்ளது. இனி, சிறிய, மத்திம மட்டத்திலான தொழிற்துறைகள் மின்சார கட்டண உயர்வால் தமது தொழில்துறைகளைக் கைவிடக்கூடும் அல்லது குறைத்துக் கொள்ளக் கூடும். வீடுகளில் எடுக்கப்படும் நடவடிக்கைகளால் பிள்ளைகளின் கல்வி பாதிக்கப்படும். மின்சாரக் கட்டண உயர்வை காரணம் காட்டி சேவைகளினதும் பொருட்களினதும் விலையும் உயரும்.

மின்கட்டண அதிகரிப்பினால் தான் நாட்டின் பொருளாதாரத்தை மீட்கமுடியுமென்றால், எமது மக்களின் வாழ்வை மீட்டெடுக்கும் பொறுப்பு யாருக்குள்ளது?

- க.பரணீதரன்

**ஜீவநதி கிடைக்கும் இடங்கள்/ விற்பனையில் உதவுவோர்**

1. புத்தகக்கூடம் - திருநெல்வேலி
2. பூபாலசிங்கம் புத்தகசாலை - யாழ்ப்பாணம், கொழும்பு செட்டித்தெரு
3. புத்தகப்பண்பாட்டுப் பேரவை, 68, நீதிமன்ற வீதி, மல்லாகம்
5. பண்டாரவன்னியன் புத்தகசாலை - வவுனியா
4. அ.யேசுராசா
5. பரணி புத்தகக்கூடம் - நெல்லியடி
6. மு.யாழவன்- திருகோணமலை,
7. கந்தர்மடம் அ.அஜந்தன்
8. சி.ரமேஷ்
9. நா.நவராஜ்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

■ ஐங்கரன் விக்கினேஸ்வரா

# ஈழத்தில் சிறுவர் இலக்கியமும் குழந்தைக் கவிஞர் அம்பியும்

அம்மாவின் தாலாட்டுப் பாடலில், இனிய தேனாக சுவை ததும்பும் வரிகளூடாகவே துவங்குகிறது சிறுவர் இலக்கியத்தின் வரலாறு. குழந்தைப் பாடல்களின் இலக்கிய இசைவாக, ஆரம்பப் புள்ளி அம்மாவின் ஆராரோ பாடல்கள் தான். அதன்வழியே குழந்தை கொஞ்சம் வளர்ந்து அதே போன்ற பாடல்களைக் கேட்க ஆவலாக இருக்கும். இதனூடகவே சிறுவர் இலக்கியம் வளர்ச்சி அடைந்ததை காணலாம்.



**அம்மாவின் தாலாட்டுப் பாடலில் எழுந்த இலக்கியம்:**

சந்த நயத்துடன் பாடப்படும் பாடல் பாடுபவருக்கும் கேட்பவருக்கும் மகிழ்வினைக் கொடுக்கின்றது. பாடுபவருக்கு உற்சாகமும் தெம்பும் அளிக்கின்றது. உலகை மறந்து ரசிக்க வைத்துவிடும். இவ்வகையில் அம்மாவின் தாலாட்டுப் பாடலில் துவங்கிய சிறுவர் பாடல்களின் பரிணாம வளர்ச்சியே சிறுவர் இலக்கியமாக அமைந்துள்ளது.

இன்றைய சிறுவர்களே, நாளைய பெரியவர்கள். இன்றைய சிறுவர்களைச் சிறப்பான முறையில் வளர்த்து எடுக்கும் போதே நாளைய உலகம் சிறப்பான உலகமாக அமையும். இந்த நோக்கத்துடனேயே கதைகளுக்கூடாகவும் பாடல்கள் மூலமும் அறிவுரை புகுத்தும் இலக்கியங்கள் தோன்றின. அம்மாவின் தாலாட்டுப் பாடலில் கூட ஆயிரமாயிரம் அறிவுரைகள் பொதிந்திருக்கும்.

சிறுவர்களுக்கான பாடல்கள் மிக முக்கியமான இடத்தினைச் சிறுவர் இலக்கியத்தில் பெற்றுக் கொள்கிறது.

**நிலா நிலா ஓடி வா**
**நில்லாமல் ஓடி வா**
**மலைமேலே ஏறி வா**
**மல்லிகைப்பூ கொண்டு வா**

என்று நிலாவைக் காட்டிச் சோறு ஊட்டிய தாயின் வாய்மொழி இலக்கியமாகத் தொடங்கியதே சிறுவர் இலக்கியம் எனக் கருதலாம். பாட்டி வடை சுட்ட கதை போன்று குழந்தைகளை உறங்க வைக்க கூறிய தாயின் வாய்மொழிக் கதையிலிருந்து சிறுவர் இலக்கியம் ஆரம்பமாகின. தாயின் ஆராரோ ஆரிவரோ என்ற தாலாட்டுப் பாடலுடன் சிறுவர் பாடல்கள் தொடங்கின.

**யாழ் பரியோவான் மாணவன் கவிஞர் அம்பி :**

இத்தகைய சிறுவர் இலக்கிய படைப்புக்களை தாயகத்தில் மாத்திரமின்றி புலம்பெயர் மண்ணிலும் படைத்த ஈழத்தைச் சேர்ந்த அம்பி என அழைக்கப்படும் இராமலிங்கம் அம்பிகைபாகர் அவர்கள் சிறுவர் இலக்கிய வரலாற்றில் காத்திரமான பங்களிப்பினை ஆற்றியுள்ளார்.

குழந்தைக் கவிஞன் என்றும் ஈழத்தின் தேசிகவிநாயகம் பிள்ளை என்றும் போற்றப்படும் கவிஞர் அம்பி, எளிமையும் தமிழின் அழகும் ஒருங்கே கூடியமையும் அவர் பாடல்கள் பல குழந்தைகளின் நாவில் இன்றும் தவழ்கின்றன. தமிழ் மொழி வளர்ப்பு, கவிதை என்று பல தளங்களில் சாதனைகள் செய்த கவிஞர் அம்பி அவர்களுக்கு பெப்ரவரி 17இல் தனது 94வது அகவையினுள் தடம்பதிக்கின்றார்.

இராமலிங்கம் அம்பிகைபாகர் என்ற இயற்பெயரைக் கொண்ட கவிஞர் அம்பி இலங்கையில் வடக்கே நாவற்குழி சொந்த ஊராகும். தனது ஆரம்பக்கல்வியை நாவற்குழி சி.எம்.எஸ் பாடசாலையிலும் பின்னர் உயர் கல்வியை யாழ். பரி. யோவான் கல்லூரியிலும் தொடர்ந்த அவர் அறிவியல் மற்றும் கணித ஆசிரியராக இலங்கையில் பல பாகங்களிலும் பணியாற்றி உள்ளார்.

**ஈழத்தின் குறிப்பிடத்தக்க எழுத்தாளர்களில் ஒருவரான கவிஞர்**

அம்பி அவர்கள் ஆஸ்திரேலியாவில் தன் முதுமையிலும் தமிழுக்கு ஆற்றிய பணியை எவரும் மறவர். அம்பி அவர்கள் ஆஸ்திரேலிய தமிழ் சமூகத்திற்கு செய்த பங்களிப்பு மிகப் பெரிது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தாயகத்திலும், புலம் பெயர் மண்ணிலும் அவர் பெற்ற விருதுகளும், பாராட்டுகளும் ஏராளம். இளமையில் கொழும்பு கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தில் தமிழ் பாடநூல் ஆசிரியராகவும் பணியாற்றிய அம்பி, *1981* இல் பாப்புவா நியூகினி நாட்டிற்கு பணிநிமித்தம் சென்று அதன்பின்னர் 1992இல் அவுஸ்திரேலியாவுக்கு புலம்பெயர்ந்தார்.

**ஈழத்து சிறுவர் இலக்கியம் :**

ஈழத்தின் சிறுவர் இலக்கிய வளர்ச்சி என்பது பெரும்பாலும் யாழ்ப்பாணத்தை மையமாகக் கொண்டே ஆய்வாகவே அமைந்து வந்துள்ளது. ஆயினும் தற்போது வடக்கிலும் கிழக்கிலுமாக பல சிறுவர் இலக்கிய படைப்பாளிகளை காணக்கூடியதாக உள்ளது. தமிழில் வெளிவந்த முதலாவது சிறுவர் பாடல் நூலாக இருப்பது யாழ்ப்பாணம் புலவர் தம்பிமுத்துப்பிள்ளை என்பவர் 1886 ஆம் ஆண்டு எழுதி வெளியிட்ட "பாலியக் கும்மி" என்பதே ஆராய்சியாளர்களின் கருத்தாகும்.

இதனைப் போல ஈழத்துக் சிறுவர் பாடல் மரபுக்கு வளமும் வனப்பும் சேர்த்த நவாலியூர் சோமசுந்தரப்புலவரை தலைசிறந்த குழந்தைக் கவிஞராக போற்றும் மரபு நம்மிடையே எப்போதும் உண்டு. அவரது பாடல்களில் ஒன்றான "ஆடிப்பிறப்பு" எனும் பாடலை சிறுவயதில் பாடிப்பாடிப் பரவசமடைந்திருக்கின்றோம்.

இன்றைய காலத்திலும் பல்வேறு நிகழ்வுகளில் நவாலியூர் சோமசுந்தரப்புலவர் அவரின் தேன் இனிய பாடல்களை குழந்தைகள் பாடுவதை காணலாம்.

ஈழத்து சிறுவர் இலக்கிய வரலாற்றில் தலைசிறந்த வரலாற்றின் முதன்மையானவராக நவாலியூர் சோமசுந்தரப்புலவர் விளங்குகிறார்.

வித்துவான் வேந்தனார் சிறந்த கவிஞராகவும், இன்னோர் ஈழத்து சிறுவர் இலக்கிய சிருஷ்டியாகவும் தமிழ் உலகிற்கு அறிமுகமாகியுள்ளார். இவர் எழுதிய கவிதைகள் ஈழநாடு பத்திரிகைகளில் வெளிவந்துள்ளதுடன் இலங்கை வானொலியிலும் ஒலிபரப்பாகி வந்துள்ளன.

அப்பாடல்களுள் சிலவற்றைத் தொகுத்து "கவிதைப் பூம்பொழில்" *1964* ஆம் ஆண்டு வெளியாகியது. அத்தொகுப்புக்குப் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை, சோ. இளமுருகனார் ஆகியோர் சிறப்புப் பாயிரம் நல்கியிருந்தனர்.

ஈழத்து சிறுவர் இலக்கிய வரலாற்றில் வேந்தனாரின் சிறுவர்களுக்கான கவிதைகள் சுட்டிக்காட்டத் தக்க முக்கியதுவம் வாய்ந்தனவாகும். அவர் படைத்த,

"காலைத் தூக்கிக் கண்ணில் ஒற்றிக்
கட்டிக் கொள்ளும் அம்மா
பாலைக் காய்ச்சிச் சீனி போட்டுப்
பருகத் தந்த அம்மா"

எனும் சிறுவருக்காக எழுதிய பாடல் இன்றும் சிறுவர்களால் பாடப்பட்டு வருகின்றமை வரலாற்றுச் சான்றாகும்.

**கவிஞர் அம்பியும் சிறுவர் இலக்கியமும் :**

குழந்தைக் கவிஞன் என்றும் ஈழத்தின் தேசிகவிநாயகம் பிள்ளை என்றும் போற்றப்படும் கவிஞர் அம்பி 1950 ஆம் ஆண்டு முதல் எழுதி வருபவர். கவிதை, கவிதை நாடகம், சிறுகதை, கட்டுரை, விமர்சனம், ஆய்வு முதலான துறைகளில் அறியப்பட்டவர்.

கங்காரு தேசத்தின் சிட்னியில் தற்போது வசிக்கும் கவிஞர் அம்பி சிறுவர் இலக்கியத்திற்கு குறிப்பாக புலம்பெயர் நாடுகளில் தமிழ்ச் சிறார்களுக்காக கவிதைகள் பலவற்றையும் படைத்துள்ளார்.

இலட்சியக் கோடி என்ற சிறுகதையின் மூலம் தமிழ் எழுத்துலகில் அறிமுகமானவர். இச்சிறுகதை தினகரன் இதழில் வெளிவந்தது. அத்துடன் தமிழ் நாட்டில் அண்ணாதுரை முதலமைச்சராக இருந்த காலப் பகுதியில் அனைத்துலக தமிழாராய்ச்சி மாநாட்டினை முன்னிட்டு நடாத்தப்பட்ட கவிதைப் போட்டிகளில் தங்கப் பதக்கம் வென்ற பெருமைக்கு உரியவர். சிறுவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கியத்திற்கு பெரும் பங்காற்றிய அம்பியை ஈழத்தின் தேசிக விநாயகம் பிள்ளையாக சுபமங்களா இதழால் வர்ணிக்கப்பட்டவர்.

**குழந்தைக் கவியின் படைப்புகள்:**

அம்பியின் வேதாளம் சொன்ன கதை கவிதை நாடகம், இலங்கையில் தாசீசியசின் நெறியாள்கையிலும், யாழ்பாடி என்ற கவிதை நாடகம் அவுஸ்திரேலியாவில் அண்ணாவியார் இளைய பத்மநாதனின் அண்ணாவியத்திலும் அரங்கேறியுள்ளமை குறிப்பிடத் தக்கது. இரண்டாவது உலகத்தமிழ் ஆராய்ச்சி மாநாட்டில் "அண்ணா பதக்கத்திற்காக" கவிதைப் போட்டி நடைபெற்று எம்ஜிஆர் அவர்கள் தங்கப்பதக்கம் அளித்த பத்து கவிஞர்களில் அம்பி அவர்களும் ஒருவர்.

30 ஆண்டுகள் ஆசிரியப்பணி, பின்னர் பாடவிதான எழுத்தாளர் என்று அவரின் பணி விரிகிறது. இளங் குழந்தைகளின் வயது, மூளை வளர்ச்சி மொழித் திறன் ஆற்றல் ஏற்புடைமை இவற்றையெல்லாம் கவனத் திற் கொண்டு சீரிய பாடல்களை எழுதிய பெருமை கவிஞர் அம்பிக்குரியது.

அம்பி அவர்கள் 10 கவிதை நூற்கள், கிரீன் அவர்களைப்பற்றி மூன்று நூற்களைப் படைத்துள்ளார். கிறீனின் அடிச்சுவடு,அம்பி பாடல் (சிறுவர் பாடல்கள்), வேதாளம் சொன்ன கதை (மேடை நாடகம்),

கொஞ்சும் தமிழ் (சிறுவர் பாடல்கள்), அந்தச் சிரிப்பு, யாதும் ஊரே, ஒரு யாத்திரை, அம்பி கவிதைகள்,

மருத்துவத் தமிழ் முன்னோடி, Ambi's Lingering Memories (Poetry), Scientific Tamil Pioneer Dr Samuel Fisk Green, உலகளாவிய தமிழர், A String of Pearls, பாலர் பைந்தமிழ் ஆகியன அவரின் படைப்புகளாகும்.

சிறுவர் இலக்கிய தமிழ் மொழி வளர்ப்பு, கவிதை என்று பல தளங்களில் சாதனைகள் செய்த கவிஞர் அம்பி அவர்கள், 1968இல் உலகத்தமிழாராய்ச்சி மாநாட்டு தங்கப்பதக்க விருதையும் பெற்றுள்ளார். அதன் பின் 1993இல் இலங்கை இந்து கலாசார அமைச்சின் "தமிழ்மணி விருது"ம், 1994இல் கொஞ்சும் தமிழ் சிறுவர் இலக்கிய நூலுக்கு இலங்கை சாகித்திய விருதும் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

**புலம்பெயர் மண்ணில் தமிழ் இலக்கிய வளர்ச்சிப் பணி :**

புலம்பெயர் மண்ணில் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்காக 1997இல் அவுஸ்திரேலியாவில் மெல்பன் "நம்மவர்" விருதையும், 1998இல் கனடாவில் சி.வை. தாமோதரம் பிள்ளை தங்கப்பதக்க விருதையும் பெற்றுள்ளார். அதன்பின்னர் 2004இல் அவுஸ்திரேலியா கன்பராவில் தமிழ் இலக்கிய கலைச்சங்கத்தின் விருதையும் பெற்றுள்ளார்.

கவிஞர் அம்பி சிறுவர்களுக்காக எழுதிய இந்த இலக்கியத்தின் கதாநாயகர்களாக, பிள்ளைகள் விரும்புகின்ற பிராணிகளும் விலங்குகளும் அதிகமாக வந்து போவார்கள். குழந்தைகள் கற்பனாசக்தி மிக்கவர்கள். எனவே இக்கதைகளில் மிருகங்கள் பேசும், பறவைகள் பாடும். வண்ண வண்ண நிறங்களிலும் அழகான கண்ணைக் கவரும் படங்களுடனும் கவர்ச்சியாக சிறுவர்களைக் கவரும் வகையில் இந்த இலக்கியத்தைப் படைத்துள்ளார். சிறுவர் இலக்கியத்திற்கு அம்பியின் படைப்பாற்றலை கௌரவித்து ஈழத்தில் மல்லிகை, ஞானம் ஆகிய இலக்கிய இதழ்கள் முகப்பில் அம்பியின் உருவப்படத்துடன் அவரது பணியை பாராட்டி கட்டுரை எழுதி அலங்கரித் துள்ளன. எளிமையும் தமிழின் அழகும் ஒருங்கே கூடியமையும் அவர் பாடல்கள் பல குழந்தைகளின் நாவில் இன்றும் தவழ்கின்றன. அம்பியின் கவிதைகள் நூலிலும் பல இதழ்கள், இணையத் தளங்களிலும் வெளியாகி பிரசித்திபெற்றுள்ளன.

அக்கவிதைகளில் தமிழ் உணர்வை ஊட்டும் வரிகளை நாம் காணலாம்.

"ஓடிடும் தமிழா நில், நீ ஒரு கணம் மனதைத்தட்டு
வீடுநின்னூருள் சொந்தம், விளைநிலம் நாடு விட்டாய்
தேடியதெல்லாம் விட்டுத்திசைபல செல்லும் வேளை
பாடிய தமிழை மட்டும் பாதையில் விட்டிடாதே"

என்று புலம்பெயர் மண்ணிலும் பல தளங்களில் சாதனைகள் செய்த கவிஞர் அம்பியின் படைப்பியல் வரலாறு காலங்காலமாக நிலைத்திருக்கும்.

கவிஞர் அம்பி அவர்கள் 94வது (பெப்ரவரி 17, 1929) அகவையில் தடம் பதித்தாலும், தமிழுக்கு ஆற்றும் பணியில் இளமையாகவே என்றும் மிளிர்கிறார்.



முல்லை முகுந்தினியின் "இடர் சுமந்த மேனியர்" நாவல் வெளியீடு 12.01.2023 அன்று யாழ்பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் யோ.ஜெனா தலைமையில் நடைபெற்றது. வாழ்த்துரைகளை பேராசிரியர்கள் சி.சிறி சற்குணராசா, க.சுதாகர் வழங்கினார்கள். வெளியீட்டுரையை பேராசிரியர் ம.இரகுநாதனும். நயப்புரையை த.அஜந்த குமாரும் நிகழ்த்தினார்கள்.



"என்றென்றும் கைலாசபதி" நூல் வெளியீடு 14.01.2023 மட்டக்களப்பு பொது நூலக கேட்போர்கூடத்தில் கவிஞர் மன்சூர் ஏ.காதர் தலைமையில் நடைபெற்றது. அறிமுகவுரையை பாலசுகுமாரும், சிறப்புரைகளை பேராசிரியர்கள் செ.யோகராசா, றமீஸ் அப்துல்லாஹ் ஆகியோர் நிகழ்த்தினார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதிலட்சுமி சிவகுமார்

# ஒரு மழைநாள் பொழுது...



சில நாட்களாக அடம்பிடித்துப் பெய்துகொண்டிருந்த மழை சற்றே ஓய்ந்திருந்தது. காற்று விசிறிச் சென்ற குளிர் மட்டும் விலகாது அப்படியே இருந்தது.

மழை நின்றுவிட்ட பிறகும் அந்தக் குளிர் உடலை நடுக்கமுறச் செய்தது. பாடசாலைகளுக்கு இரண்டுநாட்கள் விடுமுறை அறிவிக்கப்பட்டிருந்ததால் குழந்தைகள் விடிந்த பிறகும், உறங்கிக் கொண்டிருந்தார்கள்.

உருக்கொண்டுவிட்ட பேயோட்டி போல, நேற்றிரவு சுழன்று சுழன்று அடித்த காற்றில் முற்றத்தில் நின்ற ஆத்திமரத்தின் கொப்புகள் சில உடைந்து கீழேவிழுந்து கிடந்தன. இந்த ஆத்திமரம் தாத்தாவின் காலத்தில் தானாக முளைத்தமரம் என்று முன்பு அம்மா அடிக்கடி சொல்வாள்.

மஞ்சள் நிறத்தில் மலரும் ஆத்திப்பூக்கள் மிகவும் அழகாக இருப்பதை அவளும் இரசித்திருக்கிறாள். சின்ன வயதில் மாலைகட்டி கோயிலுக்கு எடுத்துச் சென்றிருக்கிறாள். சங்ககால செய்யுள் வரலாற்றிலும் இந்தப் பூக்களின் மகிமை பேசப்பட்டிருப்பதை அவளுடைய ஆசிரியர்கள் அவளுக்கு கற்பித்திருக்கிறார்கள்.

சிவபெருமானுக்கு இந்த ஆத்திமரத்தின் பூக்கள் மிகவும் பிடித்தமானவையாம். அதனால் தான் சிவனுக்கு ஆத்திசூடி என்கிற பெயரும் உள்ளதாம். இதற்காகவே இந்த மரத்தை ஒருபோதும் வெட்டி அகற்ற அப்பா ஒப்புவதில்லை.

ஆனாலென்ன... சின்னக் காற்றடித்தாலும் சிறியசிறிய கொப்புகள் கீழே விழுந்துவிடும். இப்போதும் பட்டதும் பச்சையுமான நிறைய கொப்புகள் கீழே வீழ்ந்து கிடந்தன. இத்தனை ஆண்டுகளில் இப்படி ஒரு பேய்க்காற்றைத் தான் பார்த்ததில்லை என அவள் தனக்குள் நினைத்துக்கொண்டாள்.

பக்கத்தில் பரஞ்சோதி வாத்தியாரின் வீட்டிலும் மின்விளக்குகள் எரியவில்லை. காற்றடித்ததில் மின் கம்பிகள் எங்காவது அறுந்து மின்சாரம் தடைப்பட்டுப் போயிருக்கும் என நினைத்துக் கொண்டாள். நல்ல வேளையாக வீட்டில் இரண்டு லீற்றர்வரை மண்ணெண்ணை இருப்பது நல்லதென அவளது மனம் சொல்லிக்கொண்டது.

பரஞ்சோதி வாத்தியார் ஊரின் சின்னப்பள்ளிக்கூடத்தின் பழைய தலைமை வாத்தியார். அவர் தலைமை ஆசிரியராக இருந்த காலத்தில் அவளும் அங்கேதான் படித்திருக்கிறாள். அவளை அவர் அவளுடைய பெயர் சொல்லி ஒருபோதும் கூப்பிட்டதில்லை. அவளுடைய அப்பாவின் பெயரைச் சொல்லித்தான் கூப்பிடுவார். அவருக்கு எல்லாப்பிள்ளைகளுடைய தாய் தந்தையரையும் அவரவர் குடும்ப நிலைமைகளும் தெரிந்திருந்தன.

பரஞ்சோதி வாத்தியார் மிதிவண்டி ஓட்ட மாட்டார். தடித்த கால் செருப்புகள் சடசடக்க நடந்து தான் பாடசாலைக்கு அவர் வருவார். மழைக்காலத்தில் ஒருகையில் குடையும் மறுகையில் பையோடும் அவர் வருவார். அவருடைய வெள்ளைவேட்டியின் பின்பக்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முழுவதும் அவருடைய செருப்பு விசிறிய சேற்றுப் புள்ளிகள் இருக்கும். அவர் அதைப்பற்றி ஒருபோதும் கவலைப்பட்டதாக இல்லை. அவருடைய மனைவியார் தான் அவரதும் ஆடைகளையும் அடித்துத் துவைத்து உலர்த்தி வைப்பார்.

அவருடைய வீட்டில் எல்லா வருடங்களினதும் பஞ்சாங்கங்கள் அடுக்கி வைக்கப்பட்டிருக்கும். நாள்கள், கோள்கள், திதிகள் பார்ப்பதற்கு அவரிடம் தான் ஊர்ச்சனங்கள் போகும். அவர் முகஞ்சுழிக்காமல் எல்லோருக்கும் பஞ்சாங்கத்தில் நல்லநாள் பார்த்துச் சொல்லுவார்.

அவர் தூர இடங்களுக்குப் போகவேண்டும் என்றால், அவளுடைய அப்பாதான் அவரை மிதி வண்டியில் ஏற்றிச்செல்வார். அப்பா அதற்குக் கூலியாக அவரிடம் எதையும் வாங்கிக்கொள்ள மாட்டார். அப்பாவுக்கு பரஞ்சோதி வாத்தியாரிடம் அவ்வளவு பேரன்பு பெருகிக்கிடந்தது.

சில இரவுவேளைகளில் அப்பா பரஞ்சோதி வாத்தியார் வீட்டுக்குப் போய், அவருடன் அமர்ந் திருந்து ஊர்நடப்புகளையும் அரசியலையும் பேசிவிட்டு வருவதுண்டு. பரஞ்சோதி வாத்தியாரைப் போலவே அப்பாவிடமும் தமிழ்ப்பற்றும் இனப்பற்றும் ஊறிக் கிடந்தன.

அவளுக்கும் தனிப்பட்ட முறையில் அவரிடம் நன்றிக்கடன் இருந்தது. அவள் செந்தில்குமரனை காதலித்திருந்த நாட்களில், அப்பாவின் காதுகளுக்கு கதைவந்து, அவள் வீட்டுக்கு வெளியே செல்ல அனுமதிக்கப்படாமலிருந்தாள். அந்த நேரத்தில் அவளுக்காகப் பரிந்து பேசி, அவளையும் செந்தில் குமரனையும் சேர்த்து வைத்தவர் பரஞ்சோதி வாத்தி யார்தான் என்ற நன்றியுணர்வு எப்போதும் அவள் மனதில் நிறைந்துகொண்டே இருக்கும்.

அவருடைய மனைவி சிவகாமசுந்தரியும் ஆசிரியையாக இருந்து ஓய்வு பெற்றவர்தான். எப்போதும் தலைமுடியை மேவி இழுத்துக் கொண்டை போட்டிருப்பார். ஓய்வுபெற்ற பிறகும் வீட்டிலும் புடைவை உடுத்திக்கொண்டு இருப்பார். அது அவருக்கு ஒரு தனித்துவமான அழகைக் கொடுக்கும். அவவிடம் ஒரு தையல் இயந்திரம் இருந்தது. அதில் சிவகாமசுந்தரி ஆசிரியை ஏதாவது தைக்கும்போது, அதன் கடகடப்பு ஒலி அவளது வீடு வரை கேட்கும்.

இந்த அழகான வாழ்க்கையைத்தான் காலம் எல்லோரிடமும் இருந்து களவாடியது. அச்சமும் அலைச்சலும் நிறைந்து வாழ்க்கை சிதறிப்போகத் தொடங்கியது. ஊரில் இருக்கமுடியாத ஒரு புறச் சூழலில், பிள்ளைகளோடு இடம்பெயர்ந்து, கிளி நொச்சிக்கு வந்தார்கள். எங்கேயும் அமைதியாக வாழ முடியவில்லை. அப்படியே போர் துரத்த, முள்ளிவாய்க் கால் வரை நகர்ந்தார்கள்.

அந்தநேரம் அப்பா ஊரில் இறந்த செய்திகூட அவளுக்குத் தெரியவரவில்லை. கொழும்பிலிருந்து அப்பாவின் செத்தவீட்டுக்கு சென்றிருந்த தம்பி, இரவில் முகமூடி அணிந்தவர்களால் கடத்தப்பட்டுக் காணாம லாக்கப்பட்டுவிட்டான். அம்மா அழுகையும் அரற்றலு மாக கிடந்து கிடந்து, நோயுற்று அழுந்தினாள். அம்மா வைப் போய்ப்பார்க்கக் கூட அவளால் இயலாதிருந்தது. எல்லோரையும் உலுப்பி எடுத்து நின்ற போரை அவள் சபித்தாள். அம்மா பாயிற்கிடந்து, படுக்கைப் புண்ணுடன் போராடி. போய்ச்சேர்ந்து கொண்டாள்.

இறுதிப்போர்முடியும் தறுவாயில், செந்தில் குமரனையும் இழந்து, இரண்டு பிள்ளைகளோடு அவள் மீண்டும் ஊருக்கு வந்தாள். வீடு பேயுறைந்து கிடந்தது. பற்றைகளும் வளர்ந்து, அக்கம்பக்கத்துச் சனங்கள் குப்பைகளால் நிறைத்திருந்தார்கள். ஆனால் அப்பாவும் அம்மாவும் வீட்டை அவள் பெயரில் எழுதியிருந்தார்கள். வீட்டைப் பார்த்து ஒவென்று கதறிக்கதறி அழுதாள்.

முதுமையின் தளர்வில் இருந்தபோதும் ஓடி வந்து முதலில் அரவணைத்தவர் பரஞ்சோதி வாத்தியார் தான். தலையில் முடிகள் அனைத்தும் உதிர்ந்து, உடல்மெலிந்து தெரிந்தார் அவர். பள்ளிக்கூடத்தில் பார்த்த அந்தக் கம்பீரம் எங்கோ சென்றுவிட்டிருந்தது. ஆனாலும் குரல் அப்படியே இருந்தது. வீட்டைத் துப்பரவு செய்யும் வரை அவர்கள் வீட்டிலேயே அவள் பிள்ளைகளுடன் தங்கினாள்.

அவர்தான் அவளோடு எல்லாஅலுவல்களையும் பார்க்க எங்கும் உதவிக்கு வந்தார். தான் பெற்ற மகளைக் கவனிப்பதுபோல அவர்கள் இருவரும் கவனித்துக் கொண்டார்கள்.

சின்னவயதில் பரஞ்சோதி வாத்தியார் வீட்டில் நின்ற பசுவின் பாலைக்குடித்து வளர்ந்தவள் அவள். மார்கழி மாதத்தில் அந்தப்பசுவின் சாணத்தை எடுத்து வந்து, முற்றத்தில் மெழுகி, அரிசிமாவால் கோலம் போட்டு, சாணத்திலேயே உருண்டை செய்து அதில் பூச்செருகி, அழகுபார்த்தவள் அவள்.

இப்போதும் அவர்கள் வீட்டில் பசுவும் கன்றும் நிற்கின்றன. கறக்கின்ற பால்முழுவதையும் பரஞ்சோதி வாத்தியாரின் மனைவி பாற்பண்ணைக்கே கொடுத்து விடுகிறார். பால்மாவகைகள் வந்தபிறகு பசும்பாலை வாங்க யாரும் முன்வருவதில்லை என்பது அவர்களின் கவலையாக இருந்தது.

அரசாங்கத்தின் இறக்குமதிக் கட்டுப்பாட்டுக் கொள்கை பொருளாதாரச் சூழ்நிலையையே தலை கீழாக்கி விட்டது. சனங்கள் எரிபொருளுக்கு அலையவும் உணவுப்பொருட்களுக்காக ஏங்கவும் தொடங்கினார்கள். அவளது பிள்ளைகள் வளர்ந்தவர்கள் என்பதால் அவளால் சமாளிக்க முடிந்ததாக நினைத்துக்கொண்டாள்.

நிறையச் சனங்கள் தடுமாறிப்போனார்கள். வழமையாக தமிழ்ச்சனங்கள் மட்டுமே பட்டுணர்ந்த வலிகளை எல்லோரும் உணரவும் வலிகொண்டு தகிக்க வும் செய்தார்கள், காலமாற்றம் அவளை வியப்படை யவும் வருந்தவும் வைத்தது.

அவள் எல்லாவற்றுக்கும் தன்னைப் பழக்கப் படுத்திக்கொண்டாள். மண்ணெண்ணை கிடைக்காத போதும் இருளில் வாழத் தெரிந்திருந்தது அவளுக்கு. காய்ச்சல் வந்தபோது அவளுக்குப் பனடோல் தேவைப் படவில்லை, பரஞ்சோதி வாத்தியார் வீட்டு வேப்ப மரத்தின் பட்டையை அவித்துக்குடித்துக் காய்ச்சலை விரட்டினாள். மூத்தவனுக்கு காலில் புண்வந்தபோது, முள்முருக்கமிலைச் சாற்றை ஒவ்வொருநாளும் பூசிச் குணப்படுத்தினாள்.

இந்த உலகம் முன்போல இல்லை. மிகவும் கெட்டழிந்து போய்க்கொண்டிருக்கிறது என்பதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் அறிவாள். அழிந்துகொண்டிருக்கும் இந்த உலகோடு சேர்ந்து தானும் அழிந்துபோய்விடக் கூடாதென அவள் நினைத்துக்கொள்வாள்.

பரஞ்சோதி வாத்தியாரின் இரண்டு மகன்கள் வெளிநாட்டில் வாழ்கிறார்கள். மகள் அரச பணியாள ராக கொழும்பில் இருக்கிறாள். அவரும் மனைவியும் அந்தப் பெரிய கல்வீட்டைப் பராமரித்துக்கொண்டு, பொதுத்தொண்டுகளிலும் ஈடுபாடு காட்டுகிறார்கள்.

அவளுடைய வீடும் கல்வீடுதான். ஆனால், காலம்போய்க் காரைபெயர்ந்து கிடக்கிறது. மழைக்கு ஆங்காங்கே ஒழுகும். அடுப்படியில் வெடிப்பினூடாக நீர் கசிந்து, கரியைக் கரைத்துக்கொண்டு வழியும்.

அவளுடைய பின்வளவில் இரண்டுமூன்று தென்னைகளும் மாதுளையும் இரண்டொரு வாழை மரங்களும் நிற்கின்றன. சொந்தமாகக் கிணறு இல்லை. யாரிடமாவது இரந்து கையேந்தி ஒரு கிணற்றை அமைத்து, அந்த நீரைக்குடிப்பது தன்வரையில் அது தனக்கு இழுக்கு என அவள் நினைத்துக்கொள்வாள்.

பரஞ்சோதி வாத்தியார் வீட்டிலிருந்து வேலியூடாக ஒரு குழாய் பொருத்தி, அதிலிருந்துதான் எல்லாத்தேவைகளுக்கும் தண்ணீர் எடுக்கிறாள். வாத்தியாரும் மனைவியும் மின்கட்டணம் என்று எதுவும் வாங்கமறுத்துவிட்டார்கள். அம்மையும் அப்பனுமாக இருந்து அவர்கள் செய்யும் உதவிகள் அவளுக்குப் போதுமானவையாக இருந்தன. இப்போது அடிக்கடி மின்வெட்டு வேறு துயரம் தருகிறது.

மழை கொஞ்சம் வெளித்திருக்கிறது. ஆனால் சூரியன் வெளிவருவதாக இல்லை. மலைநாட்டைப் போல மேகம் கீழிறங்கி நகர்ந்துகொண்டிருந்தது. வழமையாக பாட்டுப்போட்டபடி ஊர்ந்துவரும் பாண் வண்டிகள் இப்போது வருவதில்லை.

பலவீடுகளில் வெள்ளைமாவை உப்புப் போட்டுக் கரைத்து மாத்தோசை செய்கிறார்களாம். மகன் வந்து சொன்னபோது அவளும் ஒருநாள் செய்தாள். பிள்ளைகள் ஆசையாகச் சாப்பிட்டார்கள்.

குழந்தைகளுக்கான பால்மாவகைகள் தட்டுப் பாடென்று செய்திகள் சொல்லிக்கொண்டிருந்தன. இருப்புகளை ஒளித்துவைத்துவிட்டு, அவலப்படுபவர் களிடம் சில கடைக்காரர்கள் அதிகவிலைக்கு விற்பதாக வும் சனங்கள் பரவலாகப் பேசிக்கொண்டிருந்தார்கள்.

பரஞ்சோதி வாத்தியார் வீட்டில் அவள் பசுப்பால் கேட்பதில்லை. கேட்டால் அவர்கள் தரு வார்கள் தான். ஆனால் அதற்கு காசுவாங்கமாட்டார்கள் என்பதால் அவள் கேட்ப தில்லை.

எவ்வளவு மழைபெய்தாலும் முற்றத்து வெள்ள நீர் தேங்காமல் வடிந்துவிட்டிருந்தது. அவள் முற்றத்தில் உடைந்து விழுந்துகிடக்கும் ஆத்திமரக் கொப்புகளை முறித்து தாழ்வாரத்தில் அடுக்கி வைக்க விரும்பினாள்.

கறுப்புநிறச் செருப்புகளை கால்களிலே கொளுவிக்கொண்டு முற்றத்தில் இறங்கினாள். சில்லென்ற குளிர் ஒருமுறை உடலுக்குள் புகுந்து உலுப்பி எடுத்தது.

"இந்தக் குளிருக்குள்ளை என்ன பிள்ளை செய்கிறாய்..."

ஒருகையில் குடையுடனும் மறுகையில் ஒலைப்பையுடனும் பரஞ்சோதி வாத்தியார் வந்து கொண்டிருந்தார்.

"நான் இந்த உடைஞ்ச தடியள முறிச்செடுக்கப் போறன்... விறகெரிக்கலாம் தானே.... அது சரி.... இந்தக் குளிருக்குள்ளை நீங்கள் எங்கை வாத்தியார் போறியள்...?

"இண்டைக்கு வெள்ளிக்கிழமை தானே... கோயிலுக்குப் பால் கொண்டுபோறன்..."

அவள் பரஞ்சோதி வாத்தியாரையே பார்த்துக் கொண்டு நின்றாள்.

தூரத்தே குழந்தையொன்று வீரிட்டமும் ஒலி அவளுக்குள் நுழைந்தது. •

# மதுராந்தகன் கவிதைகள்

## நீதித்துறை

ஆதவன் விழித்த
அதிகாலைப் பொழுது
பூத்துக் குலங்கிய
பூஞ்செடியில் பூக்கள்
பறித்தான் ஒருவன்
நீதி தேடி கடவுளிடம்
சென்றது பூவிழந்த செடி
"பறித்தவன் பக்தன்
என்னால் எதுவும்
செய்ய இயலாது"
கைவிரித்தார் கடவுள்.

## சமரசம்

"ஐயனே... உனைக் காண
வேண்டும்" - இது நந்தன்
"அப்படியே ஆகட்டும்!"
நந்தனை வெளியே நிற்கச் சொல்லி
நந்தியை விலகச் சொன்னார் சிவன்

## இயற்கையின் நீதி

மழையே வா என
வேண்டுகிறான் விவசாயி
பயிரேற்றுவதற்கு
மழையே போ என
வேண்டுகிறான் அவன் மகன்
பட்டமேற்றுவதற்கு
தொடர்ச்சியாய் வீசுகிறது
பருவக் காற்று
விட்டுவிட்டுப் பொழிகிறது
பருவ மழை

## மனித நீதி

பாம்பைக் கொன்றேன்
என்னைக் கொல்லவருகிறது என்று
மூட்டையைக் கொன்றேன்
எனக்கு எரிச்சல் ஊட்டுகிறது என்று
மீனைக் கொன்றேன்
எனக்கு இச்சை தருகிறது என்று
இறுதியில் மனிதனையும்
கொன்றேன்
எனக்கு போட்டியாய்
வருகிறான் என்று
எனக்கு மட்டுமே
இருந்தப் பூமி
இங்கு நானே
உயர்ந்த பிறவி
நான் மனிதன்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

# காந்தாரா திரைப்படமும் அதில் காணப்பட்ட சர்ச்சைகளும்




ப.கண்ணன்

காந்தாரா திரைப்படமானது 2022 ஆம் ஆண்டு கன்னட மொழியில் வெளியாகி அமோக வரவேற்பை பெற்றது. இதைத் தொடர்ந்து ஏனைய தென்னிந்திய மொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட்டு விமர்சன ரீதியாகவும் வர்த்தக ரீதியாகவும் மாபெரும் வெற்றியைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது. இத்திரைப்படத்தை ஹொம்பாளே பிலிம்ஸ்(Hombale Films) நிறுவனம் தயாரிக்க ரிஷப் ஷெட்டி எழுதி இயக்க பி.அஜெனீஷ் லோக்நாத் இசையமைத்திருந்தார்.

இத்திரைப்படத்தின் கதையானது பழங்குடி மக்களின் வழிபாட்டு முறையை மையமாகக் கொண்டமைந்தது ஆகும். குறிப்பாக கர்நாடக மாநிலத்தில் தட்சிணா கன்னடம், உடுப்பி மாவட்டம் போன்ற பகுதிகளில் வாழும் பழங்குடி மக்களிடம் "பூதகோலா" எனப்படும் சடங்கு காணப்படுகிறது. இச்சடங்கு ஆவிகளிற்காக செய்யப்படும் உருவேறி நடனமாடும் சடங்காக காணப்படுகிறது. பூதகோலா எனும் பெயரின் அர்த்தத்தை ஆராய்வோமானால் பூதம் எனும் சமஸ்கிருதச் சொல்லானது ஆவிகளையும் கோலா எனும் சொல் நடனம்/நாடகத்தையும் குறிப்பதாகவும் அமைகிறது. இதிலிருந்து பூதகோலா என்பது ஆவிகளிற்காக மேற்கொள்ளப்படும் சடங்கு சார்ந்த ஆற்றுகை என்பது புலனாகின்றது. பழங்குடியினர் தம் முன்னோர்கள் மற்றும் விலங்குகளின் ஆவிகளை தமது தெய்வமாகக் எண்ணி இச்சடங்கை மேற்கொண்டு வருகின்றனர். இச்சடங்கில் "பஞ்சுருளி" எனும் தெய்வம் உருக்கொண்டு நடனமாடி ஊரவர்கள் தமது ஊர்ப்பிரச்சினை, தனிநபர் பிரச்சினைகளை பற்றி கேட்கும் போது அதற்கு தனது வாக்கினூடாக தீர்வினைக் கூறுவதாக இச்சடங்கு அமையும். இதில் பிரதானமாக காட்டு விலங்கான பன்றிக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. தெய்வ மாடும் போது பன்றியின் தலையை ஒத்த உலோகத்திலான கிரீடத்தைத் தலையில் வைத்து ஆடுவார்கள். இச்சடங்கு நடைபெறும் பிரதேசங்களில் பன்றி வேட்டையாடுதல் மற்றும் அதனை உண்பது தெய்வத்தை கோபப்படுத்தும் என்பது ஊரவர்களின் நம்பிக்கையாகவும் காணப்படுகிறது.

பல மாநிலங்களை ஒன்றிணைத்துக் காணப்படும் இந்தியா பல கலாசாரங்களையும் பல மத வழிபாட்டு முறைகளையும் கொண்டு காணப்படுகின்றது. ஆயினும் தற்காலத்தில் இந்தியாவில் மதவாத அரசியல் போக்கு காணப்படுவதால் இவை அனைத்தையும் இந்து எனும் ஒரு மதத்திற்குள் கொண்டு வந்து ஏனைய மத வழிபாட்டிற்குள் இந்து வழிபாட்டம்சங்களை திணித்து அந்தந்த பிரதேசங்களின் கலாசாரங்களை மாற்றும் வகையில் பல செயற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. நவீனப் போக்கின் அடியான ஒருமைப்படுத்தல், தேசியம் போன்ற அம்சங்கள் இங்கு வெளிப்பட்டு நிற்பதை உணரலாம். இந்நிலை காந்தாரா திரைப்படத்திலும் காணப்படுவது திரைத்துறையிலும் மத அரசியலின் தாக்கம் எவ்வளவு இந்தியாவில் வேரூன்றியுள்ளது என்பதை நமக்கு உணர்த்துகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



காந்தாரா திரைப்படத்தில் இடம்பெற்ற பூத கோலா சடங்கு மற்றும் வராக ரூபம் பாடல் இத்திரைப் படம் வெளியாகி சில நாட்களில் இந்திய அளவில் பேசு பொருளாகியது. இப்பழங்குடியினரின் இச்சடங்கானது பெரிதும் வெளியுலகத்தால் அறியப்படவில்லை. இதனை காரணமாகக் கொண்டு பலம் வாய்ந்த ஊடக மான திரைப்படத்தினூடு வெளியிடும் போது இச்சடங்கு பார்வையாளரிடம் இலகுவாக சென்றடைந்துவிடும், இது காந்தாரா திரைப்படத்தின் வெற்றிக்கு மேலும் வலுச்சேர்க்கும் என படக்குழு திட்டமிட்டிருந்தது. பொதுவாக திரைப்படத்தில் ஒரு விடயத்தை வெளிப் படுத்தும் போது பார்வையாளர் திரைப்படத்திற்கு புறம் நின்று சிந்திக்காமல் அதை அவ்வாறே ஏற்றுக் கொள்ளும் நிலை திரைப்படங்களில் காணப்படுகிறது. இத்திரைப்படம் எவ்வளவு பாராட்டுக்களைப் பெற்றாலும் சில சர்ச்சைகள் உள்ளாகியமையை நாம் கருத்திற் கொள்ளல் வேண்டும். மேலும் திரைத்துறையில் சிலர் தம்மை பிரபல்யப்படுத்துவதற்கு நாட்டில் இடம்பெறும் உணர்வு பூர்வமான விடயங்களிற்கு கருத்துக்கூறி தமது பெயரையும் பேசுபொருளாக்கச் செய்வதும், திரைப் படத்தைப் பற்றி சர்ச்சையான கருத்துக்களை கூறி அதை இந்திய அளவில் பேசு பொருளாக்கி இந்திய அள வில் அந்த திரைப்படத்தை வெற்றி பெறச்செய்வதும் வழமையான சினிமாப் போக்காக காணப்படுகிறது.

இந்த வகையில் காந்தாரா திரைப்படத்தில் இடம்பெற்ற பூதகோலா சடங்கிற்கு வராக ரூபம் எனத் தொடங்கும் பாடலை பின்னணியாக கொடுத்திருந் தனர். இச்சடங்கு பழங்குடியினரிற்கே உரித்தான சடங் காகும். இச்சடங்கு இடம்பெறும் காட்சிகளிற்கு பின்னணியாக வராக ரூபம் பாடல் வழங்கப்பட்டதன் மூலம் இச்சடங்கை இந்து மத வழிபாடாக காட்ட முயற்சிப்பதாக சர்ச்சைகள் எழுந்தன. வராக ரூபம் என்பது கடவுள் விஸ்ணு எடுத்ததாக கூறப்படும் பத்து அவதாரங்களில் 3வது அவதாரமான கூர்ம/பன்றி அவ தாரத்தை சமஸ்கிருதத்தில் வராகம் என அழைப்பர். இதனால் இச்சடங்கிற்கு பின்னணியாக இந்துக் கடவுள் விஸ்ணுவின் வராக அவதாரத்தினை குறிக்கும் வராக ரூபம் என தொடங்கும் பாடலை பின்னணியாக வழங்கி இவ்வழிபாட்டை இந்து வழிபாடக் காட்ட படக்குழு முயன்றுள்ளது என விமர்சனங்கள் முன்வைக்கப் பட்டன. இதனை நாம் ஆராய்வோமானால் பழங்குடி யினர் தமது தெய்வமாக வழிபடும் மிருகமான பன்றியும் விஸ்ணுவின் அவதாரமாக காணப்படும் பன்றியும் வரலாற்று அடிப்படையில் வேறுபட்டாலும் உயிரின ரீதியாக ஒன்றாக காணப்படுவதாலும் குறிப்பிட்ட தொகையில் வாழும் பழங்குடியினரைத் தவிர வெளி யுலகிற்கு இச்சடங்கு பரிச்சயமற்ற காரணத்தினாலும் இச்சடங்கை வெளியுலகிற்கு இந்து மத வழிபாடாக கட்டமைக்க முயல்வது அப்பட்டமாக வெளிப்படுகிறது.

பலர் இதற்கு எதிராக தமது கருத்துக்களை முன்வைக்க இவ்விடயம் இந்திய அளவில் பேசு பொருளானது. இதையடுத்து காந்தாரா திரைப்படம் மூலமாக பூதகோலா சடங்கை இயக்குனர் ரிக்ஷப் ஷெட்டி இந்து மத வழிபாடாக காட்டியுள்ளார் என இயக்குனர் சேத்தன் குமார் விமர்சிக்க, இவ்விடயம் இந்திய அளவில் பேசு பொருளானது. அவர் மேலும் கூறுகையில் பூதகோலா வழிபாடு இந்துக்களின் வழிபாடு அல்ல. அது பழங்குடியினரின் வழிபாட்டு முறையாகும். இந்து மதம் தோன்ற முன்னரே காடுகளில் வாழ்ந்த பழங் குடியினர் மத்தியில் தோற்றம் பெற்றதே இவ்வழிபாடு ஆகும். இதனை ஆரியர்கள் கபளீகரம் செய்கின்றனர் என்றார். இதற்கு கடும் எதிர்ப்புக்கள் உருவாகி சேத்தன் குமார் மீது இந்திய தண்டணைச் சட்டம் 505(பகை வெறுப்பை ஊக்குவிக்கும் தீய அறிக்கைகள்) பிரிவின் கீழ் பஜ்ரங் தளம் ஒருங்கிணைப்பாளர் சிவகுமாரினால் வழக்குப் பதியப்பட்டது. இதைத் தொடர்ந்து ஸ்ரீ ராமா சேனா தலைவர் பிரமோத் முத்தாலிக் “காந்தாரா படம் இந்துக்களின் கலாசாரத்தை பறைசாற்றுகிறது. சேத்தனுக்கு இந்துக்களின் கலாசாரம், பண்பாடு, பாரம் பரியம் தெரியவில்லை. அவர் ஒரு கடவுள் நம்பிக்கையற்ற இடதுசாரி. நிலத்தின் கலாசாரத்தை விமர்சிக்கும் குழுவை சேர்ந்தவர். சமூகத்தின் அமைதியை கெடுக்க முயற்சிக்கிறார்” என்று கூறியமை மேலும் சர்ச்சையை உருவாக்கியது. இவ்வாறு சேத்தன் குமாரிற்கு எதிரான கருத்துக்கள் முன்வைக்கப்பட்ட அதேவேளை அவரது கருத்திற்கு ஆதரவான கருத்துக்களும் முன்வைக்கப் பட்டன. பட்டியலின அமைப்பினரும், கன்னட எழுத் தாளர் கே.எஸ்.பகவானும் அவரது கருத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

காந்தாரா திரைப்படத்தில் அடுத்த சர்ச்சையாக பேசப்படுவது அதன் இசையாகும். இத்திரைப்படத்தின் பெரு வெற்றிக்குக் காரணம் இசையாகும். அதே நேரம் இத்திரைப்படத்தில் சர்ச்சை ஏற்படக் காரணமாய் அமைந்ததும் இவ்விசையே ஆகும். இத்திரைப்படத்திற்கு பி.அஜெனீஷ் லோக்நாத் என்பவர் இசையமைத்திருந்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தார். இத்திரைப்படத்தில் இடம்பெற்ற "வராக ரூபம்" பாடல் பூதகோலா சடங்கு இடம்பெற்ற காட்சிக்கு உயிரோட்டத்தையும், படத்திற்கு பின்னணி இசைக்காகவும் பயன்படுத்தப்பட்டு ரசிகர்களின் ஆர்வத்தை தூண்ட ஏதுவாய் அமைந்தது. இவ்வாறு பலரின் வரவேற்பை பெற்ற பாடல் மற்றும் பின்னணி இசை 2017ம் ஆண்டு கேரளாவைச் சேர்ந்த தாய்க்குடம் பிறிட்ஜ் நிறுவனம் வெளியிட்ட "நவரசம்" பாடலின் இசையை ஒத்திருந்தமையால் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டு பெரும் பிரச்சினையாக உருவெடுத்தது. நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கினை விசாரித்த நீதிபதி தாய்க்குடம் நிறுவனத்திற்கு சார்பாக தனது தீர்ப்பைக் கூறி "வராக ரூபம்" என்ற பாடலைத் திரைப்படத்திலிருந்து நீக்குமாறு உத்தரவிட்டது. இதைத் தொடர்ந்து திரையரங்குகள் மற்றும் இணையத்தள ஊடகங்கள் என்பவற்றில் திரைப்படம் வெளியிடப்பட்ட போது வராக ரூபம் பாடல் நீக்கப்பட்டது.

தற்காலங்களில் திரைப்படங்களில் இவ்வாறான உரிமைத் திருட்டுக்கள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றமை திரைத்துறைக்கு பாதகமானதொன்றாகவே காணப்படுகிறது. இவை தமது சொந்த முயற்சியில் தனது திறமையை வெளிப்படுத்தும் கலைஞர்களை உள ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் பாதிப்படைய வைக்கிறது. அதிலும் நட்சத்திர அந்தஸ்து பெற்ற நடிகர்கள் மற்றும் இயக்குனர்களின் திரைப்படங்கள் மற்றும் பெரிய தயாரிப்பு நிறுவனங்கள் தமது செல்வாக்கைப் பயன்படுத்தி புதுமுக கலைஞர்களது படைப்புக்களை திருடுவது வழமையாக காணப்படுகின்றது. உண்மையில் ஒருவருடைய படைப்பை அவரது அனுமதி பெற்று பயன்படுத்துவதே முறையானதாகும். ஒரு படைப்பின் உரிமை என்பது முற்று முழுதாக படைப்பாளிக்கே உரியது. இதனைக் கருத்திற் கொண்டு திரைத்துறை செயற்படுமாயின் அனைத்து கலைஞர் களின் படைப்புக்களிற்கும் தகுந்த அங்கீகாரம் கிடைக்க வழிவகுக்கும்.

மேற்படி காந்தாரா திரைப்படத்தின் மீதான இரு சர்ச்சைகளும் பிரதானமாக கவனிக்கப்பட வேண்டியவைகளாகும். இரண்டும் வெவ்வேறு பிரச்சினைகளை தம்முள்ளே கொண்டுள்ளன. ஒன்று பழங்குடி மக்களின் பாரம்பரிய வழிபாடான "பூத கோலா" சடங்கை இந்து மத வழிபாடென காட்ட முற்பட்டமை. இது முற்றும் முழுதான நவீனத்துவ சிந்தனையை நமக்கு உணர்த்துகிறது. புது விடயம் அல்லது பலரும் அறிந்திடாத விடயங்களை பொது ஊடகமொன்றினூடு வெளிக்கொணரும் போது குறிப்பாக திரைப்படத்தில் வெளிப்படுத்தும் போது அதை உண்மையென ஏற்றுக்கொள்ளும் மனநிலை பார்வையாளரிடம் இயல்பாகவே காணப்படுகின்றது. பலர் அறிந்திருந்தாத இச்சடங்கை திரைப்படத்தில் இந்து மத வழிபாட்டின் அம்சமாக வெளிக்கொணரும் போது பார்வையாளர் அதை உண்மையென நம்பும் நிலை இங்கு காணப்படுகிறது. அடுத்த சர்சை தற்காலத்தில் அதிகரித்து வரும் உரிமைத் திருட்டாகும்.

இரு வேறு பிரச்சினைகளாயினும் அவற்றின் உண்மைத் தன்மை பெரிதளவில் அனைத்து மக்களிடமும் சென்றடையவில்லை. இதற்கு காரணம் மக்கள் இத்திரைப் படத்தின் மீது கொண்ட அதிக ஆர்வமே ஆகும். இவ்வார்வமானது இத்திரைப்படம் அவர்களிடையே ஏற்பட்ட உணர்வெழுச்சிகளே காரணமாகும். உணர்வு மக்களின் அறிவை மழுங்கடித்து விடுகிறது என்பதற்கு இத்திரைப்படம் ஒரு சிறந்த உதாரணமாகும். இதுவரை வெளியுலகம் அறியாத பழங்குடியினரின் வழிபாட்டை திரைப்படத்தில் பார்த்த மக்கள் அது தொடர்பாக திரைப்படத்தை தாண்டி அதிகம் சிந்திக்காதது, அவ்வழிபாட்டு முறையையே தவறாகப் புரிந்து கொள்ளும் நிலைக்கு கொண்டு சென்றுள்ளது என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

அதே போல் வராக ரூபம் பாடலை திரைப் படத்தில் பார்த்து இரசித்த மக்கள் அதை தமது தொலைபேசி அழைப்பு இசையாக பயன்படுத்தும் அளவிற்கு அவர்கள் மனதில் பசுமரத்தாணி போல் ஆழமாய் பதிந்து போனது இங்கு குறிப்பிடத்தக்கது. இது அவர்கள் இத்திரைப்படத்தை எவ்வளவு உள்வாங்கி உள்ளார்கள் என்பதை பறைசாற்றுகிறது. இச்சமயத்தில் இவ்விசை இன்னொரு பாடலில் இருந்து திருடப்பட்டது என்பதை அவர்கள் நம்ப மறுக்கின்றனர். அதிலும் "நவரசம்" பாடலை பெரிதளவில் யாரும் கேட்டறியாததால் அதனை உடனடியாக ஏற்க மறுக்கின்ற தன்மை காணப்படுகின்றது. இவ்வாறான இரு சந்தர்ப்பங்களையும் வைத்து நோக்கும் போது திரைப்படத்தை பார்த்து மகிழும் மக்கள் தமது உணர்வைத் தாண்டி அறிவின்பால் உற்று நோக்கின் இவ்வாறு திரைப்படங்களில் காணப்படும் சர்ச்சைகளை உணரமுடியும். இவ்வாறு மக்கள் உணரும் பட்சத்தில் அத்திரைப்படத்தின் உண்மை நிலையை அறிந்து அதற்கான ஆதரவை வழங்கலாம். இதன் மூலம் நேர்த்தியான படைப்புக்களிற்கு தகுந்த அங்கீகாரம் கிடைப்பதோடு அவை கூறும் கருத்துக்களும் மக்கள் மத்தியில் சென்றடையும்.



தெணியானின் "வெளியில் எல்லாம் பேசலாம்" சிறுகதைத்தொகுப்பு வெளியீடு 06.01.2023 அன்று கொற்றாவத்தை பூமகள் ச.சமூக நிலைய பொது மண்டபத்தில் க.பரணீதரன் தலைமையில் நடைபெற்றது. வெளியீட்டுரையை கொற்றை பி. கிருஷ்ணானந்தனும் கருத்துரையை இ.இராஜேஸ்கண்ணனும் நிகழ்த்தினார்கள். சிறப்புரையை ம.நவநீதமணியும் ஏற்புரையை மா.செல்வதாஸ் அவர்களும் நிகழ்த்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காதல் போயிற் சாய்தல்..!

குரு அரவிந்தன்




நாளை அன்றூவின் பிறந்தநாள். இங்கே இருந்து கொண்டு எப்படி அவனை வாழ்த்தலாம் என்று நினைத்தாள். அவனுக்கு வாங்கிய பிறந்தநாள் பரிசையும், பூச்செண்டையும் கொரியரில் அனுப்பிவிட்டு செல்பேசியில் வாழ்த்துச் சொல்லுவோம் என்றுதான் முதலில் நினைத்தாள்.

சென்ற வருடம் வலன்டைன் தினத்திலன்று அன்றூகொடுத்த மலர்ச் செண்டை நினைத்துப் பார்க்க அதுவே அவளுக்குள் ஒருவித கிளுகிளுப்பை ஏற்படுத்தியது. இருவரும் ஒரே இடத்தில் வெவ்வேறு பிரிவில் வேலை செய்தாலும், வேலை விடயமாக அவர்கள் அடிக்கடி சந்தித்துக் கொண்டார்கள். அப்புறம் காபி டின்னர் என்று அவர்களது நட்பு மெதுவாக வளர்ந்தது.

வழமைபோல கன்டீனில் சந்தித்தபோது, "எங்கே ஒரு வாரமாய் ஆளையே காணோம்" என்றான் அன்றூ.

"தெரியும்தானே என்னுடைய வேலை அப்படி, கம்பனி விடயமாய் அடிக்கடி வெளியிடங்களுக்குப் போகவேண்டும். இந்த மாதத்தில் இது இரண்டாவது பயணம். எனக்கென்ன பமிலியா, புதுப்புது இடங்களைப் பார்த்து என்ஜோய் பண்ணுகிறேன்". என்றாள்.

"அதிஸ்டக்காரி, உன்னைப் பார்க்க எனக்குப் பொறாமையாய் இருக்கு" என்றான் அன்றூ.

பேசுவதற்கு அவர்களிடம் நிறையவே இருந்தது. அடிக்கடி சந்தித்ததில் அவர்களுடைய நட்பு நெருங்கி வந்தது. திடீரென வலன்டைன் தினத்திலன்று அவள் சற்றும் எதிர் பார்க்காத நேரத்தில் அவன் மலர்க் கொத்து ஒன்றை அவளிடம் கொடுத்துத் தன் காதலை வெளிப்படுத்தினான். அவள் எதுவும் சொல்ல முடியாமல் இன்ப அதிர்ச்சியோடு அவனைப் பார்த்தாள்.

கலாசார முரண்பாடு அவர்களுக்குள் இருந்ததால், அவளுக்குள் தயக்கம் இருந்தது. வேறுமொழி, வேறுஇனம், வேறுமதம் ஆனாலும் அன்றூ இவளை விரும்பினான். இவளுக்கும் அவனில் ஒருவித ஈர்ப்பு இருந்தது. அவன் ஆண், இவள் பெண் என்ற எதிர்ப்பால் ஈர்ப்புத்தான் அவர்களுக்குள் நட்பை ஏற்படுத்தியதோ தெரியவில்லை. அவனிடம் ஏற்பட்ட ஈர்ப்பை எப்படி வெளியே சொல்வது என்றுதான் இது நாள்வரை தவித்தாள்.

தெரிந்தால் அப்பா கொலையே செய்து போடுவார் என்ற பயம் வேறு அவளுக்கு இருந்தது. அம்மாவை ஓரளவு சமாளிக்கலாம், ஆனால் போதாக்குறைக்குப் பாட்டி ஒன்று, எந்த நேரமும் தொண தொணவென்று எப்படி இதை எல்லாம் சமாளிப்பது என்று சிந்தித்தாள். இனசனமென்று யாருமே ஏற்றுக் கொள்ள மாட்டார்கள் என்ற பயமும் ஒரு காரணமாய் இருந்ததால், இந்த விடயத்தைப் பெரிது படுத்தாமல் மௌனம் காத்து வந்தாள்.

அவள் கனடிய மண்ணில் பிறந்ததால் பெற்றோரின் பிறந்த மண்ணின் கலாசாரத்திற்கும், புகுந்த மண்ணான கனடிய கலாச்சாரத்திற்கும் நடுவே அவள் அகப்பட்டு கொண்டு என்ன செய்வது என்று தெரியாமல் தவித்துக் கொண்டிருந்தாள்.

மறுநாள் ஆபீசில் சந்தித்தபோது அன்றூ அவளிடம் மன்னிப்புக் கேட்டான்.

"என்னுடைய காதலை எப்படிச் சொல்வது என்று தெரியவில்லை. தினந்தினம் காதலுக்காக ஏங்கிக் கொண்டிருப்பதைவிட அதைச் சொல்லிவிட வேண்டும் என்று நினைத்தேன். அதுதான் நேற்று அப்படி நடந்து கொண்டேன். சொறிபோதட்." என்றான்.

அன்றூ பேசும்போது அவனது குரலில் கொஞ்சம் கீச்சுத்தன்மை இருந்ததால் அவனை ஆண்மை யற்றவன் என்று அவளது தோழிகள் கேலிசெய்யும் போதெல்லாம் அவன் மீது அவளுக்கு ஒருவித பச்சாதாபம் ஏற்படுவதுண்டு. அதனாலோ என்னவோ, அவளுக்கும் அவனைப் பிடித்திருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது விருப்பத்தை மெதுவாகச் சினேகிதியிடம் சொன்னபோது, "என்னடீ அவனையா நீ விரும்புகிறாய், அவனொரு கேயடி.." என்றாள்.

இவளின் முகம் சட்டென்று மாறிப்போனதைச் சினேகிதி அவதானித்திருக்க வேண்டும், "ஏய்.. ஐயாம் யோக்கிங்.. சும்மாதான் சொன்னேன்," என்று சொல்லிச் சமாளித்தாள்.

அவளுக்குச் சில இடங்களில் திருமணம் பேசி வந்தபோது அவள் தன்னை ஒருவன் விரும்புவதாகத் தனது விருப்பத்தை தாயிடம் மெல்ல வெளியிட்டாள்.

கலாச்சார வேறுபாடுகள் காரணமாக வீட்டிலே எதிர்ப்பிருந்தாலும், "வாழப்போவது நான்தானே" என்ற அவளது வாக்குவாதத்தை முன்வைத்து இறுதியில் அவள் விருப்பப்படியே எல்லாம் அவசரமாக நடந்து முடிந்தது.

"தேமொழியே நீயவனை மாலையிட வாக்களித்தாய், மையலினாலில்லை
அவன் சாலவருந்தல் சகிக்காமல் சொல்லி விட்டாய்".

தேன் நிலவு, விடுமுறை என்று எல்லாமே முடிந்து மீண்டும் வழமையான வேலைக்குள் மூழ்கிப் போனாள். இந்த ஆறுமாத காலத்தில் இது அவளது மூன்றாவது பயணம்.

புதிதாகத் திருமணம் செய்த ஜோடிகள் என்பதால் அவர்களுக்குள் பிரிவுத்துயர் இருந்தது. நவீன தொலைத் தொடர்பு சாதனங்கள் இருப்பதால் அடிக்கடி கணவனும் மனைவியும் செய்தி அனுப்பிக் கொள்வார்கள். பேசாமல் இந்த வேலையை விட்டு விட்டு வேறு வேலை தேடலாமே என்றுகூட அன்றூ சொல்லிப் பார்த்தான். அவளோ அதைப் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை. இந்த அனுபவம் மட்டுமல்ல, கொழுத்த சம்பளத்தோடு அவளுக்கு வேறு வேலை கிடைக்குமா என்பது சந்தேகமாக இருந்தது.

வந்த வேலை முடிவதற்கு இன்னும் ஒரு வாரம் இருந்தது.

திடீரென அவளுக்கு ஒரு யோசனை வந்தது. அமெரிக்காவில் இந்த வாரம் லோங் வீக்கெண்ட். அதாவது திங்கட் கிழமையும் சேர்த்து மூன்று நாட்கள் விடுமுறை. விமானச் சீட்டு இலகுவில் கிடைத்தால், சேப்பிறைசாய் ரொறன்ரோ போய் வந்தால் என்ன என்று நினைத்தாள்.

திடீரெனப்போய் அவனுக்கு முன்னால் நின்று கொண்டு "ஹப்பிபார்த்டே" சொன்னால் எப்படியிருக்கும்? அவனுக்கு இப்படி ஒரு ஆச்சரியமான இன்பஅதிர்ச்சி கொடுக்க நினைத்தாள். உடனேயே அதற்குரிய ஏற்பாடுகளைச் செய்தாள்.

பொஸ்டனில் இருந்து இரவு புறப்படும் எயர்கனடா விமானத்தில்தான் சீட்டுக் கிடைத்தது. மாலையில் அவனுடன் தொடர்பு கொண்டு பொஸ்டனில் இருப்பதுபோலக் காட்டிக் கொண்டாள். இரவு 9:43க்கு வரவேண்டிய விமானம் தாமதமடைந்ததால், பியர்சன் விமான நிலையத்தை விட்டு அவள் வெளியே வந்தபோது இரவு பன்னிரண்டு மணியாகிவிட்டது.

வாடகை வண்டியை அமர்த்திக் கொண்டு வந்தவள், வீட்டு வாசலில் நிற்காமல் சற்றுத் தள்ளி வண்டியை நிறுத்தி இறங்கிக் கொண்டாள். தன்னிடம் இருந்த சாவியால் மெதுவாகக் கதவைத்திறந்து விளக்கைப் போடாமலே பாதவணியை வாசலில் விட்டு விட்டு, படுக்கை அறைக்குள் நுழைந்தாள்.

அவனது குறட்டைச் சத்தம் கேட்டது. இரண்டு வாரங்கள் தனித்துப்போய் இருந்ததால், பிரிவும், தனிமையும் இருட்டும் அவளது இளமை உணர்வுகளைத் தூண்டிவிட்டு வேடிக்கை பார்த்தது.

மெல்ல அவனது போர்வைக்குள் நுழைந்து காதுக்குள் "ஹப்பிபார்த்டே" சொன்னால் அவனுக்கு இன்ப அதிர்ச்சியாக இருக்குமே என்ற நினைப்போடு போர்வையை மெதுவாக விலக்கி உள்ளே நுழைய முற்பட்டாள்.

மெல்லிய வெளிச்சத்தில் அவள் கண்ட காட்சி அவளுக்கு அதிர்ச்சியாக இருந்தது. என்ன இது, யார் இது? ஒரே போர்வைக்குள் அவனை அணைத்தபடி..!

"ஓ மை கோட்..!" ஒரு கணம் உறைந்து போய் நின்றாள். கை கால் உடம்பு எல்லாமே நடுக்கமெடுத்தன. இன்ப அதிர்ச்சி கொடுக்க வந்தவளுக்கு அவன் பேரதிர்ச்சியல்லவா கொடுத்திருக்கிறான்.

தங்களை மறந்த ஆழ்ந்த தூக்கத்தில் ஒருவரை ஒருவர் அணைத்தபடி அவர்கள் இருந்ததால் எதையும் கண்டு கொள்ளவில்லை. என்ன செய்வது என்று தெரியாமல் திகைத்தவள், சத்தம் போடாமல் மெதுவாக வந்த வழியே அடி எடுத்து வைத்துத் திரும்பினாள்.

எதிர்பாராத அதிர்ச்சியில் உடம்பெல்லாம் வியர்த்தது. என்ன செய்யலாம் என்று சிந்தித்தவளுக்குப் பிறந்த வீட்டு ஞாபகம் வந்தது. வாடகை வண்டி எடுத்துக் கொண்டு பெட்டியோடு பிறந்த வீட்டிற்குக் கிளம்பினாள். வாசல் அழைப்பு மணியை அடித்து விட்டுக் காத்திருந்தாள். யார் என்று பார்த்துக் கதவைத் திறந்த அவர்களுக்கு, "என்ன இவள் திடீரென இந்த நேரத்தில்" என்று ஆச்சரியமாக இருந்தது.

"ஏன்டி நீ பாஸ்டன்ல நிற்கிறாய் எண்றல்லவா நினைச்தேன், என்ன திடீரென்று?" அம்மா ஆச்சரியமாக் கேட்டாள்.

"உங்களை எல்லாம் பார்க்கணும் போல இருந்திச்சு அதுதான் திடீரென கிளம்பி வந்திட்டேன்" என்று சொல்லிச் சமாளித்தாள்.

அப்பாவிற்குச் சந்தேகம். இவள் தன்னுடைய வீட்டிற்குப் போகாமல் இரவு நேரத்தில் அதுவும் தனியாக ஏன் இங்கே வந்தாள்?

காதல் திருமணம் என்பதால் நடந்ததை வெளியே சொன்னால் அவளுக்குத்தான் அவமானம் என்பதால் இரவு தூக்கமின்றித் தவித்தாள். கண் கலங்கியபடி தூங்காமல் விடியும்வரை கிடந்தவளைப் பார்த்த அம்மாவிற்கு ஏதோ தப்பு நடந்திருக்கிறது என்பது புரிந்து போயிற்று.

"என்னாச்சு, ஏன் அழுகிறாய்?" அருகே படுத்திருந்த அம்மா ஆதரவாய் ஆறுதல் சொல்ல, அவள் நடந்ததை மறைக்க முடியாமல் தாயிடம் கொட்டித் தீர்த்தாள்.

"இப்ப என்ன செய்யப் போகிறாய். திரும்பத் திரும்பச் சொன்னேனே கேட்டியா. பிடிவாதமாய் இந்தக் கலியாணம்தான் வேணுமென்று அடம் பிடித்தாய். நீயே முடிவெடுத்து நீயே விரும்பிச் செய்த கலியாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னவென்றாலும் செய்." என்றாள் அம்மா.

அம்மா தொடக்கத்தில் சத்தம் போட்டாலும் யதார்த்தத்தை உணர்ந்து பணிந்து வந்தாள். எதையுமே யதார்த்தமாகச் சிந்திப்பவள் என்பதால் நடந்ததைப் புரிந்து கொண்டாள்.

"உனக்கு ஏற்ற முடிவை நீயே தேடிக்கொள். விவாகரத்துத்தான் வேணுமென்றால் அதையும் செய்ய லாம். அப்பாவிடம் சொல்லி வக்கீலைப் போய்ப் பார்க்கலாம். இல்லை அவனோட சேர்ந்து வாழலாம் என்று நினைத்தால் அதையும் செய்யலாம். மனதைத் தளரவிடாதே. எந்த முடிவென்றாலும் சிந்தித்து நிதான மாய்ச் செய், ஏனென்றால் உன்னுடைய எதிர் காலம் உன்னுடைய முடிவில்தான் தங்கியிருக்கிறது. எந்த முடிவெடுத்தாலும் உனக்காக இந்த வீட்டுக் கதவு எப்பவுமே திறந்திருக்கும்." அம்மாவின் ஆலோசனை அவளைச் சிந்திக்க வைத்தது.

அம்மா சொன்ன புத்திமதியைக் கவனத்தில் கொண்டாள். காதல் போயிற் சாதல் என்பதில் அவளுக்கு நம்பிக்கையில்லை. அப்படி ஒன்றும் முட்டாள் பெண்ணுமல்ல, கணவனைப் பிரிந்திருப்பது, விவாகரத்து செய்வது என்பதில்கூட அவளுக்கு அக்கறையில்லை. அன்றூவைத் தன் வழியிற் கொண்டு வர வேண்டும் என்ற திட்டத்தோடு செயற்பட்டாள். அதற்காகச் சில விட்டுக் கொடுப்புகள், மன்னிப்பு களுக்குக்கூட அவள் தயாராக இருந்தாள்.

மனம் குழம்பிப்போய் இருந்தாலும் அன்றூ நல்லவன்தான் என்ற எண்ணம் அவள் மனதில் இருந்தது. சந்தர்ப்ப சூழ்நிலையால் இளமைப் பருவத்தில் ஏற்பட்ட பழக்கம் காரணமாக அவன் அப்படி நடந்திருக்கலாம். சிகரட் பிடிப்பதுபோல, மது அருந்துவதுபோல இதுவும் இளமையில் அவனுக்கு ஆண்களோடு ஏற்பட்ட ஒரு பழக்கமே. அவன் ஒன்றும் ஆண்மை குறைந்தவனல்ல, முதலில் அவனுடன் அப்படியான தொடர்பு வைத்திருக்கும் கூட்டாளிகளை வெட்டி விடவேண்டும்.

இது வாழ்க்கைப் பிரச்சனை, கவனமாகச் செயற்பட்டால் அதைச் சரி செய்ய முடியும் என்ற நம்பிக்கை அவளது மனதில் துளிர் விட்டது. சூழ்நிலைக்கும் சந்தர்ப்பத்திற்கும் ஏற்ப நாமும் சாய்ந்து கொள்ள வேண்டும், காதல் போயிற் சாதல் அல்ல சாய்தல் என்று மனசுக்குள் தீர்மானித்துக் கொண்டாள். காதலன் இப்படி நடந்து விட்டானே என்பதற்காக அவள் ஆவேசப்பட்டு தப்பான எந்த முடிவும் எடுக்கத் தயாராக இல்லை. காதல் போயிற் சாய்தல்.. சாய்தல்..! என்பதே அவளது முடிவாக இருந்தது.

அவள் ரொறன்ரோவிற்கு வந்து போனதே தெரியாதது போல சூட்கேஸைத் தூக்கிக் கொண்டு பியர்சன் விமான நிலையத்திற்குத் திரும்பினாள். இன்னும் ஒரு வாரம் இருக்கிறது வந்த வேலை முடிவதற்கு, ஆறுதலாகச் சிந்தித்து முடிவெடுப்போம், அவனை இனிமேல் தனது பிடியில் வைத்திருக்க வேண்டும் என்ற முடிவோடு பாஸ்டன் பயணத்தைத் தொடர்ந்தவள் செல்பேசியை எடுத்துப் பார்த்தாள். அன்றூவிடம் இருந்து வந்த பல அழைப்புகள் அதில் பதிவாகியிருந்தன.

●

W.S.Merwin ஐம்பதுக்கு மேற்பட்ட கவிதை, உரைநடை மற்றும் மொழிபெயர்ப்பு நூல்கள் வெளியிட்டவர். 1960களில் போருக்கெதிரான இயக்கத்தில் ஈடுபட்டார். கவிதைக்கான Pulitezer பரிசு (1971), தேசிய நூல் விருது (2005), Tanning பரிசு முதலிய கௌரவங்கள் பெற்ற W.S.Merwin 2010இல் அமெரிக்காவின் 17ஆவது அரசவைக் கவிஞராகக் கௌரவிக்கப்பட்டார்.

## சாகும் ஆசியர்கள்

காடுகள் அழிக்கப்பட்டபின்
அவற்றின் இருள் எஞ்சி இருக்கிறது
பயணியான சாம்பல்
உடைமையாளரை என்றென்றும் பின் தொடர்கிறது
அவர்கள் சென்றடையும் எதுவும் உண்மையில்லை
காலங்கடந்து நிற்கப் போவதுமில்லை
நீர்நிலைகளில் நீந்தும் வாத்துக்கள் போல
ஒரு புதிய கருக்கற் பொழுதை உண்டாக்கியபடி
கிராமங்களின் பேய்கள் வானத்தில் ஊர்கின்றன.

செத்தவர்களுடைய திறந்த கண்களுக்குள்
மழை பெய்கிறது அர்த்தமில்லாத ஒலியை உண்டாக்கியபடி
நிலவு அவர்களைக் காண்கையில்
அவர்கள் ஒரு பொது வர்ணம் பூண்கின்றனர்

இரவுகள் ஊமைக் காலங்கள் போல மறைகின்றன
ஆனால் எதுமே ஆறவில்லை
இறந்தோர் ஊமைக் காயங்கள் போல் மறைய
அவர்கள் குருதி நஞ்சேறிய வயல்களில் சுவறுகிறது
வலியாகிய தொடுவானம் இன்னும் இருக்கிறது
தலைக்குமேலே காலங்கள் ஊஞ்சலாடுகின்றன
வாழும் எதையும் அழைக்காத
கடதாசி மணிகள் அவை

உடைமையாளர் எங்கும் உலவுகின்றனர்
அவர்களுடைய கிரகமாகிய மரணத்தின் கீழ்
மண்டும் புகை போல
நிழல்களுள் அவர்கள் முன்னேறுகின்றனர்
ஒளியில்லாத மெல்லிய சுடர்கள் போல
கடந்த காலம் இல்லாதவர்களுக்கு
அக்கினி மட்டுமே எதிர்காலம்!

ஆங்கிலத்தில் : W.S.Merwin

தமிழாக்கம் : சோ.ப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இ.தனஞ்செயன்

# கவிஞர் முருகு என்கின்ற முருகையா



சரவணமுத்து நீலாயதாட்சி தம்பதிகளின் புதல்வனாக சாவகச்சேரி கல்வயல் பிரதேசத்தில் 30.04.1941 அன்று முருகையா அவர்கள் பிறந்தார். யா/கல்வயல் ஸ்ரீ சண்முகானந்தா வித்தியாசாலையில் ஆரம்பக் கல்வியினையும், யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் உயர் கல்வியையும் கற்று, கல்வித் திணைக்களத்தில் அரச உத்தியோகம் புரிந்தார். திருமணமாகியதன் பின்னர் கொழும்புத்துறை சுவாமியார் வீதியில் வாழ்ந்து வருகின்றார்.

"முருகு", "வயலூர் முருகன்" எனும் புனை பெயர்களால் தன்னை இலக்கிய உலகிற்கு வெளிகாட்டி வந்த திரு.ச.முருகையா அவர்கள் கவிதை, சிறுகதை, கீர்த்தனை, கதைக்கவிதை போன்ற துறைகளில் தன்னை பெரிதும் ஈடுபடுத்திக் கொண்டார். கோவை கேசன் அவர்களைப் பிரதம ஆசிரியராகக் கொண்டு வாரம் தோறும் பிரசுரமான சுதந்திரன் வாரஏட்டில் 1972ம் ஆண்டு இவரது முதலாவது கவிதை வெளிவந்தது. தொடர்ந்து நம் நாட்டில் இருந்து வெளியாகும் ஈழநாடு, வீரகேசரி, தினக்குரல், தினகரன், தினபதி, சிந்தாமணி, நமது ஈழநாடு, உதயன், வலம்புரி, ஈழமுரசு, ஈழநாதம், சுடர் மற்றும் தமிழ்நாட்டில் இருந்து வெளியாகும் திரு.நா.பார்த்தசாரதி அவர்களை ஆசிரியராகக் கொண்டு வெளியாகிய தீபம் மாதஏட்டிலும் இவரது ஆக்கங்கள் வெளிவந்துள்ளன. இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் போயாதினங்களில் (நோன் மதிக் கவியரங்கம்) ஒலிபரப்பி வந்த கவியரங்கத்திலும் கலந்து கொண்டு தன் கவியாற்றலை வெளிப்படுத்தியுள்ளார். பத்திரிகையில் வெளியான கவிதைகள், சிறுகதைகளை தொகுத்து நூல்வடிவமாக்கி வெளியிட்டுள்ளார். இதுவரையிலும் 10 நூல்கள் வெளிவந்துள்ளன. இதில் 05 கீர்த்தனைகள், 03 கவிதைகள், 01 சிறுகதை மற்றும் மறைந்த 98 இசைக் கலைஞர்களின் வாழ்க்கைச் சரித்திரம் என்பன உள்ளடங்கும். குறித்த 10 நூல்களின் சிறு விபரிப்பினை இனிப் பார்க்கலாம்.

### 01. பக்திபாமாலை

முருகையாவின் முதல் நூலாக்கம் இது. 1987ம் ஆண்டு இந்நூல் வெளிவந்துள்ளது. இல 45 சுவாமியார் வீதி, கொழும்புத்துறையில் உள்ள சிவா வெளியீட்டகம் ஊடாக இந்நூல் வெளியிடப்பட்டுள்ளது. 05 ஆரம்பப் பக்கங்களுடன் 29 பக்கங்களை உடையது. ஸ்வர்ணம் பப்ளிசீரிஸ், 125 ஏ புகையிரத நிலைய வீதி யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்திருந்த பதிப்பகத்தில் அச்சிடப்பட்டுள்ளது. விலை 10.00ரூபாய். இந் நூலினை 10.06.1987 அன்று சிவபதமடைந்த தனது மாமனாராகிய கார்த்திகேசு சோமசுந்தரம் அவர்களின் நினைவாக சமர்ப்பித்துள்ளார். இவர் மெய்கண்டான் யாழ் கிளையின் முன்னாள் முகாமையாளர் ஆவார். இந் நூலில் அடங்கியுள்ள பக்திப் பாடல்கள் ஈழநாடு, உதயன், தினகரன் போன்ற நாளிதல்களில் வெளிவந்த பாடல்களின் தொகுப்பாகும்.

கீழ்வரும் 05 தெய்வங்களினை தன் மனதி லிருத்தி அருட் பாக்களை எழுதியுள்ளார். கல்வயல் பெருங்குளம் அருள்மிகு வீரகத்தி விநாயகர், கௌரியம்பாள் சமேத கேதீச்சரநாதன், நல்லை வாழ் பாலகுமாரன், நாமலர் மேவும் நாமகள், கல்வயல் நேரணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வில்லவத்து வைரவர் போன்ற கோயில்களில் உள்ள பிள்ளையார், சிவன், முருகன், கலைமகள், வைரவர் போன்ற தெய்வங்களே அவை. இத் தெய்வங் களுடன் இன்று வரையிலும் தமது வாழ்நாட்களை போற்றி வணங்கி வருகின்றார் என்பதும் குறிப்பிடத் தக்கது. 1980 களின் பிற்பட்ட காலப்பகுதிகளிலே தான் இவர் கீர்த்தனைகள் எழுதுவதற்கு தொடங்கியுள்ளார். இக் காலப்பகுதி யாழ்ப்பாணத்தில் உள்நாட்டுப் போர் இடம்பெற்றுக் கொண்டு இருந்தது. இதனால் இடப் பெயர்வுகளும் நடைபெற்றன. இந்த சூழ்நிலையிலும் முருகையா அவர்கள் நூலுருவாக்கப் பணியில் ஈடுபட்டுக் கொண்டு தான் இருந்தார்.

இந்நூலுக்கான முன்னுரையை நீர்வேலி யினைச் சேர்ந்த இ.முருகையன் அவர்கள் வழங்கி யுள்ளார். இதிலே தமிழ் மொழியும் இசைப்பாட்டும் ஒன்றை ஒன்று தழுவி இசைந்து வளர்ந்துள்ளன என்றும், அடுத்து தேவாரங்கள் பண் இசையுடன் பாடப் பட்டு தமிழர்களுக்கே உரிய இசையாய் வளர்ந்தன என்றும், தமிழிசையானது வடமொழிச் சார்பினாலும் திராவிடமொழி சார்பினாலும் புதியதொரு பரிமானம் பெற்று கர்நாடக கலையாக மலர்ந்தது என்றும் கூறி கின்றார். இவற்றுக்கு தலைமையான வடிவம் கீர்த் தனைகள் என்றும் இப்படியான கீர்த்தனைகளினையே இந்நூலில் முருகையா தந்துள்ளதாக முருகையன் அவர்கள் குறிப்பிடுகின்றார். இசைத்துறையில் பாண்டித்தியம் பெற்றவர்களாலும், பக்கவாத்திய இசை யுடன் இக்கீர்த்தனைகளை கேட்கும்போது இவற்றின் முழுமையான சொரூபத்தை காணலாம் என்பதும் இ.முருகையனின் முன்னுரையில் குறிப்பிடப் பட்டுள்ளது.

**02. உருக்கல்ல**

மீரா வெளியீட்டு (38, வேம்படி வீதி, யாழ்ப்பாணம்) வரிசையில் 18 வது நூலாக 1991 ஆம் ஆண்டு வெளிவந்துள்ளது. ஏ.எஸ்.ஐ பிரின்ரிங் வேக்ஸ், மல்லாகம் இந்நூலை பதிப்பித்துள்ளார்கள். 05 ஆரம்ப பக்கங்களுடன் 69 பக்கங்கள் உள்ளன. வலை 40.00 ரூபாய். இதுவொரு சிறுகதை நூலாகும். 07 சிறுகதை கள் உள்ளடங்கியுள்ளன. 1977, 1978, 1979 காலப்பகுதி யில் ஈழநாடு, சுடர் பத்திரிகையில் வெளிவந்த சிறுகதை களுடன் 1990 அல்லது 1991 பகுதிகளில் நிகழ்ந்த நிகழ்வின் கருப்பொருளை கொண்ட சிறுகதையுடன் மொத்தம் 07 சிறுகதைகள் உள்ளன. இதில் ஆறு சிறுகதைகள் வெளிவந்து 2 தொடக்கம் 14 வருடங்கள் களித்து நூலுருவாக்கம் பெற்றுள்ளது.

07 கதைகளும் 07 விதமான செய்தியை சொல்வ தாகவே உள்ளன. அதுவும் சமூக பிரச்சினைகள் சார்ந்த விடயங்கள். இவை அனைத்தும் சமகாலத்து கால வோட்டத்தை தழுவியதே. இந்நூலுக்கு நாவண்ணன் அவர்கள் முன்னுரை எழுதியுள்ளார். “பூவரசுக்கு வழக்குப் பேசித் தோற்ற “கனகர் அம்மான்”, காலம் மாறிப்போச்சு என்பதன் பிரதிநிதிகளான “பொடியன் கள்”, இயலாமையின் காரணத்தால் தனது இல்ல றத்தையே என்னுமொருத்தியுடன் பகிர்ந்து கொள்ள முடிவெடுக்கும் “வாழ்வைத் தேடி”, மனோ கலங்கிய குட்டையில் மீன் பிடிக்க நினைக்கும் “ராசா அண்ணா”, “புத்தபிரான் ஏன் ஓடுகிறார்” என்பதற்கு விளக்கம் தரும் அநியாய புரத்து 1977ன் அசம்பாவிதங்கள், “கனகத்தின் கண்ணீர்த்” துளிகளுக்குக் காரணமான முதுகெலும் பற்ற கணவன் - துயரால் மடியும் தந்தை கடலை ஆச்சியின் சாபத்திற்குப் பலியான சுப்பையன், நெஞ்சில் ஒரமும் நேர்மைத் திறனும் அற்ற “ஊருக்கல்ல” உபாத்தியாயர் முத்துத்தம்பி அவர்கள் என்று சிறுகதை தலைப்பினை ஓர் வரியில் விமர்சித்துள்ளார். அத்துடன் இதில் வரும் கதாபாத்திரங்கள் வெறு கற்பனையல்ல என்றும் நம்மிடையே உயிருடன் உலவும் பாத்திரங்கள் தான் என்றும் கூறியுள்ளார்.

கனகர் அம்மான் 1977, காலம் மாறிப்போச்சு 1977, வாழ்வைத்தேடி 1978, புத்தபிரான் ஏன் ஓடுகின்றார் 1978, கனகத்தின் கண்ணீர் 1999, கடலை ஆச்சியின் சாபம் 1979, ஊருக்கல்ல 1991 போன்ற தலைப்புகளில் அமைந்த ஏழு சிறுகதைகள் வெளிவந்த ஆண்டின் சமகால பிரச்சினைகளை கூறுவதாகவும் உள்ளன.

**03. ஐங்கரன் பாமாலை**

கீர்த்தனைகளின் தொகுப்பாக வெளிவந்துள்ள இந்நூலினை சரவணாஸ் பிரசுராலயம் (சுவாமியார் வீதி கொழும்புத்துறை) 1993ம் ஆண்டில் வெளியிட்டுள்ளது. 06 ஆரம்ப பக்கங்களுடன் 56 பக்கங்களினை கொண்டுள்ளது. விலை 35.00 ரூபா அச்சுப்பதிப்பு மணி ஓசை அச்சகம். நூலுக்கான அட்டை ஓவியம் ஈழத்தின் பிரபல்யமான ஓவியர் திரு.ஆ.இராசையா.

கொழும்புத்துறை மேற்கில் எழுந்தருளி யிருக்கும் ஸ்ரீ வதிரிபீட மன்றுளாடும் விநாயகர், சாவகச் சேரி கல்வயல் பெருங்குளத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ விரகத்தி விநாயகர், மானிப்பாய் மருதடியில் வீற்றிருக்கும் விநாயகப் பெருமான், சாவகச்சேரி கல்வயலில் வீற்றிருக் கும் வேதவனப்பிள்ளையார், கொழும்புத்துறை கிழக்கு உப்புக்குளத்தில் வீற்றிருக்கும் சந்திரசேகரப் பிள்ளையார் ஆகிய திருத்தலங்கள் மீது பாடப்பட்ட கீர்த்தனைகள்













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளடக்கப்பட்டுள்ளன. 46 தலைப்பில் அமைந்த கீர்த்தனைகளுடன் ராகம், தாளம் என்பனவும் தரப் பட்டுள்ளன. இப் பாடல்களில் சில ஈழநாடு, உதயன், முர சொலி போன்ற பத்திரிகையில் பிரசுரிக்கப் பட்டவையே.

நூலிற்கான அணிந்துரை எழுதியிருப்பவர் யாழ், அண்ணாலை இசைத்தமிழ் மன்றத்தின் செய லாளர் அரியாலையை சேர்ந்த சங்கீதபூஷணம் ச.பால சிங்கம் அவர்கள். கீர்த்தனைகள்யாவும் எளிய நடையில் பத்திரசம் ததும்பும் வகையில் உள்ளதாகவும், மேற் குறிப்பிட்ட ஆலயங்களில் தேர்திருவிழாக் காலங்களில் பாடக்கூடியன என்றும், இசைக் கலைஞர்களால் கச்சேரிகளில் பாடக்கூடியன என்றும் கூறியுள்ளார்.

கொழும்புத்துறை வதிரிபீட விநாயகர் மீது 18 கீர்த்தனைகளும், கல்வயல் வீரகத்தி விநாயகர் மீது 07 கீர்த்தனைகளும், கொழும்புத்துறை சந்திரசேகரப் பிள்ளையார் மீது 03 கீர்த்தனைகளும், மானிப்பாய் மருதடி விநாயகர் மீது 02 கீர்த்தனைகளும், பொதுவாக விநாயகப் பெருமான் மீது 14 கீர்த்தனைகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன. இதில் ஒரு கீர்த்தனையில் யோகர் சுவாமிகள் அவர்களையும் போற்றியுள்ளாளர்.

### 04. நல்லைக் கந்தன் பாாலை

பிரணாஸ் பிரசுராலயத்தின் (சுவாமியார்வீதி, கொழும்புத்துறை) 4வது வெளியீடாக இந்நூல் 1994ம் ஆண்டு வெளிவந்துள்ளது. 51 கீர்த்தனைகளினை இந்நூல் கொண்டுள்ளது. 07 ஆரம்ப பக்கங்களுடன் 61 பக்கங்களை உடையது. மணி ஓசை அச்சத்தில் அச்சிடப்பட்டுள்ளது. விலை 35.00ரூபா.

தமிழ் மன்னர்களின் ஆட்சித் தலைமையகமாக விளங்கிய நல்லூரிலே கோயில் கொண்டருளும் கந்த சுவாமி மீது பாடப்பட்ட 51 கீர்த்தனைகளினை உள்ளடக்கியுள்ளது. இக்கீர்த்தனைகள் நல்லூர் முருகன் ஆலய திருவிழாக் காலத்தில் ஈழநாடு, உதயன், முரசொலி, யுகசக்தி போன்ற பத்திரிகைகளில் வெளி வந்தனவயே. அவற்றின் தொகுப்பே நல்லைக் கந்தன் பாமாலை. அட்டைப்படத்தினை நல்லூரைச் சேர்ந்த ஓவியர் ஆ.இராசையா அவர்களால் வரையப் பட்டுள்ளது. இந்நூலுக்காக இணுவிலைச் சேர்ந்த பிரம்ம ஸ்ரீ ந.வீரமணிஐயர் அவர்களால் ஓர் சிறப்புப் பாயிரம் பாடப்பட்டுள்ளது. எட்டு வரிகளில் இது அமைந் துள்ளது. ஆசிரியரின் தந்தையாராகிய யாழ் கல்வயல் ஸ்ரீ சண்முகானந்தா வித்தியாசாலையின் இளைப்பாறிய அதிபர் அமரர் தி.க.சரவணமுத்து அவர் களுக்கு இந்நூலை சமர்ப்பணம் செய்துள்ளார்.

நூலுக்கான முன் உரையினை நாயன்மார் கட்டினைச் சேர்ந்த திரு.க.சொக்கலிங்கம் (சொக்கன்) அவர்கள் வழங்கியுள்ளார். இதிலே ஆசிரியர் இலக்கியத் துறையில் கவிதையும், சிறுகதையையும் எழுதி தன்னை கவிஞராகவும், எழுத்தாளனாகவும் காட்டியதோடு நின்று விடாது இசைப்பாடல்களையும் தற்போது தந்துள்ளார் என்றும், ஈழத்துப் பக்திப் பாவலர் வரிசையிலே தமக்கென்று குறிப்பிட்ட இடத்தைப் பெற்றுவிட்டவர் என்றும் கூறியுள்ளார். அனைத்து பாடல்களுக்கும் ராகம், தாளம் என்பனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்குறிப் பிடப்பட்ட பத்திரிகைகளில் 1987 தொடக்கம் 1993 வரைவெளிவந்த பாடல்களினை ஒன்றாக தொகுத்து தரப்பட்டுள்ளது. இதில் உள்ள 51 பாடல்களும் நல்லூர் கந்தசுவாமி மீது ஆசிரியர் கொண்டிருந்த பற்றினால் சுவாமி மீது பாடப்பட்டனவயாகும்.

### 05. நாமகள் பாமாலை

சரவணனால் பிரசுராலயத்தின் (சுவாமியார் வீதி கொழும்புத்துறை) வெளியீடாக 1997ம் ஆண்டு 63 கீர்த்தனைகளின் தொகுப்பாக இந்நூல் வெளி வந் துள்ளது. 06 ஆரம்ப பக்கங்களுடன் 73 பக்கங்களினை கொண்டது. மணி ஓசை அச்சகத்தில் அச்சிடப் பட்டுள்ளது. விலை 50.00ரூபா.

கலைகளின் தாய் கலைமகள். ஆயகலைகள் அறுபத்து நான்கினையும் தன்னகத்தே கொண்டுள்ள திருவுருவம். அனைத்து கலைகளெல்லாம் அவளிடமே தோற்றம் பெற்றது. வெள்ளைக் கமலத்தில் வீற்றிருக்கும் வாணியின் திருக்கோலமே பேர் அழகு. இவ்வாறு சரஸ்வதியை வர்ணிக்கும் ஆசிரியர் "பொன்னும் பொருளும் மாடிமனையும் காணியும் புகழும் வேண்டி இப்பாடல்களை யான் பாடவில்லை என்றும் ஞானமும், கல்வியும், கவித்திறனும், இசைப்புலமையும், அருளும் வேண்டியே நாமகள் பாமாலையை தான் செய்துள்ளதாக கூறியுள்ளார். இப்பாடல்கள் ஈழநாடு, உதயன் பத்திரிகை யில் அவ்வப்போது வெளிவந்தவை. அவற்றின் தொகுப் பாக இந்நூல் வெளிவந்துள்ளது. அட்டை ஓவியத்தினை நல்லூரைச் சேர்ந்த ஓவியர் திரு.ஆ.இராசையா அவர்கள் வரைந்துள்ளார்.

அறிமுகவுரையினை யாழ்ப்பாண மத்திய கல்லூரியின் முன்னாள் அதிபர் நல்லூரைச் சேர்ந்த திரு.நாக.சண்முகநாதபிள்ளை அவர்கள் வழங்கி யுள்ளார். துன்பம் நேர்ந்த போது யாழ் எடுத்து இன்பம் சேர்த்த அந்ததக்க கவிலாணன் பரிசாக பெற்ற யாழ்ப் பாண மண்ணில் செவிக்கினிய பாடல்களைத் தந்தோர் பலர். அதிலே கவிஞர் முருகையாவும் ஒருவர். அம்பிகையைச் சரணடைந்தால் அதிகாரம் பெறலாம்.













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருகையா அவர்களும் அவளிடமே சரணடைகிறார். அதனால் தான் அவருடைய நாவில் அவள் நிறைந்து நிற்கின்றாள் என்றும் கூறுகின்றார். கல்வித்திணைக் களத்தில் ஆசிரியர் பணிபுரிவதினாலேயோ கல்விக் கரசியினை மனதிலிருத்தியுள்ளார் என முன்னுரை யாளர் கூறுகின்றார். 63 கீர்த்தனைகளுக்கு ராகம், தாளம் என்பனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. இக் கீர்த்தனைகள் பத்திரிகையில் வெளிவந்த ஆண்டு குறிப்பிடப்பட வில்லை. பொதுவாக கலைமகள் எனும் தெய்வத்தின் மீது இப்பாடல்கள் பாடப்பட்டுள்ளது. எந்த ஆலயம் என்றும் கூறப்பட வில்லை.

**06. மனிதர்கள்**

வாஹினி வெளியீட்டகத்தின் (219, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்) வெளியீடாக 2002ம் ஆண்டு இந்நூல் வெளிவந்துள்ளது. 06 ஆரம்ப பக்கங்களுடன் 132 பக்கங்களை கொண்டுள்ளது. பிள்ளையார் அச்சகத்தில் அச்சிடப்பட்டுள்ளது. விலை 125.00 ரூபா.

இந்நூலில் வெளிவந்துள்ள கவிதைகள் பத்திரிகைகள், சஞ்சிகைகளில் வெளியானவற்றில் நூல் தலைப்பிற்கேற்ப தெரிந்தெடுத்து தொகுத்து வெளியிடப் பட்டுள்ளது. 1973ம் ஆண்டு யாழ்ப்பணத்தில் மாபெரும் தட்டுப்பாடு அல்லது கட்டுப்பாடு நிலவியது. இது கவிஞரின் மனதை பெரிதும்பாதித் துள்ளது என்றுதான் கூற வேண்டும். ஏனெனில் "கண் திறந்து பார் பாணே!" எனும் தலைப்பிலான கவிதை ஒன்றினை யாழ்ப்பாணத்து மக்கள் பாணுக்காக அல்லது ஒரு வேளை உணவுக்காக படும்பாட்டை அழகாக எடுத்துக் காட்டியுள்ளார். காலையும் மாலையும் பாணுக்காக காத்திருப்பதனால் பேக்கறியினை கோயில்களாக ஒப்பிட்டும் கூறியுள்ளார். இக் கவிதை 09.12.1973 அன்று ஈழநாட்டு பத்திரிகையில் வெளிவந்தது. 1978ம் ஆண்டு கிழக்கு மாகாணத்தில் பெரும்புயல் தாக்கியதன் காரணமாக பல உயிர்களும் பலகோடி பெறுமதியிலான உடமைகளும் சேதமாயின. அதனையும் "புயலல்ல! உயிர் உண்ணும் கூற்று" எனும் தலைப்பில் கவிதை யாக்கியுள்ளார். இத் தொகுப்பின் முதலிலும் முடிவிலும் தமிழ் வாழ்த்து இசைப்பாக்களை தந்துள்ளார்.

முகவுரையினை கொக்குவிலைச் சேர்ந்த கவிஞர் சோ.பத்மநாதன் அவர்கள் எழுதியுள்ளார். முருகையா வின் கவிதைகள் எமது சமூகத்தில் கடந்த முப்பதாண்டு வரலாறாகிறது. இயல்பாகவே இவருக்கு தன்னைச் சுற்றி நிகழ்பவற்றைக் கூர்ந்து நோக்கும் இயல்பு காரணமாக நிகழ்வுகளை கவிதையாக உருமாற்றம் செய்கின்றார். மின்வெட்டுக்காலத்தில் விளக்கெரிக்கும் விந்தை, சீதனக் கொடுமை, பாணிற்கு வரிசை, கிழக்கு மாகாணத்தை அழித்த புயல், விலைவாசியேற்றம், தேர்தல் நடைமுறை, சினிமா, மதுபோன்ற பல்வேறு பட்ட சமூக பிரச்சனைகளை கவிதையாக முன்கொண்டு வருகின்றார் என கவிஞர் சோ.பத்மநாதன் அவர்கள் கூறியுள்ளார். இத் தொகுப் பினுள் புதுக் கவிதை மரபிலமைந்த கவிதைகளுடன் குறுங்கவிதைகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன. 130 இற்கும் மேற்பட்ட தலைப்பிலமைந்த கவிதைகள் உள்ளதுடன் ஆங்கில மொழியிலும் ஒரு கவிதையினை முருகையா அவர்கள் தந்துள்ளார்.

**07. சரித்திரத்தினிலே சகோதரிகள் ஐவர்**

வாஹினி வெளியீடா (90, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்) 2008ஆம் ஆண்டு இந்நூல் வெளி வந்துள்ளது. 09 ஆரம்பப் பக்கங்களுடன் 32 பக்கங்களை கொண்டுள்ளது. ஜெயஸ்ரீ பிறிண்டேர்ஸ் அச்சிடப் பட்டுள்ளது. விலை 120.00 ரூபா.

இதனை கதைக் கவிதை நூல் என்று சொல்ல முடியும். இலக்கியத்திலே, சரித்திரத்திலே தன்னைக் கவர்ந்த ஐந்து பெண்களினை பற்றிய கதைகளினை கவிதையாக தந்துள்ளார். மருணீக்கியாரின் அக்கா (திலகவதியார்), அருணகிரிநாதரின் அக்கா (ஆதி லஸ்மி), இலங்கேசனின் தங்கை (ஆழகி, சூர்ப்பநகை), பட்டினத்தடிகளின் அக்கா, ராஜராஜசோழன் அக்கா (குந்தவைபிராட்டியார்) போன்ற ஐவரின் வாழ்க்கை வரலாற்றினை கவிதையாக தந்துள்ளார். வேறு நூல் களில் இருந்து பெறப்பட்ட ஓவியங்கள் இதிலே பயன் படுத்தப்பட்டுள்ளது. மூதறிஞரும் சொக்கன், மயிலங் கூடலூர் பி.நடராஜா, எழுத்தாளர் திரு.செ.யோசப்பாலா போன்றோர் ஆலோசனை வழங்கியுள்ளனர். அதுமட்டு மல்லாமல் இந்நூலுக்கான தகவல்களை தேடும் போது தான்பட்ட கஷ்டங்களையும் கவிஞர் கூறியுள்ளார். "நம்மவர்கள் ஆதிகாலம் தொட்டு நேற்றுவரை தகவல் களை சேகரித்தல், சேமித்தல், வழங்குதல் எனும் முக்கியமானவிடயத்தில் காட்டி வந்துள்ள அலட்சி யத்தையும், அதன் பயனையும் அறியமுடிகின்றது." என்று அவரின் ஆவணப்படுத்தல் ஆதங்கம் வெளிப்படுத்தப்படுகின்றது. ஆனால் மேற்குலகம் இவ் விடயத்தில் சிறப்பாக செயற்படுவதாகவும் கூறியுள்ளார்.

அணிந்துரையினை யாழ்ப்பாணப் பல்கலைக் கழக துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் அவர் வழங்கியுள்ளார். பண்பட்ட தனது வாழ்வினாலும், நிறைவான தன் ஆக்கப்படைப்புக்களினாலும் காலப் பணியாய் இவ் ஆக்கம் வெளிவருகின்றது என்றும் சகோதரிகளால் சகோதரர்களுக்கு ஏற்பட்ட விளைவுகள் தொடர்பாகவும், தனிமனித விழுமியங்கள், உறவுகளின் மேம்பாட்டிற்கும் வழிகாட்டியாகும் என்பது திண்ணம் என்றவாறும் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் அவர்கள் அணிந்துரையிலே குறிப்பிட்டுள்ளார். வாழ்த்துறையினை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா அவர்கள் வழங்கி யுள்ளார். சரித்திரத்தில் இடம்பிடித்த ஐவர் தொடர்பாக தாம் நினைத்ததை சொல் விரும்பியதை அழகியல் அம்சத்துடன் சொல்லி இருக்கின்றார் என்றும் கதை கேட்கும் கதை படிக்கும் பழக்கமுள்ளவர்களுக்கு முருகையாவின் இக்கவிதை தொகுப்பு சிறந்தது என்றும் கூறியுள்ளார். "அக்காவின் அருட்துணையால் மருணீக் கியார் உயர்ந்தார், அக்காவின் தியாகத்தினால் அருண கிரியார் சிறந்தார், தங்கையின் கெடுமதியால் இலங் கேசன் இறந்தார், பட்டினத்தாரின் அக்கா சுட்டளித்த அப்பத்தால் எழிலான ஊர்முற்றும் எரிந்து அழிந்து அக்காவின் அரவணைப்பில் மாமன்னர் வாழ்கின்றார்" என்றவாறு முடிவுரையினை தந்துள்ளார்.

**08.அருள்மிகு வாரியப்பர் பாமாலை**

வாஹினி வெளியீடாக (90, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்) 2012ம் ஆண்டு வெளிவந்துள்ளது. 12


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்ப பக்கங்களுடன் 137 பக்கங்களையும் உடையது. அச்சுப்பதிப்பு ஜெயஸ்ரீ அச்சகத்தில் (நீராவியடி, யாழ்ப்பாணம்) அச்சிடப்பட்டுள்ளது. விலை 300.00ரூபா.

சாவகச்சேரி நகருக்கு தென்மேற்குத் திசையிலே இத்திமர நிழலில் அமர்ந்து அருளுகின்ற அமிர்த பாஷிணித் தாயார் உடனுறை வாரிவனநாதர் அரும்புகழ் பாடுகின்றதுமான 125 கீர்த்தனைகளை உள்ளடக்கியுள்ளது. என்னுரையிலே கவிஞர் அவர்கள் காணி நிலம் வேண்டும் அதிலே தென்னைமரம் வேண்டும் என்று பராசக்தியிடம் பாரதியார் கேட்பது போல் இல்லாமல் வினைநீக்கம், பிறவிப்பிணி அறுத்தல், மும்மலநீக்கம் போன்றவையே ஊடபொருளாக உள்ளது என்றும் கூறியுள்ளார். 125 கீர்த்தனைகளில் 30 கீர்த்தனைகள் அமிர்தபாஷிணித் தாயார் மீது பாடப்பட்டுள்ளது. 70 ஆண்டுகளாக வாரியப்பர் பெருமானின் மெய்த் தொண்டராக வாழ்ந்த தனது தகப்பனாராகிய அமரர் திரு.க.சரவணமுத்து அவர்களுக்கு இன் நூல் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இன்று சாவகச்சேரி சந்தை அமைந்துள்ள இடத்திலேயே இக்கோயில் முன்பு காணப்பட்டது. பின்னர் இப்பிரதேசத்தைக் கைப்பற்றிய போத்துக்கேயர் முற்றாக இடித் தழித்தனர். விக்கிரகங்களும் உடைக்கப்பட்டன. சில வற்றை அயலவர்கள் எடுத்துச் சென்று தமது வீட்டு நிலத்தில் புதைத்து வைத்தனர். இவ்வாறு புதைக்கப் பட்ட விக்கிரகங்களில் ஒன்றே பாற் காலத்தில் வெளிப்படுவதை தொடர்ந்து அவ்விடத்தில் சிறியதாக ஓர் ஆலயம் அமைக்கப் பட்டது. இதுவே வாரிவனநாதர் ஆலயமாக பிற் காலத்தில் மாற்றம் பெற்றது.

அணிந்துரையினை சாவகச்சேரி இந்துக் கல்லூரி இசை ஆசிரியை திருமதி தருமலிங்கம் சௌந்தரவல்லி அவர்கள் வழங்கியுள்ளார். இதில் சுமார் 500 இற்கும் மேற்பட்ட கீர்த்தனைகளை கவிஞர் முருகு அவர்கள் பாடியதன் காரணமாக தமிழிசைக்கு வளம் சேர்த்துள்ளார் என்பதுடன் 40 பாடங்களுக்கு மேலாக கவிதை, சிறுகதை, கீர்த்தனைகளை ஆசிய துறைகளில் தனது எழுத்து திறமைகளை திறம்படக் காட்டியுள்ளாரர் என்றும் கூறியுள்ளார்.

**09. பாடிப் பறந்த குயில்கள்**

வாஹினி பிரசுராலயத்தின் (45, சுவாமியார் வீதி, கொழும்புத்துறை) வெளியீடாக இந் நூல் 2016ஆம் ஆண்டு வெளிவந்துள்ளது. XIV ஆரம்ப பக்கங்களுடனும் 303 பக்கங்களை கொண்டுள்ளது. அச்சுப் பதிப்பு ஜெயஸ்ரீ பிறிண்டேர்ஸ் (பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்)

இந்நூலில் மறைந்த 98 ஈழத்து இசைக் கலைஞர்களின் இசை வாழ்க்கை வரலாறு தொகுத்து தரப்பட்டுள்ளது. வாய்ப்பாட்டு, வயலின், வீணை, பரதம், தவில், நாதஸ்வரம், ஆர்மோனியம் போன்ற துறை களினை சார்ந்தோர் இடம் பிடித்துள்ளனர். இக் கலைஞர்கள் வெளி உலகிற்கு தங்களை வெளிக் காட்டிக் கொள்ளாதவர்கள். 2004 ஆம் ஆண்டு முதல் தான் கேள்விப்பட்ட இசைகலைஞர்களின் பிரதேசத் திற்கு சென்று நேரடியாகவே தகவல்களை திரட்டியுள்ளார் முருகையா அவர்கள். இவ்வாறான சந்தர்ப்பத் தில் பல இடர்பாடுகளையும், சவால்களையும் சந்தித்துத் தான் இசைக் கலைஞர்களின் தகவல்களினை பெற்றுள்ளார். கலைஞர்களின் புகைப்படங்களினை பெறுவதில் கூட பல கசப்பான அனுபவங்களினை பெற்றுள்ளார். இசைக் கலைஞர்களின் வாழ்கை வரலாற்றினை பதிவு செய்து அதனை ஆவணப்படுத்தி எதிர்கால சந்ததியினரும் அறியும் வண்ணம் செய்த வாறே இந்நூல் உருவாக்கத்தின் நோக்கம் என்றும் நூலாசிரியர் கூறுகின்றார். குறித்த 98 இசைக் கலைஞர் களின் இசைப் பயணங்களை மட்டுமே தான் பதிவு செய்துள்ளதாகவும் அவர்கள் தொடர்பான இசைப் பணிகள் பற்றி ஆராய்வது தற்போதைய இசைக் கலைஞர்களின் பணியென்றும் கூறியுள்ளார்.

இந் நூலுக்கான முன்னுரையினை பேராசிரியர் என்.சண்முகலிங்கன் அவர்கள் வழங்கியுள்ளார். கல்விசார் நிறுவனங்கள், பண்பாடு அமைப்புக்களின் முதன்மைப் பணியாக உள்ள இதனைத் தனியொரு மனிதராக முருகையா அவர்கள் செய்து முடித்துள்ளார் எனவும், இதில் இடம் பெறும் கலைஞர்களின் குடும்பப் பின்னணி, சமூகச் சூழல், பொருளாதார நிலை, தொழில வாய்ப்பு, இசை ஆர்வம், ஞானம் என்பவற்றின் அடிப் படையில் ஒற்றுமைகளையும் வேற்றுமைகளையும் காணலாம் என்றும் கூறியுள்ளார். நயப்புரையினை திரு.செ.ஜோசப் பாலா அவர்கள் வழங்கியுள்ளார் கலைஞர்கள் என்ற முத்துக்களைச் சுழியோடித் தேடி எடுத்த முத்தாகப் பாடிப் பறந்த குயில்கள் வெளி வந்துள்ளது என்றும் பெறுமைக்கும் எல்லை உணடு. ஆனால் முருகுவின் முயற்சிக்கு எல்லை இல்லை என்றும் “நண்பனின் நயப்புரை” என்று வழங்கிய நயப்புரையில் கூறியுள்ளார். கவிதை, பாமாலை, சிறுகதை போன்றவற்றில் ஆர்வம் கொண்டு அத்துறைகளில் நூல்களினைத் தந்த முருகையா அவர்கள் இசை துறையில் அவருக்கு இருந்த அந்த ஆர்வம் காரணமாக ஈழத்தின் 98 இசை கலைஞர்களின் வாழ்கையினை உள்ளடக்கிய வரலாற்று நூலினையும் தந்துள்ளார்.

**10. கிழக்கும் மேற்கும்**

வாஹினி பிரசுராலயத்தின் (90 மணிக்கூட்டுக் கோபுர வீதி) வெளியீடாக 2019ம் ஆண்டு இந் நூல் வெளி வந்துள்ளது. XVII ஆரம்ப பக்கங்களுடன் 214 பக்கங்களை கொண்டுள்ளது. அச்சுப்பதிப்பு ஜெயஸ்ரீ அச்சகம்.

இது ஒரு ஒப்பீட்டுக் கவிதை நூல். திரு.முருகையா அவர்களின் சிந்தனையில் தமிழ் மூதாட்டி ஔவையாருக்கு அதியமான் அதிசய நெல்லிக் கனி கொடுத்த நிகழ்வு நினைவில் வந்தது. பின்னர் கிரேக்க பேறிஞர் சோக்கிரட்டீசுக்குக் கிரேக்க ஆட்சி யாளர்கள் நஞ்சு கொடுத்துக் கொன்ற நிகழ்வும் நினைவில் வந்தது. கிழக்கிலும் மேற்கிலும் நடந்த இரு வேறு நிகழ்வுகளை ஒப்பீட்டு “ஔவையார் - சோக்கிரட்டீஸ்” என்னும் ஒப்பீட்டுக் கவிதையை உருவாக்கினார். நாளேடுகளில் இக் கவிதைகள் வெளிவரும் காலங்களில் அதற்கு பொருத்தமான ஓவியங்களை திரு.சிவசுப்பிர மணியம் (ரமணி) அவர்கள் வரைந்து கொடுத்துள்ளார். கவிதைகள் கையெழுத்துப் பிரதிகளாக இருந்த வேளை கவிஞர் இ.முருகையன், புலவர் ம.பார்வதிநாதசிவம், மூதறிஞர் சொக்கன் போன்றோர் கவிஞருக்கு ஆலோசனை வழங்கியுள்ளனர். 16 தலைப்புக்களில் ஒப்பீட்டுக் கவிதைகள் அமைந்துள்ளன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அணிந்துரையினை பேராசிரியர் எஸ்.சிவலிங்க ராஜா அவர்கள் வழங்கியுள்ளார். முருகு அவர்கள் வரலாற்று நோக்கிலும் இலக்கிய நோக்கிலும் கிழக்கையும் மேற்கையும் ஒப்பிட்டுள்ளார். இந்த ஒப்பீட்டின் உட்கிடையாகச் சமயம், சமூகம், அரசியல், பண்பாடு போன்ற துறைகளினை காண முடிகின்றது. தமது கருத்து நிலை அடித்தளத்திலே நின்றே இந்த ஒப்பீட்டுக் கவிதையினை முருகு துணிந்து ஒப்பீட்டு செய்து வெற்றி பெற்றுள்ளார் என்றும் அணிந்துரையினிலே குறிப்பிட்டுள்ளது. நயப்புரையினை பேராசிரியர் என்.சண்முகலிங்கன் அவர்கள் வழங்கியுள்ளார். அதிலே முருகுவின் சமூக மனத்தினை வெளிப்படுத்தும் ஒப்பியல் நூலாகவே இந்நூல் அமைந்துள்ளது. என்றும் ஆழமான தேடல், மனித நேயம், மனிதப் பொதுமை போன்றவையே இந்நூலுக்கான மூலதனம் என்றும் நயப்புரையிலே குறிப்பிட்டுள்ளது.

மரபு மாறாமல் கவிதை இயற்றுவது முருகையா அவர்களிற்கு கைவைந்த கலை. தன் ஆத்மதிருப்பத்திக்காகவே கவிதைகளை உருவாக்குகின்றார். நாடு கடந்தும் இவரது கவிதைகள் புகழ்பெற்றன. உதாரணமாக 1981ம் ஆண்டு 05வது உலகக் கவிஞர்களின் மாநாட்டில் டாக்டர் வா.மு.சேதுராமன் அவர்களால் பிரசுரிக்கப்பட்ட "Tamil Poets today" எனும் கவிதைத் தொகுப்பில் இவரது கவிதை ஆங்கில மொழிக்கு மொழிபெயர்க்கப்பட்டு பிரசுரமாகியுள்ளது.

2003ம் ஆண்டு வலம்புரி பத்திரிகையின் மூன்றாம் ஆண்டினை முன்னிட்டு மூத்த பத்திரிகையாளர் அமரர் சி.செல்லத்துரை அவர்களின் ஞாபகார்த்த சிறுகதைப் போட்டியில் பங்குபற்றியதற்காக பாராட்டி கௌரவிக்கப்பட்டார். 2011ம் ஆண்டு உதயன் பத்திரிகையின் 25வது ஆண்டு கொண்டாட்ட நிகழ்வில் தமது பத்திரிகையில் தொடர்ச்சியாக கவிதைகளை வெளியிட்டு பத்திரிகையின் சிறப்பிற்கும், வளர்ச்சிக்கும் ஆற்றிய சேவையினை பாராட்டி கௌரவிக்கப்பட்டுள்ளார். 2015ம் யாழ் ரத்னா விருதையும் 2021ம் யாழ் முத்து விருதையும் பெற்றுக் கொண்டார். 2022ம் ஆண்டு HUDEC CARITAS நிறுவனத்தினர் தமிழ் இலக்கியத்துறைக்கு பெருமை சேர்க்கும் பல கலை இலக்கிய நூல்களை தந்தமைக்காக இலக்கிய செம்மல் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார். இது வரையிலும் 10 நூல்கள் வெளிவந்துள்ள போதும் மேலும் 11 நூல்கள் தற்சமயம் முருகையா அவர்கள் கையெழுத்துப் பிரதிகளாக வைத்துள்ளார். அவற்றை அச்சுப் பதிப்பு செய்யும் முயற்சியிலும் ஈடுபட்டுள்ளார். அவை பின்வருமாறு

01. அருள்மிகு கௌரீசர் பாமாலை (260 கீர்த்தனைகள்)
02. பரமு குஞ்சியப்பு சிறுகதைத் தொகுப்பு (12 சிறுகதைகள்)
03. பாத்தமிகள் கவிதை தொகுப்பு (100 கவிதைகள்)
04. அருள்மிகு கோணேசர் பாமாலை (101 கீர்த்தனைகள்)
05. தியாகச் சிறுவர்கள் ( கவிதை)
06. எத்தித்திருடுமிந்தக் காக்கை (காக்கை பற்றிய கவிதைகள்)
07. நீங்கள் நாவலா? நாணலா? (கவிதைத் தொகுப்பு)
08. பத்தினியர் பதின்மர் (கதைக் கவிதைகள்)
09. அருள்மிகு வாலாம்பிகா உடனுறை வைத்தீஸ்வரப் பெருமான் (கீர்த்தனைகள்)
10. அருள்மிகு வண்ணப் பெருமாள் பாமாலை (கீர்த்தனைகள்)
11. வண்ணை அரசடி விநாயகர் பாமாலை (கீர்த்தனைகள்)

# வில்லரசன் கவிதைகள்

## குருசேத்திர நாட்கள்

குருசேத்திரத்தில்
தலைகளைத் தவிர
அத்தனையும் இழக்கப்பட்டும்
முடிவின்றித் தொடர்கிறது
வாழ்வுக்கான போர்

சில தருணங்களில்
முதுகில் மட்டுமில்லாமல்
மனங்களிலும்
இறக்கப்படுகின்றன
துரோக அம்புகள்..

என் காயங்களில் கொப்பளிக்கும்
நிணங்களின் சூட்டில்
சுவையாற்றுகின்றன
எதிரிகளின் கத்திகள் ..

புதைந்து போன என் தேரின்
சக்கரங்களை
சிதைத்தழித்துவிடவென்று
முன்னேறுகின்றன
கொடுங்கரிகள்...

ஓ !
இப்போதுதான்
ஞாபகம் வருகிறது

யுத்தம் ஆரம்பித்து
இருபத்துநான்கு
வருடங்களாகியும்
இன்னமும்
ஒலிக்கவில்லை
எனக்கான கீதை மட்டும் .



## நாடொன்றின் ஒப்பாரி

காலம் உடைந்து துண்டு
துகள்களாய் மிதந்து
கொண்டிருந்த நாளில்
புதிய நம்பிக்கைகளைச் சுமந்து
அவர்கள் வந்தனர்...

சுருங்கிப் போயிருந்த
இரைப்பைகளின் மௌனத்தை
டாலர்களின் ஓசையால்
கலைத்து போட்டனர்.

எலும்புக் கூடுகள் உயிர் பெற்றதும்
தாம் பங்கிட நினைத்ததைப்
பட்டியல் போட்டனர்.

தலையினை ஒருவன்
வெட்டி எடுத்தான்.
கால்களை மற்றவன்
பிரிக்க முயன்றான்
அயல்வீட்டுக்காரன்
குடற்கறி என்றான்.

பாகங்கள் பிரிக்கப்பட்ட
மயானப் பட்டறையில்
இன்னும் மிச்சமாய் இருந்தது
உணவுக்காய் சுகந்திரத்தை தொலைத்த
நாடொன்றின் ஒப்பாரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூச்சு

மலரன்னை



வானம் மப்பும் மந்தாரமுமாக இருந்தது. ஏதோ அலுவலாக வெளியே வந்த கோமதி, இருண்டு போய் கிடந்த சுற்றுப்புறத்தைக் கண்ணுற்றதும் வாய்விட்டு புலம்பத் தொடங்கினாள்.

"இண்டைக்கு சரஸ்வதி பூசையும் அதுவாய் வாரமெல்லாம் இருண்டு போய்க் கிடக்குது. எக்கணம் நல்ல மழை கொட்டி எல்லாத்தையும் சீரழிக்கப் போகுது போல"

வெளிக்கூடத்தில் சாய்மனையில் சாய்திருந்து பத்திரிகையைப் புரட்டிக் கொண்டிருந்த கதிரேசனது காதுகளில் மனைவியின் வார்த்தைகள் வந்து மோதின. மனைவியை ஆற்றுப்படுத்தும் நோக்குடன் அவர் வாய்திறந்தார்.

"ஏனப்பா கோமு! நீர் என்ன சரஸ்வதி பூசையை முற்றத்திலையே செய்யப் போகிறீர். வீட்டுக்குள்ள... அதுவும் சுவாமி அறைக்குள்ளதானே பூசையை செய்யப் போறம். மாரி காலமெண்டால் மழை பெய்யத்தானே செய்யும். அதுக்கேன் வருத்தப்படுறீர்?"

கோமதி தணிந்து வந்தாள்.

"அதுக்கில்லையப்பா. இண்டைக்கு சபேசன் பிள்ளையளைக் கூட்டிக் கொண்டு வாறனெண்டவன். மழை பெய்தால் பிள்ளையள் நனைய வேண்டி வரும். அது தான் யோசிக்கிறன்"

சபேசன் அவர்களுடைய இளைய மகன். குடும்பத்தோடு வெளிநாட்டிலிருந்து வந்து மாமியார் வீட்டில் தங்கியிருக்கிறார்கள். அடிக்கடி வீட்டுக்கு வந்து போவார்கள்.

"மழையெண்டால் அவை பஸ்ஸில வராமல் ஒரு ஆட்டோவை பிடிச்சு வரத்தெரியாதே. உந்த விசர் யோசனைகளை விட்டிட்டு நீர் போய் வேலையைக் கவனியும்"

கதிரேசன் மீண்டும் பத்திரிகையில் மூழ்கிப் போனார்.

உள்ளே போன கோமதி பரபரப்புடன் அவர்களது சமையல்காரியை அழைத்தாள்.

"யோகா! பிள்ளை யோகா!"

அடுப்பில் எதையோ வதக்கிக் கொண்டிருந்த யோகா, கையில் எண்ணெய்க் கரண்டியுடன் வந்து எட்டிப்பார்த்தாள்.

"நேரகாலத்தோட சமையல் வேலையை முடி பிள்ளை. அப்பதான் பூசைக்கான ஆயத்தங்களைக் கவனிக்கலாம்."

அம்மாவின் பேச்சு யோகாவிற்கு ஆச்சரியத்தைக் கொடுத்தது. "என்ன அம்மா இண்டைக்கு இவ்வளவு அமர்க்களப்படுறா."

ஒருவாறு பத்து மணிக்கே சமையலை முடித்து விட்டாள் யோகா. அம்மா அவளைச் செய்யச் சொன்ன உணவு வகைகள் அவளுக்கு மலைப்பைத் தந்தன.

"அம்மா! என்னால தனிய இவ்வளவையும் செய்ய முடியும் என்று நான் நம்பேல்ல"

அம்மா ஒரு புன்முறுவலை உதிர்த்து விட்டு சொன்னாள்.

"இப்ப மகளும், மருமகளும் பிள்ளைகளோட வந்திடுவினம். அவை உனக்கு உதவி செய்வினம். நீ பயப்பிடாத பிள்ள."

யோகாவிற்கு இப்பதான் சற்று நிம்மதியாயிருந்தது. அம்மாவின் மகள் சரளாவை யோகாவுக்கு தெரியும். யாழ்ப்பாணத்தில் ஒரு பெரிய பாடசாலையில் ஆசிரியராக இருக்கிறாள். அவளுக்கு ஆண் ஒன்றும் பெண் ஒன்றுமாக இரண்டு குழந்தைகள்.

ஆனால் அம்மாவின் மருமகளை அவள் இதுவரை கண்டதில்லை. வெளிநாட்டிலிருந்து விடுமுறையில் வந்திருப்பதாகக் கேள்வி. அவளைப் பற்றி மேலதிக விபரம் எதுவும் அவளுக்குத் தெரியாது.

திடீரென அவர்கள் வீட்டில் ஒரு பரபரப்பு. குழந்தை குஞ்சுகளின் ஆரவாரக் குரலினால் வீடே அதிர்ந்தது. புதினம் அறியும் ஆவல் உந்தித்தள்ள யோகா மெதுவாக ஹோலினுள் எட்டிப் பார்த்தாள்.

"கலை, இசை இஞ்சை ஓடி வாங்கோ"

அம்மா நீட்டிய கைகளுக்குள் அந்த இரு குழந்தைகளும் ஓடி வந்து அவளைக் கட்டிக் கொண்டன. "அப்பம்மா!" ஏக குரலில் அவளை அழைத்தவாறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆளுக்கொரு கன்னத்தில் முத்த மிட்டனர். அம்மாவின் முகம் பூரண நிலவாக ஒளிர்ந்தது. வாழ்க்கையில் நாம் இன்பம் என்ற பதத்திற்கு கருத்து தேடுகிறோம். இப்படி யான ஒரு சந்தர்ப்பத்தில் தான் அதன் முழுமையான மகிமை எம் உணர்வுகளில் ஒன்றிப் போகிறது. யோகாவுக்கு இந்த உண்மை புரிந்ததோ என்னவோ அந்தக் குழந்தைகள் மீது பதித்த கண்ணை மீடடெடுக்க முடியாமல் ஒரு கணம் திணறியே போனாள். அத்தனை அழகான சுட்டிக் குழந்தைகள் பத்து, பன்னிரண்டு வயது மட்டில் மதிக்கலாம். யோகா ஒருவாறு தன்னை சுதாகரித்துக் கொண்டு வேலையைக் கவனிப்பதற்காக விரைந்து சமையலறையை நோக்கி நடந்தாள்.

அவளது எண்ணம் முழுவதையும் அந்தக் குழந்தைகள் நிறைத்திருக்க, அவளது கைகளோ தேங்காயைத் துருவுவதில் ஈடுபட்டுக் கொண்டிருந்தன. அம்மாவும் மருமகளும் சமையலறைக்குள் வந்து கொண்டிருந்தார்கள்.

"மாமி! முதல்ல பொங்கலை வைப்பமோ?"

மருமகள் கேட்டாள்.

"இல்லை வாணி. மோதகத்தை முதல்ல அவிப்பம்"

அம்மா சொல்லி வாய்மூடமுன் யோகா, பயறு அவித்து வைத்த பாத்திரத்தை எடுத்து அவர்கள் முன் வைத்தாள். துருவிய தேங்காய்ப்பூவையும் சர்க்கரைப் பாத்திரத்தையும் எடுத்துக் கொடுத்த போது அம்மா சொன்னாள்.

"இது தான் யோகா. என்னுடைய விசுவாசமான பிள்ளை. எனக்கு எது வேணுமோ அதைத் தானே செய்யும் பக்குவம் இவளுடையது"

அம்மா உள்ளீட்டைக் குழைத்துக் கொடுக்க, யோகா வெளிமாவைக் குழைத்து உருட்டியெடுத்து வைத்தாள். வாணி மளமளவென்று மோதகத்தைப் பிடிக்க, யோகா அவற்றை அவித்து இறக்கினாள். சொற்ப நேரத்தில் வேலை முடிந்தது.

"பார் மணியும் பன்னிரண்டாச்சுது. இன்னும் சரளா குடும்பத்தைக் காணேல்லை."

மகள் வந்து சேரவில்லை என்ற ஏக்கம் அம்மாவுக்கு.

"சரஸ்வதி பூசை பின்னேரம் தானே. அது தான் அவ ஆறுதலாய் வரலாம் என்று இருக்கிறாவாக்கும்."

வாணி சமாதானம் சொன்னாள்.

யோகா நனைய வைத்திருந்த உளுத்தம் பருப்பைக் கழுவிக் கொண்டிருக்க, வீட்டில் பெரிய ஆரவாரம். என்ன ஏதென்று எட்டிப்பார்த்தால்... சரளா குடும்பத்தோடு பிரசன்னமாகியிருந்தாள். இருவீட்டுக் குழந்தைகளும் மகிழ்ச்சி பொங்க ஓடியாடி விளையாடத் தொடங்கினார்கள்.

யோகா கழுவிக் கொடுத்த உளுந்தை சரளா மிக்ஸியில் போட்டு அரைக்க, வாணி வெங்காய் மிள காயை நறுக்க கோமதி மாவைக் குழைத்து வடை களாய்த் தட்டிப் போட, யோக அவற்றை சுட்டு எடுத் தாள். ஆளும் பேரும் வேலை செய்தால் அலுப்பிருக் காது என்று சும்மாவா சொன்னார்கள்.

நேரமும் மதியமாயிற்று, கோமதியின் கட்டளைப்படி மதிய உணவை மேசையில் கொண்டு போய் வைத்தாள், யோகா. அவரவர் தங்களது உணவை தாங்களே பரிமாறிக் கொண்டனர். சரளாவின் பிள்ளை கள் இருவரும் யோகாவிடம் வந்தது "அள்ளி சாப்பிடு வதற்கு ஸ்பூன் வேணும்" என்று கேட்டு வாங்கிப் போயினர், வாணியின் பிள்ளைகளோ... கையால குழைத்து சாப்பிட்டாத்தான் ருசியாயிருக்கும் என்று சொல்லி அள்ளிச் சாப்பிட்டனர்.

சாப்பிட்டு முடிந்ததும் வாணியின் மகள் இசை யோகாவிடம் வந்தாள்.

"ஆன்ட்டி! கத்தரிக்காய் குழம்பு நல்ல றேஸ்ற். நீங்க தானே சமைச்ச நீங்க?"

குழந்தையின் பாராட்டைக் கேட்டதும் யோகாவுக்கு தலைகால் தெரியாத புளுகம்.

இதற்கிடையில் வாணியின் மகன் கபிலன் வந்தான்.

"ஆன்ட்டி! பாயாசம் சூப்பர். நான் இரண்டு கப் குடிச்சநான்"

பிள்ளைகளின் மனம் உவந்த பாராட்டு யோகாவை எங்கோ உச்சத்திற்கு பொண்ணடு போய் விட்டது. அவள் பெற்றெடுத்த பிள்ளையும் ஒரு நாள் இப்படி நடந்து கொண்டவன் தான். ஆனால்... இன்று அவன் அவளை விட்டு நெடுந்தூரம் போய்விட்டான்.

கண்களில் துளிர்ந்த நீரை சுண்டியெறிந்தாள், யோகா. கூடவே மனக்கவலையையும் தான் "நடந்தவை நடந்து முடிந்தவையாக இருக்கட்டும். இனி நடக்கப்போவதை எதிர்கொள்ள எம்மைத் தயார் படுத்திக் கொள்வோம்" இதுவே அவளது கொள்கை.

எல்லோரும் சாப்பிட்டு முடித்து விட்டார்கள். யோகா ஒரு தட்டில் உணவைப் பரிமாறிக் கொண்டு வந்தாள், சமையல் அறையில் இருந்து சாப்பிடத் தொடங் கினாள். சரளாவின் பிள்ளைகள் அவளை எப்போதுமே திரும்பிப் பார்ப்பதில்லை. ஏதாவது தேவை ஏற்பட்டால் மட்டும் அதிகாரத் தோரணையில் அவளை நாடுவார்கள், ஆனால் வாணியின் பிள்ளைகள் அப்படியல்ல. அவளை யும் அந்தக் குடும்பத்தில் ஒருத்தியாகவே நினைத்து பழகுகிறார்கள். யோகாவுக்கும் அந்தப் பிள்ளைகள் மீது வாஞ்சை அதிகமாக ஏற்பட்டது நிஜம் தான்.

ஏதோ அலுவலாக சமையலறைக்கு வந்த கலையரசி யோகா தனியே இருந்து சாப்பிடுவதை அவதானித்து விட்டாள்.

"ஆன்ட்டி! ஏன் தனிய இருக்கிறீங்கள். நான் வேணுமெண்டால் உங்களுக்கு கத்தரிக்காய் குழம்பு கொண்டு வந்து தாறன். சாப்பிடுங்கோ"

குழந்தையின் பரிவு அவளுக்குள் நெகிழ்ச்சியை ஏற்படுத்தியது. அவளையும் மீறி அவளது உணர்வுகள் கடந்த காலத்தை நோக்கி பாயத்தொடங்கி விட்டன.

அது இறுதிக்கட்ட போர் நடந்து கொண்டிருந்த சமயம். இடப்பெயர்வுகள் பலவற்றைச் சந்தித்த அவர்கள் வலைஞர் மடத்தில் வந்து தஞ்சம் புகந்திருந்த வேளை. அவர்களது செல்ல மகன் தீபன், "அம்மா! இண்டைக்கு மீன் வாங்கிச் சமைப்பம். எனக்கு சாப்பிட ஆசை யாயிருக்கு" என்று அவளிடம் கூறியதைக் கேட்டுவிட்ட அவளது கணவன் காந்தன் கடற்கரைக்கு புறப்பட்டு விட்டான். யோகாவிற்கோ அதில் துளிகூட இஷ்ட மிருக்கவில்லை. அவன் போன சிறிது நேரத்தில் கடற் கரைப் பிரதேசத்தை நோக்கி கொத்துக் குண்டு மழை பொழியத் தொடங்கிவிட்டது. யோகா துடித்துப் போய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதறியவளுக்கு வந்தது செய்தி. பிள்ளைக்கு மீன் வாங்கப் போனவனை பிணமாகக் கூட பார்க்க முடியாத பாவியாகி விட்டாள், அவள்.

எப்படியோ பத்து வயதுப் பாலகனுடன் செட்டிகுள முகாமுக்கு வந்து, அங்கிருந்து சொந்த ஊருக்கு வந்து சேர்ந்தாள், யோகா. சொந்த வீடு, வளவு என்று இருந்தபடியால் ஒருவாறு கஷ்டப்பட்டு மகனை வளர்த்தாள். தீபனும் சாதாரணதரம் வரை நன்றாகப் படித்து பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றான். மனம் மகிழ்ந்த யோகா அவனை உயர்தர வகுப்பில் சேர்த்து விட்டாள். அங்கு தான் வந்தது வினை. தீபன் படிப்பில் கவனம் செலுத்தாது கூடாத சேர்க்கையால் சீரழியத் தொடங்கினான். தாயை எள்ளளவும் மதிப்பதில்லை. எந்நேரமும் பணம் தருமாறு இம்சித்து அவளை வருத்திக் கொண்டிருந்தான். வேறு வழியில்லாமல் யோகாவும் வளவை விற்று அவன் கேட்ட போதெல்லாம் பணத்தைக் கொடுத்தாள். விரத்தியில் வாழ்ந்த யோகாவுக்கு பொருள் பண்டம் எதுவும் பெரிதாகக் தெரியவில்லை. பிள்ளை சந்தோசமாக இருந்தால் போதும் என்ற நினைப்பு மட்டுமே மிஞ்சியிருந்தது.

அந்த நிலைக்கு ஒரு நாள் கேடு வந்துவிட்டது. தீபன் சுருக்கிட்டு தற்கொலை செய்து கொண்டு விட்டான். போதைப்பொருளுக்கு அடிமையாகி விட்ட வனது மூளை பாதிப்படைந்த நிலையில் அவன் இப்படியொரு முடிவை எடுத்திருக்கலாம் என சிலர் பேசிக் கொண்டார்கள்.

யோகா தனி மரமானாள். வாழவழி தெரியாது தவித்து நின்றவளுக்கு கோமதி அம்மா கை கொடுத்தாள். கோமதியின் சகவாசத்தினால் யோகா தன் கவலைகளை ஓரளவிற்கு மறந்து வாழ்ந்து கொண்டிருக்கிறாள்.

"ஆன்ட்டி! ஏன் அழுகிறீங்கள்?"

ஒரே கணத்தில் தன்னைச் சுதாகரித்துக் கொண்ட யோகா, "இல்லையம்மா கறி நல்லாய் ஒறைச்சிட்டுது" சொல்லிக் கொண்டே கண்களை துடைத்து கொண்டாள்.

"ஸாரி ஆன்ட்டி, நிறைய குழம்பு போட்டிட்டனா?"

"இல்லை செல்லம். என்னுடைய நாக்கில் ஒரு காயம் இருந்தது. அது தான் உறைச்சது குழந்தையை சமாளிப்பதற்குள் அவளுக்கு போதும் போதுமென்றாகி விட்டது.

"யோகா! பிள்ளை யோகா!"

கோமதி அழைக்கவும் யோகா பழைய நினைவுகளிலிருந்து முற்றாக விடுபட்டு மிகுதியிருந்த வேலைகளை கவனிக்கத் தொடங்கினாள். சர்க்கரைப் பொங்கலும் பொங்கி, கடலையும் அவித்தாள். அம்மா அவலைக் குழைத்தாள்.

மாலை நேரம் ஐந்து மணி.

வீட்டில் எல்லோரும் சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருந்தார்கள். கதிரேசன் வீட்டு சுவாமி அறை ஊதுபத்தி, சாம்பிராணி போன்றவற்றின் சுகந்தத்தினால் நிறைந்திருந்தது. சுவாமி படங்கள் அனைதுக்கும் மாலையிடப்பட்டிருந்த போதிலும், நடுவில் வைக்கப் பட்டிருந்த சரஸ்வதி படத்திற்கு மட்டும் பிரத்தியேகமாக வெள்ளை மாலைகளினால் அலங்கரிக்கப் பட்டிருந்தது. நாற்புறமும் தோரணங்கள் வேறு கட்டப்பட்டிருந்தன.

கோமதி பொங்கல் தட்டுடன் ஆரம்பித்து வைக்க, மற்றவர்கள் ஏனைய படையல் பதார்த்தங் களைக் கொண்டு வந்து வைத்தனர். அனைவரும் ஆசார சீலர்களாக வந்து இரு மருங்கிலும் நின்றனர்.

கதிரேசன் தோளில் போட்டிருந்த சால்வையை எடுத்து இடுப்பில் கட்டிக் கொண்டார். மனைவி கோமதியைப் பார்த்து பார்வையாலேயே தொடங்கலாமா? என சைகை செய்ய, அவளும் தலையசைத்து ஆமோதித்தாள்.

சபேசன் தேங்காய் உடைக்க, கதிரேசன் சாம்பிராணித்தட்டை எடுத்து நிறை குடத்துக்கு புகை காட்டி மற்றைய படங்களுக்கும் காட்டினார். கற்பூர தீபம் காட்டியதும் அனைவரும் தீபத்தைத் தொட்டு கண்களில் ஒற்றிக் கொண்டனர்.

"தேவாரம் படியுங்கோ"

வாணி படிக்க, சரளாவும் படித்தாள்.

கோமதி கூறினாள்.

"இனி சகலகலாவல்லி மாலை படியுங்கோ"

எல்லோரும் விழி பிதுங்கி நின்றனர். கோமதி மீண்டும் கூறினாள்.

"என்ன யோசிக்கிறியள். படத்துக்கு முன்னால வைச்சிருக்கிறன். புத்தகத்தை எடுத்து பிள்ளையளிட்ட குடுங்கோ. படிக்கிற பிள்ளையள் தான் படிக்க வேணும்."

சபேசன் புத்தகத்தை எடுத்துக் கொடுத்தான். அதை வாங்கிக் கொண்ட சரளாவின் மகள் கூறினாள்.

"மாமா! எனக்கு தமிழ் வாசிக்கத் தெரியாது"

"ஏன்?" ஆச்சரியத்துடன் அத்தனை வழிகளும் விரிந்தன. சரளா வாய் திறந்தாள்.

"அண்ணா! அவள் இன்ரநாஷனல் ஸ்கூல்ல தான் படிக்கிறாள். இங்கிலிஷ் மீடியம்."

சபேசனின் வாயில் ஒரு ஏளனச்சிரிப்பு

"இந்தா கலையரசி! இதைப்படி."

எல்லோரது கண்களிலும் ஆச்சரியம். வெளி நாட்டிலிருந்து வந்த பிள்ளை தமிழ் படிக்குமா... அனைவரது மனங்களிலும் கேள்விக்குறி.

கணீரென ஒலித்தது கலையரசியின் குரல்

"வெண்டாமரைக் கன்றி நின்....

நிசப்தத்தில் ஒலித்த குரல் அனைவரது மனத்தையும் நிறைத்தது.

வழிபாடு இனிதே நிறைவுற்றது. சபேசன் வாய் திறந்தான்.

"நாங்கள் வாழ்வாதாரத்தைத் தேடி வெளிநாடு களுக்குப் போய் வாழ்ந்தாலும், எங்கட பாரம்பரியத்தை தொலைத்து வாழவிரும்பவில்லை. எங்கட பிள்ளைகள் வேற்று மொழியில் படித்தாலும் வார இறுதியில் தமிழ் வகுப்புகளுக்கு போகினம். நீங்கள் சொந்த நாட்டிலை இருந்து கொண்டே தமிழைப் புறந்தள்ளிப் போட்டு ஆங்கிலத்தைப் படிக்கிறியள். சீ... வெட்கக் கேடு"

சரளா சமாளித்தாள்.

"இல்லை அண்ணா. அதுகள் இப்ப தமிழிலை படிச்சிட்டு... பிறகு மேல்ப்படிப்பு படிக்க கஷ்டப்படு வினம். அதுதான்...."

"சரளா! நீ என்னதான் சொன்னாலும் நான் ஏற்கப்போறதில்லை. தமிழ்தான் எங்கள் தாய்மொழி. அது தான் எங்கள் உயிர்மூச்சு. எங்கையும் வாழலாம். பாரம்பரியம் அழியக்கூடாது."

•



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குற்றம் குற்றமே

கி.நடராசா




"நெற்றிக் கண்ணை திறந்து காட்டிலும் குற்றம் குற்றமே" என்ற வாசகம் யாவரும் அறிந்த ஒன்றாகும். அது இன்றும் தமிழ்ப் புலமையின் அஞ்சா மன உறுதிக்கு எடுத்துக் காட்டாக அமைகின்றது. இவ்வாறு சொல்வதற் கான தோற்றுவாய் என்ன? அதனைச் சொன்னவர் வரலாறு என்ன? அதனால் விளைந்த பயன் என்ன? இவை போன்ற சில வினாக்களுக்கு விடை காண்பதே இக் கட்டுரை. சங்க கால குறுந்தொகை செய்யுளும், திருவிளையாடற்புராணமும் திரு முருகாற்றுப்படையும் இக்கட்டுரைக்கு சான்றுகளாக அமைகின்றன.

தருமி என்னும் பெயருடைய ஓர் ஆலய பூசகர் மதுரையில் உள்ள சொக்கலிங்கம் பெருமானுக்கு பூசை செய்து வந்தார். அவர் தனது வம்சம் தழைத்து இப்பணி தொடர வேண்டுமென விருப்பம் கொண்டார். தாய் தந்தையை இழந்து வறுமையுற்றவராக காணப்பட்டான்.

"தந்தை தாயிலேன் தனியன் ஆகிய
மைந்த னேன்புது வதுவை வேட்கையேன்" என்றும்
"வடுவில் இல்லற வாழ்க்கையின்றி நின்
அடி அருச்சனைக் கருகனாவனோ"

என்றும் சொக்க நாதரிடம் முறையிட்டு வந்தார்.

இது இவ்வாறு இருக்க அக்காலத்தில் பாண்டிய மன்னன் இளவேனிற் காலத்து வெப்பத்தை தணிக்க நந்தவனத்தில் அமர்ந்து கொண்டான்.

அந்த வேளை நறுமணத்துடன் கூடிய தென்றல் காற்று அவன் உடம்மை வருடியது.

"திவ்விய வாசமாக
இருந்தது தென்றல் காவில்
வெள்ளிய வாசம் அன்று
காலுக்கும் வாசமில்லை
எவ்வியல் வாச மேயோ?"

இது என எண்ணம் கொள்வான்.

மன்னனுக்கு இவ்வாசனை பெரியதொரு ஆச்சரியத்தைக் கொடுத்தது. நந்தவனத்தில் இல்லாத இந்த வாசனை எங்கிருந்து வந்தது. திரும்பிப் பார்த்தான். பாண்டிமாதேவி கூந்தலை ஆற்றிக் கொண்டிருந்தாள். தேவியின் கூந்தலில் இருந்து இவ்வாசனை வந்ததோ என்ற சந்தேகம் அவனுக்கு ஏற்பட்டது. பெண்களின் கூந்தலுக்கு செயற்கையாலன்றி இயற்கையான நறுமண மும் உள்ளதோ என ஆராயத் தொடங்கினான். தனது ஐயப்பாட்டை நீக்கும் வகையில் உண்மையை ஆராய்ந்து சொல்லும் புலவர்களை நாடினான். சந்தேகத்தை நீக்குபவர்களுக்கு ஆயிரம் பொற்காசு அளிக்கப்படும் என முரசும் அடிக்கப்பட்டது. இதற்கான பொற்கிழி ஒன்று தமிழ் சங்க மண்டபத்தில் கட்டி தொங்கவிட்டான்.

இதனை அறிந்து கொண்ட தருமி சொக்க லிங்கப் பெருமானிடம் தனது வேண்டுகோளை முறை யிட்டான். அவனது வேண்டுகொளை ஏற்ற சிவ பெருமான் அவனுக்கு கொடுத்த இந்தப்பாடலே குற்றம் காண்பதற்கு தோற்றுவாயாக இருந்தது. குறுந்தொகை என்னும் சங்ககால நூலில் இரண்டாவது பாடலாக இடம் பெற்றுள்ளது.

"கொங்கு தேர் வாழ்க்கை அஞ்சிறைத்தும்பி
காமம் செப்பாது கண்டது மொழிமோ
பயிலியது கெழீஇய நட்பின் மயிலியல்
செறி எயிற்று அரிவை கூந்தலின்
நறியவும் உளவோ நீயுறியும் பூவே"

இந்தப் பாடலைக் கொண்டு போய் அரசவையில் கொடுக்க, அதனைப் படித்த பாண்டியன் தன் ஐயம் நீங்கியதாக மனம் மகிழ்ந்தான். தன் துணைவியின் கூந்தலின் மணம் எந்த மலருக்கும் இல்லாத சிறப்புடை யது எனக் கருதி மனம் மகிழ்ந்தான். தருமியிடம் பொற் கிழியை எடுத்துச் செல்லுமாறு மன்னன் கட்டளை யிட்டான். கற்றுவல்ல சான்றோர்களோடு ஏவலாளிகள் கூட வந்து சங்க மண்டபத்தில் கட்டித் தொங்குகின்ற பொற்கிழியை தருமி அறுக்கும் போது நில் என்ற குரல் ஒலித்தது. நக்கீரர் முன்னே தோன்றினார். இப்பாட்டில் குற்றம் உள்ளது என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**யார் இந்த நக்கீரர்:**

மதுரையில் வாழ்ந்த கணக்காயனார் என்பவர் நிறைந்த தமிழ்ப் புலமையுடையவர். தமிழ் நூல்களை நன்றாக கற்றதன் விளைவாகவே கணக்காயனார் என்று அழைக்கப்பட்டார். மதுரை சொக்க நாதரின் அருளால் இவருக்கு மகனாகப் பிறந்தவர் தான் நக்கீரன் ஆவார். இளமைக்காலத்து நல்ல சொற்களைக் கூறியதனால் அக் குழந்தையை நக்கீரன் என்று அழைத்தார்களாம். (ந- சிறந்த; கீரன் - சொற்களைச் சொல்லுபவன்) இவரும் தந்தையைப் போல தமிழ் புலமையில் வல்லவராகவே வளர்ந்தார். மதுரை தமிழ்ச் சங்கத்தில் தமிழ்ப் புலவர்கள் ஒன்று கூடி செய்யுட்களை ஆக்குவதும் உரை கூறுவதாகவும் சேர்ந்து மகிழ்வதுண்டு. சிவனும் முருகனும் கூட புலவர்களாக எழுந்தருளி சங்கத்திற்கு வருகை தந்ததும் உண்டு. நக்கீரருடன் நாற்பத்தொன்பது புலவர்கள் அச்சங்கத்தில் இருந்த வேளை நக்கீரரது தமிழ் அறிவினை வியந்து தலைமைப் பொறுப்பை அவரிடம் கொடுத்தனர். ஒரு காலத்தில் பன்னிரு வருடம் மழையில்லை என்றும் அக்காலத்தில் பொருள் இலக்கணம் வல்லாரை இழக்க நேரிட்டது என்றும் பாண்டிய மன்னன் சொக்க நாதரை வேண்டிக் கொண்ட போது அன்பின் ஐந்திணை என்று தொடங்கி அறுபது சிறிய செய்யுட்களை சிவனே எழுதியதாக ஒரு வரலாறு உள்ளது. ஒவ்வொரு செய்யுளும் சூத்திரம் என்று சொல்லப்படும். அதற்கு களவியல் என்ற பெயரும் உண்டு. இதற்கு உரை எழுதியவர்கள் பலராயினும் சிறந்த உரை எது என்றறிய முடியாத வேளை இறைவனே ஐந்து வயதுடைய ஊமைப்பிள்ளையினூடாக முடிவு காண்பதாகவும் அதில் நக்கீரரின் உரை சிறந்தது என அந்த உருத்திரசன்மன் முடிவு எடுத்ததாகவும் அவ்வுரை மெய்யுரை எனவும் போற்றப்பட்டது.

மதுரையில் ஒரு புறம் வடமொழியைக் கற்ற வேட்கோவர் குலத்துப் பிறந்த கொண்டான் என்பவன் தன் தாய் மொழியாகிய தமிழிலும் வடமொழியே சிறந்தது என பிரசித்தம் செய்யத் தொடங்கினான். தமிழ்ச் சங்க வாசலில் வந்து "ஆரியம் நன்று; தமிழ் தீது" என கத்திய வேளை, நக்கீரர் அவனோடு முரண்பட்டு "எம்மொழி நும்மால் பாராட்டப்பட்டதோ அம்மொழியாலேயே நும்மைக் கொல்லுவோம்" என்றுரைத்து,

"முரணில் பொதியில் முதற் புத்தேள் வாழி
பரண கமிலரும் வாழி அரணியல்
ஆனந்த வேட்கையான் வேட்கோக் குலக் கொண்டான்
ஆனந்தம் சேர்க சுவா க"

(முதற் புத்தேள்-அகத்யர்;ஆனந்தம்சேர்க-இறக்க)

என்ற செய்யுளைப் பாடினார். பாடியதும் கால் துவள, உடல் வளைய, உயிரற்று கீழே விழுந்தான். இதனை அறிந்த அவனது தாய் தந்தையரும் உறவினரும் நக்கீரரின் காலில் விழுந்து கொண்டான் உயிர் பிழைத்தெழுமாறு அருள் செய்க என மன்றாடிக் கொண்டனர். உடனே நக்கீரர் வருந்தாதீர் என்று கூறி,

"ஆரியம் நன்று தமிழ் தீ(து) என உரைத்த
காரியத்தாற் காலக் கோட்பட்டாளைச் - சீரிய
அந்தண் பொதியி லகத்திலனா ராணை யாற்
செந்தமிழே தீர்க்க சுவா கா"

என்ற செய்யுளைப் பாடியதும் கொண்டானின் தலை நிமிர்ந்தது. துவண்ட உடல் அசைந்தது. வளைந்த கால்கள் நிமிர்ந்தன. இவ்வாறாக உயிர் பெற்ற கொண்டான் அடியேன் செய்த பிழையைப் பொறுக்குமாறு வேண்டிக் கொண்டான்.

நக்கீரர் பாடியதாக அக நானூற்றில் பதினேழு பாடல்களும், குறுந்தொகையில் எட்டுப்பாடல்களும், நற்றிணையில் ஏழு பாடல்களும், புறநானூற்றில் மூன்று பாடல்களும் உள்ளன. திருமுருகாற்றுப்படை, நெடுநல் வாடை ஆகிய நூல்களைப் பாடியவரும் இவரே.

**குற்றம் குற்றமே**

பொற்கிழியை எடுத்துச் செல்ல வந்த தருமி நக்கீரரால் தடுத்து நிறுத்தப்பட்டார். கைக்கு எட்டியது வாய்க்கு எட்டவில்லையே என்று கவலைப்பட்டார். ஆண்டவன் பாற்சென்று கூறுவேன். தவறான பாடல் ஒன்றை எழுதி ஏன் தந்தீர்? பொருள் போனதற்காக நான் கவலைப்படவில்லை. தெய்வ நாயகரான உன் பாட்டு குற்றம் என்று அற்ப ஆயுள் கொண்ட சிற்றறிவுள்ள ஒரு மானுடன் சொல்ல முடியுமானால் உம்மை யார் தெய்வமென்று மதிப்பர். தற்போது ஏற்பட்ட அவமானம் எனக்கல்ல. உமக்கே உரியது என்று முறைப்பாடு செய்தார். உடனே சொக்க நாதர் புலவர் போல் தோற்றம் கொண்டு அச்சங்கத்தை சேர்ந்தார்.

"ஆரவை குறுகி நேர்நின்று அங்கிருந் தவரை நோக்கி
யாரை நங்கவிக்குக் குற்றம் இயம்பினா ரென்னா முன்னம்
கீரனஞ் சாது நானே கிளத்தினே னென்றா னின்ற
சீரணி புலவன் குற்றம் யாதெனத் தேராக் கீரன்"

"சொற்குற்ற மின்று வேறு பொருட்குற்ற மென்றான் தூயு
பொற்குற்ற வேணி யண்ணல் பொருட் குற்ற மென்னை
யென்றாள்
தற்குற்றம் வருவ தோரான் புனை மலர் சார்பா லன்றி
அற்குற்ற குழற்கு நாற்ற மில்லையே யென்றான் ஐயன்"

மேல் குறிப்பிட்ட பாடல்களினூடாக இறைவனுக்கும் கீரனுக்கு மிடையில் சொற்போர் தொடங்கிற்று. அரசியின் கூந்தலில் இயற்கை மணம் உள்ளது என்ற கருத்தே குற்றத்தின் அடிப்படையாகும். சூடிக் கொள்ளும் பூவினால் வாசனையே யல்லாமல் கூந்தலுக்கு எவ்வாறு வாசம் ஏற்படும். வந்த புலவர் பதுமினி கூந்தலுக்கும் செயற்கைதானோ? என்று கேட்க தெய்வப் பெண்கள் கூந்தலுக்கும் அப்படித்தான் என்று கீரன் செருக்குடன் சொன்னதும், வந்த புலவர் தனது நெற்றிக் கண்ணை திறந்து காட்டினார்.

"கற்றை வார் சடையான் நெற்றி
கண்ணினைச் சிறிதே காட்டப்
பற்றுவான் இன்னும் அஞ்சான்
உம்பரார் பதிபோல் ஆகம்
முற்று நீர் கண்ணா னாலும்
மொழிந்தது நும் பாடல் குற்றம்
குற்றமே என்றான் தன்பால்
ஆகிய குற்றம் தேரான்"

என்று பரஞ்சோதியார் கூறுவதிலும் நக்கீரரின் பார்வையில் ஒரு மிடுக்கு தொனிக்கின்றது. கீரனின் கர்வத்தை அடக்கவே சொக்க நாதரின் நெற்றிக் கண் திறக்கப்பட்டது. அதன் வெம்மை கீரன்மேல் தாக்க பொற்றாமரைக் குளத்திலே போய் விழுந்தான் கீரன்.

சோமசுந்தரக் கடவுளின் நெற்றிக் கண்ணால்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாக்கப்பட்ட கீரன் பொற்றாரைக் குளத்தில் துக்க சாகரத்தில் அழுந்தி துன்பப்படுதலை பொறுக்க முடியாமல் அரசனும் புலவர்களும் குடிமக்களும் அந்த இறைவனிடம் சென்றனர். வெள்ளிமலையைப் பெயர்த்த இராவணனின் இசைக்கு மனம் இரங்கி தேரும் வாளும் கொடுத்து அவன் செய்த குற்றத்தையும் பொறுத்தவரே இக்குற்றத்தையும் மன்னித்தருள வேண்டுமென வேண்டினர். தேவியின் அருட்கடாட்சமே நீ வேகாமல் பிழைத்தமைக்கு காரணம் என்று கூறி சிவபெருமான் நக்கீரரை பொற்றாமரைக் குளத்தில் இருந்து கரையேற்றினார்.

"வெறிகமழ் கொன்றையொடு வெண்ணில வணிந்து
கீதம் பாடிய அண்ணல்
பாதம் சென்னியுட் பரவுவன் பணிந்தே"

என்று தம்பிழையுணர்ந்து இறைவனைப் போற்றினார் கீரன். "நக்கீரா! கைலைக்கு வா; நின்னுடற் புண்ணைப் போக்குவோம்" என்று கூறி இறைவனும் மறைந்தருளினார்.

**திருமுருகாற்றுப்படை மொழிதல்**

குற்றம் குற்றமேயென்று கூறிய புலவனின் அஞ்சாமையின் வினை பயனும் அறியப்பட வேண்டும். நெற்றிக்கண்ணின் வெப்பு நோயை நீக்க நக்கீரரை கைலைக்கு வா என்ற இறைவனின் வேண்டுகோளை நிறைவேற்றச் செல்லும் வழியில் ஒரு மலைச்சாரல் அவர் முன் தோன்றியது. அங்கு ஓர் ஆலமர நிழலில் பெரிய தடாக மொன்று காணப்பட்டது. இறைவழி பாட்டிற்கு அவ்விடம் பொருத்தமானது என எண்ணி இறைவனை எண்ணும் உள்ளத்தோடு அமர்ந்தார். அந்த தடாகத்தில் ஒரு புதுமை என்னவெனில் ஆல மரத்தின் இலை மண்ணில் விழுந்தால் பறவையாகிப் பறக்கும். தடாகத்தில் விழுந்தால் மீனாகி நீந்திச் செல்லும். இறை எண்ணத்தில் இருந்தவருக்கு இக்காட்சி வியப்பினைக் கொடுக்க கடவுள் வழிபாட்டை சிறிது நேரம் மறந்து விட்டார். அச்சம் தரும் சடாமுனிப் பூதம் ஒன்று தோன்றி புலவரை தூக்கிச் சென்று ஒரு மலைக்குகையில் அடைத்து வைத்தது. அப்பூதம் சிவபூசையில் தவறியவர்கள் ஆயிரம் பேரைக் கொன்று உண்ணும் நோன்பினை மேற்கொண்டிருந்தது. நக்கீரரின் வருகையுடன் அத்தொகை ஆயிரமாயிற்று. ஏற்கனவே அடைபட்டிருந்த தொள்ளாயிரத்து தொண் ணூற்றொன்பது பேரும் வருந்தினர். இச் சம்பவம் திருப்பருங்குன்றத்தில் நிகழ்ந்ததாக தலபுராணங்கள் கூறும். ஆபத்தை அகற்றி அடியாளரைப் பாதுகாக்கும் நோக்குடன் தமிழ்க் கடவுளான முருகனை எண்ணினார்.

"ஒருமுரு காவென்றென் னுள்ளங் குளிர வுவந்துடனே
வருமுரு காவென்று வாய்வெரு வாதிற்பக் கையிங்ஙனே
தருமுரு காவென்று தான்புலம்பா நிற்பத் தையன் முன்னே
திருமுரு காற்றுப் படையுடை னேவருஞ் சேவகனே"

என்று அருமை வாய்ந்த திருமுருகாற்றுப் படையை அன்புடன் பாட முருகன் திருவேலை விட்டு அனை வரையும் விடுதலை செய்தார். இந் நிகழ்வு திருப்பருங் குன்றத்தில் நிகழ்ந்தமையினாலே திருப்பருங்குன்றம் முதலாவது படை வீடாக கொள்ளப்பட்டது.

திருமுருகாற்றுப்படையின் பயன் பெரிது. பழந்தமிழரின் நாகரிகத்தை அறிய உதவும் வரலாற்று நூலாகவும் முருகனை வழிபடுவோர் பாராயணம் செய்து இறையருள் பெறும் நூலாகவும் உள்ளது.

"மணிமுடியரசர் வாழ்வும் மக்கட்பே றாதி நல்கிப்
பிணிமிடி பகையி டுக்கண் பேயினாக் கனவு கள்வர்
பணிவிட மொழிக்கும் ஆற்றுப்படை"

எனப் பெரியோர் கூறுவர்.

நக்கீரருக்கும் குகையில் அடைபட்டுக் கிடந் தோருக்கும் விடுதலை கிடைத்தபின் நக்கீரருக்கு "கைலை வா" என சிவபெருமான் இட்ட கட்டளை நினைவுக்கு வந்தது. முருகன் நக்கீரரை நோக்கி கைலை என்னும் போது தென் கைலை, வட கைலை என வேறுபடுத்தி சிவன் கூறாமையால் தென் கைலையாகிய திருக்காளத்திற்குச் செல்வாயாக என முருகன் அருள் புரிந்தார் கீரன் காளத்தி சென்று "கைலை பாதி காளத்தி பாதி" பாடி உடல் வெப்பு நோயையும் நீக்கிக் கொண்டார்.

**முடிவு:**

குற்றம் குற்றமே என்றார். தமக்கென வாழாது தமிழ் மொழிக்காக வாழ்ந்தார். ஆற்றுப்படை தந்தார் எக்காலத்தும் மறவா இயல்புகொண்டார்.

"தமிழுக்கு தொண்டு செய்வோன் சாவதில்லை" என்ற பாரதி தாசன் கூற்றும் நனவாயிற்று" •

## அன்பைத் தேடும் முதுமை

தூரத்திலோர் குயிலினோசை
என்மனமோ இரசிக்கவில்லை...
அன்பிற்கேங்கும் பாவி மனசு
அன்போ வெகு தொலைவில்...
இன்னுமோர் கடமை என்பக்கம்
அதுவரை என்னுயிர் இருக்குமா
என் உதிரத்தில் உதிராது..?
என் பேச்சைக்கேட்க மனிதரில்லை
பனிமரமோ அசைந்தாடுது
என் பேச்சை இரசித்து...
கருமேகம் மெல்ல நகர்கிறது
நீலவானம் + நட்சத்திரம் சிரிக்கின்றன
சிரிக்க முடியவில்லை-என்னால்...
இளமையில் என்மீது பட்ட
மங்கையின் சுவாசம் இன்றில்லை...
பலநாளாய் அன்பின் அடியை தேடுகிறேன்
உதிரியாய்கூட அணுவளவு கிடைக்க மறுக்கிறது...
கைகளால் காற்றை துழாவுகிறேன் அங்கும்
அன்பில்லை...
கடைசிப்புள்ளியில் வாழுமெனக்கு பிரபஞ்சம்
சூனியமாகுமுன் ஒருதடவை அன்பை காண்பேனா..?

\- சுவிஸிலிருந்து பொலிகை ஜெயா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கரை தேடும் படகுகள்

இராஜினிதேவி சிவலிங்கம்




விடாது கொட்டித் தீர்த்த மழைசற்று ஓய்ந் திருந்தது. வீட்டின் கூரையிலிருந்து ஒழுகிய இடங்களுக் கெல்லாம் வைத்த பாத்திரங்களில் நிரம்பிய மழை நீரை எடுத்து முற்றத்தில் ஊற்றிய மீனாட்சி உள்ளே அறையிலிருந்த தையல் மிசினுக்கு அருகில் அடுக்கி வைத்த உடுப்புகளின் நினைவு வரவே பரபரப்பாக அறைக்குள் நுழைந்தாள்.

கூரையிலிருந்து ஒழுகிய மழைநீர் சுவரிலே வடிந்து நிலத்தை நனைத்திருந்தது. நெஞ்சம் படபடக்க உடுப்புகள் அடுக்கி வைத்திருந்த பெட்டிக்கு அருகில் சென்றவள் பெட்டியைத் தொட்டுப்பார்த்து மெதுவாக அதை இழுத்துத் திறந்தாள். அடுக்கி வைத்திருந்த உடுப்புகள் நனைந்திருக்காததைக் கண்டு நின்மதிப் பெருமூச்சு விட்டவள் அவற்றை வெளியே எடுத்து அடுக்கி வைத்தாள்.

தைத்த உடுப்புகள் எல்லாவற்றையும் இன்று உரியவர்களிடம் கொடுத்திட வேண்டும் என எண்ணி யவள் அவற்றை வேறு வேறாக மடித்து வைத்தாள். தொடர்ந்து பெய்து கொண்டிருக்கும் மழையால் ஒழுக்கு வீட்டில் புது உடுப்புகளை பாதுகாக்கவும் முடியாது.

தீபாவளிக்கு ஒரு வாரமேயிருந்தது. மீனாட்சி யிடம் அயல்வீடுகளில் உள்ளவர்கள் தமது பிள்ளை களுக்குரிய சட்டைகளைத் தைப்பதற்கு புதிய துணி களைக் கொடுத்திருந்தனர். பகலில் தெரிந்தவர்களின் வீடுகளுக்குச் சென்று வீட்டு வேலைகளைச் செய்து கொடுத்து விட்டு வீட்டிற்கு வந்து சமையல் வேலையை முடித்து தையல் மிஷினிற்கு முன்னால் அமர்ந்து தானும் மிஷினாகி விடுவாள் மீனாட்சி.

இரவு நீண்ட நேரம் கண் விழித்து காலாட்டித் தைத்தமையால் பிடரி நரம்புகளெல்லாம் வலி யெடுத்தது இரண்டு கால்களும் நடக்க முடியாத வேதனையைத் தந்தது. அவை தங்களுக்கு ஓய்வு தேவை எனக் கெஞ்சியதையும் பொருட்படுத்தாது வீட்டு வேலைகளில் மூழ்கினாள் மீனாட்சி.

போர்வையால் தலையிலிருந்து கால்வரை போர்த்தபடி தூங்கும் பிள்ளைகளை எழுப்புவதற்கும் மனம் வரவில்லை. மூத்தவள் பிரியாவிற்கு எட்டு வயது. இளையவன் கிரிக்கு ஐந்து வயது. பிரியா தாயின் நிலையை அறிந்து ஒன்றும் கேட்க மாட்டாள். ஆனால் கிரியோ பார்ப்பதெல்லாம் வேண்டும் என்று கேட்டு அடம் பிடிப்பான். அவனைச் சமாளிக்க முடியாது திணறிப் போய் விடுவாள் மீனாட்சி.

தீபாவளிக்கு தமது பிள்ளைகளுக்கு உடுப்புகளை தைப்பதற்கு அயலவர்கள் கொண்டு வந்து கொடுத்த புதிய துணிகளை ஏக்கத்தோடு பிரியா தொட்டுப் பார்த் ததை மீனாட்சி அவதானித்தாள். கிரிதான் அவளிடம் "அம்மா எங்களுக்கு புது உடுப்பு எடுத்துத் தாங்கோ..." என்று கேட்டு அழுததை நினைத்தவள் கண்களில் பொங்கிய கண்ணீரைத் துடைத்தாள்.

கணவன் ராகவனை எண்ணிப் பார்த்தாள். அவன் ஒழுங்கானவனாக இருந்தால் அவளும் பிள்ளைகளும் இவ்வாறு கஷ்டங்களை அனுபவிக்கும் நிலை வந்திருக்குமா அவன் உயிருடன் இருப்பதும் ஒன்றுதான் இல்லாமல் இருப்பதும் ஒன்றுதான் என்று எண்ணியவள், தைத்த உடுப்புகளை கொண்டு சென்று கொடுப்பதற்கு ஆயத்தமானாள்.

பிள்ளைகள் எழும்புவதற்கிடையில் தைத்த உடுப்புகளை கொண்டுபோய் உரியவர்களிடம் கொடுத்து காசை வாங்கினால் பிள்ளைகளுக்கும் தீபா வளிக்கு துணி எடுக்கலாம் என்பதனால் அதிகாலை யிலேயே அவர்களின் வீடுகளுக்குச் சென்றாள். காசை வாங்கிக் கொண்டு வீட்டிற்குச் சென்றவள் பிள்ளைகளை எழுப்பினாள். அவர்களுக்கு முகம் கழுவி தேனீர் கொடுத்தவள் அங்கே வந்த மாமனாருக்கும் தேனீர் கொடுத்துவிட்டு "மாமா... பிள்ளையளைப் பார்த்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளுங்கோ நான் கடைக்குப் போட்டு வாறன்."

"பிள்ளை... இரண்டு நாளா பிள்ளையளுக்கு ஒழுங்கான சாப்பாடுமில்லை. வீட்டில் ஒரு சாமானும் இல்லை. கடையில ஏதாவது வாங்கிக் கொண்டு வா...."

"அது தான் மாமா கடைக்குப் போறன் கெதியா வந்திடுவன் கொஞ்ச நேரம் பிள்ளையளைப் பார்த்துக் கொள்ளுங்கோ..." கூறியவள் கையில் பாக்கையும் எடுத்துக் கொண்டு விரைந்தாள்.

"பாவம் மீனாட்சி சமைச்சு வைச்ச சாப்பாட்டையும் அந்தக் குடிகார ராஸ்கல் எடுத்துச் சாப்பிட்டதால தான் தண்ணிய குடிச்சிட்டு படுத்த கறுமம் பிடிச்ச பிறவி எனக்கும் பிள்ளைகளுக்கும் முதல் தந்திட்டு தான் சாப்பிட முடியாமல் பட்டினி கிடக்குது ஒரு றாத்தல் பாண் வாங்கிற தெண்டால் இரு நூறு ரூபா எண்டாலும் வேணும். அதுக்கு நான் ஏதாவது செய்ய வேணும். வருமானம் எதுவுமில்லாமல் இந்த நெருக்கடியான சூழ்நிலையில் மீனாட்சிக்கு நானும் பாரமாயிருக்கிறது எவ்வளவு வேதனையா இருக்கு என்று பலவாறு எண்ணியவரின் மனதில் பழைய ஞாபகங்கள் வந்து போயின.

சத்தியமூர்த்தியும் அவர் மனைவி விசாலமும் அந்தக் கிராமத்தில் நிரந்தரமாகக் குடியேறி முப்பது வருடங்களுக்கு மேலாகிவிட்டது. அவர்களின் ஒரே மகன்தான் ராகவன். விவசாயம் செய்த சத்தியமூர்த்தி மனைவியையும் மகனையும் கண்ணிற்குள் வைத்துப் பாதுகாத்தார். ராகவன் பெற்றோர்களின் செல்லப் பிள்ளையாக இருந்ததனால் அவர்களின் கண்டிப்பு இல்லாமல் ராகவன் நண்பர்களுடன் சேர்ந்து ஊர் சுற்றுவது வழக்கமாகிவிட்டது.

வீட்டிற்கு நேரம் கழித்து வருவதுடன் அவன் போக்கிலும் மாறுதலைக் கண்ட விசாலம் கணவரிடம் அவனுடைய மாற்றத்தைக் கூறியவள் "ராகவனைத் திருத்த வேண்டுமென்றால் அவனுக்கு ஒரு கால்கட்டுப் போட்டால்தான் சரி. அவன் குடிச்சிட்டும் வாறன். அவனோடை திரியிற பெடியங்களும் அவனைப் பழுதாக்கிறாங்கள் போல கிடக்கு நான் சொல்லுறத நல்லா யோசியுங்கோ..."

"விசாலம்... ராகவன் இப்ப இருக்கிற நிலைக்கு அவனுக்கு தங்கன்ர பிள்ளையை யார் கட்டிக் குடுப்பின் அது தான் யோசினையாயிருக்கு..." கூறிய சத்தியமூர்த்தியை இடைமறித்த விசாலம் "ஏங்கன்ரை அண்ணா வின்ர மகள் மீனாட்சியை கேட்பம். அண்ணை நான் கேட்டா மறுக்க மாட்டார். சீதனம் இல்லையெண்டாலும் மீனாட்சி தங்கமான பிள்ளை..."

இவ்வாறு கூறிய விசாலம் தன் அண்ணனை சம்மதிக்க வைத்து திருமணத்தையும் நடத்தி முடித்து விட்டாள். திருமணமாகிய ஆரம்பத்தில் ராகவன் குடும்பத்தை நன்றாகக் கவனித்தான். மீனாட்சி மீது உயிரையே வைத்திருந்தான். நகரத்தில் உள்ள புடைவைக் கடை ஒன்றில் விற்பனையாளனாக சத்திய மூர்த்தியே அவனைச் சேர்த்து விட்டார்.

மாதாந்தம் கிடைக்கும் சம்பளப் பணத்தை முழுமையாக மீனாட்சியின் கையிலே கொடுத்து விடும் ராகவன் தனது செலவுக்குக் கூட மீனாட்சியிடமே வாங்குவது வழமையாகி விட்டது. பிரியாவும் கிரியும் பிறக்கும் வரை ராகவன் ஒழுங்கானவனாகத்தான் இருந்தான். சத்தியமூர்த்தியாலும் முன்பு போல தோட்டம் செய்ய முடியவில்லை. ராகவனின் சம்பளம் வீட்டைப் பராமரிக்க போதுமானதாக இல்லை. வாழ்க்கைச் செலவைச் சமாளிக்க முடியாது மீனாட்சி திண்டாடினாள்.

"அப்பா... பிள்ளையளும் வளர்ந்திட்டுகள் அதுகளையும் படிக்க வேணும் செலுவுகளும் கூட என்னுடைய சம்பளத்தை எடுத்துச் சமாளிக்க முடியாமல் இருக்கு வேறு ஏதாவது தொழில்தான் செய்ய வேணும்..." கூறிய ராகவனை இடைமறித்த விசாலம் "தம்பி என்னட்டை இருக்கிற நகையளைத்தாறன் எப்பிடி தந்தாலும் அது உனக்கு தானே அதை அடைவு வைச்சாலும் சரி, வித்தாலும் சரி அதை வைச்சுக் கொண்டு ஏதாவது தொழில் செய்யலாம் தானே..."

"விசால்... தம்பி ஓட்டோ ஒண்டை எடுத்தா னெண்டால் ஓடி உழைச்சுப் போடலாம். இங்க ஓட்டோ வைச்சிருக்கின்றவங்களெல்லாம் நல்லா உழைக் கிறாங்கள்..." சத்தியமூர்த்தி கூறியதைக் கேட்ட மீனாட்சியும் "என்னுடைய நகைகளும் கொஞ்சம் இருக்கு மாமா... அதையும் நான் தாறன். மாமி வைச் சிருக்கிற நகைகளையும், என்னுடைய நகைகளையும் வித்துப் போட்டு வாற காசில ஓட்டோ எடுங்கோ..."

மீனாட்சியின் நகைகள், விசாலத்தின் நகைகள் இரண்டையும் விற்று ஓட்டோ எடுத்த ராகவன் தான் வேலை பார்த்த புடைவைக்கடையிருந்து விலகி முழுநேரமாக ஓட்டோவை ஓடுவதற்கு முடிவெடுத்தான்.

வருமானம் தாராளமாக வந்தமையால் ராகவன் கையில தாராளமாகப் பணம் புரளவே அவன் போக்கிலும் மாற்றம் ஏற்படவாயிற்று. பழைய நண்பர் களும் ராகவனுடன் வந்து சேர்ந்து கொண்டனர். தினமும் இரவில் நேரம் கழித்து வரும் ராகவன் குடிபோதையில் வருவதும் அவனுக்காகச் சாப்பிடாமல் காத்திருக்கும் மீனாட்சியிடம் "மீனாட்சி... நான் நல்லா சாப்பிட்டு வந்திட்டன் எனக்கு சாப்பாடு வேண்டாம் நீ சாப்பிடு..." நாளுக்கு நாள் குடியோதையில் தள்ளாடியபடி வீட்டிற்கு வரும் ராகவன் நாளாந்தம் மீனாட்சியின் கையில் கொடுக்கும் வருமானப் பணத்தையும் கொடுப்பதை நிறுத்திக் கொண்டான்.

வீட்டுச் செலவைச் சமாளிப்பதே பெரும் பாடாகி விட்டது. தனது வீட்டில் முந்திதான் தைத்த தையல் மெசின் ஞாபகத்திற்கு வரவே அதனை போய் எடுத்து வந்த மீனாட்சி அயல் வீடுகளில் உள்ளவர்களுக்கு உடுப்புகளைத் தைத்துக் கொடுத்து வரும் சொற்ப வருமானத்தில் குடும்பத்தை நடத்தினாள். சத்திய மூர்த்தியாலும் முன்பு போல் தோட்டம் செய்ய முடிய வில்லை. மகனின் போக்கினால் மனமுடைந்த விசாலம் படுத்த படுக்கையாகி விட்டாள்.

திடீரென ஒருநாள் ராகவன் ஓட்டோவைக் கொண்டு சென்ற சிறிது நேரத்தின் பின் அவனது நண்பன் ரகு பரபரப்பாக ஓடி வந்தான். "அக்கா... மீனாட்சி அக்கா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராகவனை பொலிஸ் பிடிச்சுக் கொண்டு போகுது அதுதான் உங்களுக்குச் சொல்லிப் போட்டு போகலாம் எண்டு வந்தனான்..."

"ரகு... என்ன நடந்தது. ஏன் பொலிஸ் பிடிச்சுக் கொண்டு போனவங்கள். யாரோடையாவது சண்டை பிடிச்சவரே..."

"இல்லை அக்கா அவர் சண்டை பிடிக்கேல்ல எங்களோடை ஓட்டோ வைச்சிருக்கிற முரளி அண்ணை தன்னுடைய ஓட்டோ ஏதோ பழுதெண்டு ராகவன் அண்ணையின்ர ஓட்டோவை ஏதோ சமான் ஏத்த வேணும் எண்டு கொண்டு போனவர். அவர் ஏதோ கள்ளச் சாமான்கள் தானாம் ஏத்திக் கொண்டு போனவர். அது தான் யாரோ பொலிசுக்கு அறிவிச்சு அவங்கள் ஓட்டோவைக் கலைச்சுக் கொண்டு போக அவர் வேக மாக ஓடி மரத்தில மோதிப்போட்டார் ஓட்டோவுக்கும் சரியான சேதமாம் ஓட்டோ ராகவன் அண்ணையின்ர எண்ட படியால் அவரையும் வந்து பிடிச்சுக் கொண்டு போட்டாங்கள்..."

ரகு கூறியதைக் கேட்டவள் தலையிலே கை வைத்துக் கொண்டு முற்றத்தில் அமர்ந்து விட்டாள். சத்திமூர்த்திதான் அவளிடம் "பிள்ளை மீனாட்சி... நான் போய் பார்த்திட்டு வாறன் நீ பொலிஸ் ஸ்ரேசனுக் கெல்லாம் போக வேண்டாம். ரகுவோடை நான் போறன்..."

ராகவனை பிணை எடுத்து வந்தவர் "தம்பி கோட்டுக்கெல்லாம் எங்களால அலைய ஏலாது. ஓட்டோ எடுத்து தந்ததுதான் பிழைபோல இருக்கு ஓட்டோவை முரளி திருத்தி தந்தால் வாங்கு எங்களால ஒண்டும் செய்ய முடியாது..." உறுதியாகக் கூறியவர். வீட்டின் உட்புறம் சென்றார்.

மீனாட்சியின் அவல நிலைக்கு தன் மகனைத் திருமணம் செய்து கொடுத்ததே காரணம் என மனம் வருந்தி அழுத விசாலம் இரண்டு கைகளாலும் மீனாட்சி யின் கைகளை இறுகப் பொத்தியவாறு கண்களை மூடியவள் பின்னர் கண்களைத் திறக்கவேயில்லை.

விசாலம் இறந்த பிறகாவது மகன் திருந்துவான் என எதிர்பார்த்த சத்தியமூர்த்தி ஏமாந்து போனார். இவராலும் மீனாட்சியின் பாரத்தைக் குறைக்க முடிய வில்லை. தையல் வேலை செய்தும் வீட்டு வேலைகளுக்கும் போய் உழைத்துவரும் காசில் மீனாட்சி சமைத்து வைப்பதை பிள்ளைகளுக்குகூட வைக்காது போதையில் வந்து சாப்பிடும் மகனைத் தட்டிக் கேட்க முடியாத அவலம் அவரது நெஞ்சை சுட்டெரித்தது.

மீனாட்சி கடைக்குச் செல்வதாகக் கூறிவிட்டுச் சென்றதும் பக்கத்து வீட்டு பாக்கியத்தைக் கூப்பிட்டவர் "பாக்கியம்... பிள்ளையளைக் கொஞ்ச நேரம் பார்த்துக் கொள் நான் கடையடிக்கு ஒருக்கா போட்டு வாறன். மீனாட்சியும் இப்ப வந்திடும் சொன்னவர் வீட்டை விட்டு வெளியேறினார்.

முதல்நாள் எதிர்வீட்டுக் கந்தசாமி "மூர்த்தி அண்ணை கடைக்கார தவம் பெற்றோல் அடிக்கிறதுக்கு கியூவில போய் நிண்டால் இருநூறு ரூபா தாறனெண்டு என்னை நிக்கவிட்டவர் பிறகு அவரின்ர மகன் வந்து என்னை விட்டவர் எனக்கு காசு தந்தவர். நான் உங்களை கூட்டிக் கொண்டு போய் கதைச்சுவிடுகிறன் சும்மா வீட்டில இருக்காமல் போய் கியூவில நிண்டு வாங்கிக் குடுத்தா காசு கிடைக்கும் தானே..."

கந்தசாமியுடன் தவத்துடன் போய் கதைத்து நீண்ட வரிசையில் கால்கடுக்க நின்றார் சத்தியமூர்த்தி பெற்றோல் நிரப்புமிடத்தை அண்மித்து விட்டார் அவருக்கு முன்னால் நால்வர் மட்டுமே நின்றனர். எப்படியும் பெற்றோல் வாங்குவதற்கு தவத்தின் மகன் வந்து தனக்கும் காசு தருவான் ஒரு இறாத்தல் பாண் எப்படியும் வாங்கலாம் என்று எண்ணியவருக்கு தலைசுற்றுவது போலிருந்தது. காலையில் உணவு எதுவும் உண்ணாதது ஞாபகத்திற்கு வந்தது. மீனாட்சிக்கும் பிள்ளைகளுக்கும் பாண் வாங்க வேண்டும் என்ற எண்ணத்தோடு காலடி எடுத்து வைத்தவர் கால்கள் தள்ளாட நிலத்தில் சாய்ந்தார் அவரின் கண்கள் மூடிக் கொண்டன. அவை மீண்டும் திறக்கவேயில்லை.



தீபச்செல்வனின் "பயங்கரவாதி" நாவல் வெளியீடு 15.01.2024 அன்று கரைச்சி பிரதேசசபை அரங்கில் பேராசிரியர் கலாநிதி சி.ரகுராம் தலைமையில் நடைபெற்றது. வாழ்த்துரையை த.குருகுலராஜாஅவர்களும், வெளியீட்டுரையை அருணாசலம் சத்தியானந்தன் அவர்களும் விமர்சன உரைகளை வெற்றிச் செல்வி, தி.செல்வமனோகரன் நிகழ்த்தினார்கள்.



ஆவூரானின் "சின்னான்" குறுநாவல் வெளியீடு 22.01.202 அன்று பரந்தனில் உள்ள தர்மம் மத்தியில் நடைபெற்றது. பத்மநாதன் மகாலிங்கம் அவர்கள் தலைமையில் இந்நிகழ்வு நடைபெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13

# குடும்பம் என்றொரு கோயிலிலே...

■ கோகிலா மகேந்திரன்

"கருப்பைக்குள் முட்டைக்கும் கல்லினுள் தேரைக்கும்
விருப்புற்று அமுதளிக்கும் மெய்யன் - உருப்பெற்றால்
ஊட்டி வளர்க்காளோ?" என்று ஔவை பாடினாள் என்பதற்காய்ப் பிள்ளைகளின் பாதுகாப்புத் தொடர்பில் குடும்பம் கவனம் எடுக்காமல் விட்டுவிடலாமா என்ன?

சிறுவர்கள் மலரப் போகும் மொட்டுக்கள். நாட்டினதும் சமூகத்தினதும் எதிர்காலத் தலைவர்கள். குடும்பத்தின் கனவுகளை நனவாக்கப் போகும் வருங் காலச் சிற்பிகள். தேசிய சட்டங்கள் பாரயமடையும் வயதை முன் தள்ளி வைத்தாலன்றி மற்றும் வேளைகளில் எல்லாம் பதினெட்டு வயதிற்கு உட்பட்ட ஒருவர் "சிறுவர்" என அழைக்கப்படுவார் என ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் ஏற்றுக் கொள்ளப்பட்ட சிறுவர் உரிமைகள் பற்றிய சமவாயம் கூறுகிறது.

"ஆரோக்கியம் என்பது நோய் நிலைகளிலும் இயலாமையிலும் இருந்து விடுபட்ட நிலை மாத்திர மல்ல; ஒருவர் தம் உடல், உள, சமூக, ஆன்மீக நன்னிலை களில் அடையக் கூடிய அதியுயர்ந்த நிலை அது..." என்று கூறும் உலக சுகாதார ஸ்தாபனம், "ஆரோக்கியம் மனிதனது அடிப்படைப் பிறப்புரிமைகளில் ஒன்றாகும்" என்று தொடர்கிறது. அந்த அடிப்படைப் பிறப்புரிமை பிள்ளைகளுக்கும் உரியது என்பதைப் பெற்றார் விளங்கிச் செயற்படுவது அவசியந்தானே!

ஒவ்வொரு குழந்தையும் பிறந்ததும் ஒரு பெயரைப் பெறும் உரிமை உடையது. அத்துடன் ஒரு நாட்டினத்தைச் சார்வதற்கும், தன் பெற்றோர் இன்னா ரென்று அறிவதற்கும் அவர்களால் பராமரிக்கப் படுவதற்கும் அது உரிமை உடையது.

"ஒல்வதறிவது அறிந்ததன் கண் தங்கிச்
செல்வார்க்குச் செல்லாதது இல்" என்பது வள்ளுவம். தன்னாலே முடியக் கூடியதை ஆராய்ந்து அறிந்து, அச் செயலில் நிலைத்து நின்று, முயற்சி செய்பவர்களுக்கு முடி யாத செயல் எதுவும் இல்லை என்றால், பிள்ளைகள் நலத் தோடு வளர்வதற்கான பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்வது எம்மால் முடியும் என்று பெற்றார் நம்ப வேண்டும்.

பிள்ளைகளின் நலத்தில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளை இரண்டு பெரும் பிரிவுகளாகப் பிரித்தால் அவை பாரம்பரியக் காரணிகள் சூழற் காரணிகள் என விரியும்.

பெற்றோரிடமிருந்து பிள்ளைகளுக்குப் பரம் பரை அலகுகள் கடத்தப்படுகின்றன. அவை பலவேறு விடயங்களைத் தீர்மானிப்பவையாக இருக்கின்றன. பிள்ளையின் மொத்த ஆளுமையில் கணிசமான பகுதி பாரம்பரியத்தால் தீர்மானிக்கப்படுவது உண்மைதான். இலக்கிய ஆற்றல், பல்வேறு கலையாற்றல்கள் குடும்பம் குடும்பமாகக் கடத்தப்படுவதை எது சூழலிலேயே நாம் அவதானித்திருப்போம். அதே போல நெருக்கீடுகள் வரும்போது, ஒருவர் எந்தளவுக்குத் தாங்கும் சக்தியைக் கொண்டிருப்பார் அல்லது எந்தளவுக்கு இலகுவாகத் தாக்கப்பட்டுப் போவார் என்பது ஓரளவாவது பாரம் பரியத்திலும் தங்கியிருப்பதாகவே ஆய்வுகள் காட்டு கின்றன. ஆயினும் பாரம்பரியம் என்ற அந்தக் காரணியை மாற்ற முடியாது என்பதால் அதன் மீது அதிக கவனம் செலுத்துவதில் பயனில்லை.

மாற்றக் கூடிய காரணிகளில் குடும்ப அமைப்பு குடும்ப இயக்கம் போன்றவை மிக முக்கியமானவை. குடும்ப அங்கத்தவர்கள் சிந்திக்கின்ற முறையும் பேசுகின்ற முறையும் செயற்படுகின்ற முறையுந்தான் சரி என்று வீடு என்ற பாடசாலையில் தவிர்க்க முடியாமல் பிள்ளை கற்றுக் கொள்கிறது.

ஒவ்வொரு குடும்பத்திலும் நாளாந்தப் பழக்க வழக்கங்கள் சில இருக்கும். அவற்றில் திடீரென்று மாற்றம் ஏற்பட்டால் பிள்ளைக்கு அது நெருக்கீடு ஆகலாம். நித்திரை செய்யும் இடம் மாற்றமடைதல், உணவில் மாற்றம் ஏற்படுதல், வீட்டிலுள்ள அங்கத்தவர் எண்ணிக்கை மாற்றமடைதல் போன்ற சிறிய விடயங்கள் கூடத் தற்காலிகமாகவேனும் பிள்ளைக்கு ஒரு நெருக் கீட்டைத் தரலாம். ஆகவே முடிந்த வரை நாளாந்த விடயங் களை அப்படியே பேணி வருவது பிள்ளைக்குப் பாது காப்பைத் தரும். தவிர்க்க முடியாமல் மாற்றங்கள் வரு மாயின் அவை பற்றி முன்கூட்டியே பிள்ளைக்குத் தெரியப் படுத்தலாம். அந்த மாற்றம் தொடர்பான கேள்விக்குப் பதில் தரலாம். விளக்கங்கள் போதிய அளவு கூறலாம். பிள்ளைக்குப் பழக்கமான சூழல், பிடித்தமான நண்பர் கள், விருப்பமான உறவினர்கள் போன்றவற்றில் இருந்து பிள்ளையை அநாவசியமாகப் பிரிக்காதிருப்பதே உகந்தது.

பிள்ளைகளின் உடலும் மனமும் அவர்களுடை யது. அவற்றைப் பாதுகாப்பது அவர்களின் உரிமை. பெற்றோரின் தண்டனைகளில் இருந்தும், துஷ்பிர யோகங்களில் இருந்தும் தம்மைப் பாதுகாக்க அவர்கள் உரித்துடையவர்கள்.

"தாய் தேப்பன் பிள்ளையைத் திருத்த அடிச் சாலும் பேசினாலும், பிள்ளை பொலிசைக் கூப்பிடுமா, அந்த நாட்டிலை..." என்று எம்மவர் வாயைப் பிளந்தாலும், அந்த விடயத்தில் மேலைத்தேய நாகரிகம் சரியானதே!

அதே சமயம் ஆசிரியர்கள், பொது நிறுவனங்களின் நிர்வாகிகள் அல்லது வேற்று மனிதர் களின் வன்முறைகள், துஷ்பிரயோகங்களில் இருந்து பிள்ளையைப் பாதுகாப்பது பெற்றோரின் கடமை.

Elizabeth cole எழுதிய Body Boundariees make me stronger போன்ற நூல்களைப் பிள்ளைகள் தாமே வாசிக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிந்தால் சிறப்பு. அல்லது அதன் உள்ளடக்கத்தைப் பிள்ளைகளுக்குக் கூற வேண்டும்.

பிள்ளையின் பாதுகாப்பு என்பது ஒரு வகையில் குடும்பத்தின் பாதுகாப்பு அல்லவா?

நம்பிக்கையான பெரியவர் ஒருவர் இல்லாத போது பெறுமதி மிக்க பொருள்களை வெளியே விட்டுச் செல்வதும், பாதுகாப்பற்ற இடங்களில் தனியே நடமாடுவதும் தவிர்க்கப்படக் கூடியவை என்பதைப் பிள்ளைகளுக்குச் சிறுவயதில் இருந்தே கற்றுத் தரலாம்.

பெற்றோர் வீட்டுக்குள்ளே வரும்போது பெறுமதியான பொருள் ஒன்று முற்றத்தில் விடப்பட்டிருப்பதைக் காண்கிறீர்கள் என்றால், உங்கள் பதகளிப்பை, "என்ன வேலை செய்திருக்கிறாய்? எத்தின நாள் சொல்லியிருப்பன்? கழுதை! இனி ஒரு நாள் கண்டனெண்டால், எடுக்க மறந்த கையை முறிப்பன்" என்று பிள்ளை மீது காட்டுவீர்களாயின் அது பொருளின் பெறுமதியை விட அதிக நட்டத்தைக் கொண்டு வரும்.

வீதியில் இறங்கும் போது பெற்றோரின் கையைப் பற்றிக் கொள்ளவேண்டும் என்று சிறுவயதில் (2-3வயது) சொல்லிக் கொடுத்துப் பின்னர் படிப்படியாக வீதி ஒழுங்குகளைப் பற்றிக் கற்றுக் கொடுக்க வேண்டும் பெற்றோர். மஞ்சள் கோட்டில் வீதியைக் கடக்க வேண்டும் என்பது மட்டுமில்லை, மிக வேகமாக ஒரு மோட்டார் சைக்கிள் வருவதைக் கண்டால், மஞ்சள் கோட்டில் தானும் கடக்காமல் பொறுத்திருக்க வேண்டும் என்று சொல்ல வேண்டும் இந்த நாட்டில்! இவையெல்லாம் பாடசாலையில் சொல்லிக் கொடுப்பார்கள் என்று விட்டுவிட வேண்டாம். பெரும்பாலான பாடசாலைகள் "பெறுபேறுகளில் மட்டுமே அக்கறை" என்பதை மறந்து விட முடியாது.

ஆராய்வூக்கம் தேடலும் இல்லாத வாழ்வு மிகச் சலிப்பானது வெறுமையானது பிள்ளைகளுக்கும் அது மிகச்சிறுவயதிலிருந்தே இருக்குந்தானே!

ஆகவே மிகச்சிறு குழந்தைகள் இருக்குமிடங்களில் (ஒரு வயதுக்கும் குறைவாக) நிலத்தில் ஊசிகள், தெறிகள், நாணயங்கள், தீக்குச்சிகள், விளையாட்டு உபகரணப் பகுதிகள், வித்துக்கள் போன்றவை இல்லாதிருப்பதைப் பெற்றோர் உறுதி செய்ய வேண்டும். "தேடியுனைச் சரணடைந்தேன்" என்று பாரதியே பாடும் போது, சிறு குழந்தை சூழலில் உள்ள எல்லாவற்றையும் தேடும் என்பதை மறந்து விடக்கூடாது. தவழும் பராயத்தில் கையில் அகப்பட்டதைச் சுவைத்துப் பார்க்கவும் செய்யும்.

ஆட்டுக்குட்டி பிறந்து சில மணித்தியாலங்களுக்குள் எழுந்து நடந்து விடும். மனிதக் குழந்தை, "தொட்டிலில் படுக்க வைத்தல், பேசாமல் படுத்து விடும். எமக்கு நிம்மதி" என்று பெற்றோர் இருந்து விட முடியாது. தொட்டிலில் விடப்பட்ட தலையணை யும், பொலித்தீன்பையும் பல குழந்தைகளுக்கு மூச்சுத் திணறலை ஏற்படுத்தும் அபாயப் பொருள்களாக மாறியதை நினைவில் இருத்திக் கொள்ள வேண்டும்.

பிள்ளைகள் விளையாடும் இடங்கள் பாதுகாப்பானவை என்பதைப் பெற்றோர் உறுதிப்படுத்த வேண்டும். அங்கு யார் அதிகாரம் செய்கிறார்கள், அவர்களின் கட்டளைகள் பொருத்தமானவையா, அவர்களின் நடத்தை முன்மாதிரி எப்படியானது என்பதிலிருந்து அங்கு எத்தகைய விலங்குகள் வரக்கூடும், அவற்றின் நச்சுத் தன்மை எத்தகையது என்பது வரை இந்தக் கவனம் இருத்தல் வேண்டும். இவற்றுக்காகப் பதகளிப்பு அடைந்து பிள்ளையை விளையாட விடாமல் தடுத்து விடக் கூடாது என்பதும் முக்கியமானது தான். "பதகளிப்பு" என்ற தொழிற்படுநிலை உணர்வின் தொழிற்படுநிலை மாற்றந்தான் "கவனம்" என்பதை உளவியல் தெளிவாகப் பேசும்.

எமது நாட்டில் சிறுபிள்ளைகளைப் பராமரிப்பதற்கென்று சம்பளத்திற்கு ஒருவரை நியமித்தல் செல்வந்த வீடுகளில் இப்போது ஒருவகை நாகரிகமாகி விட்டது. (வளர்ச்சி அடைந்த நாடுகளில் அவ்வாறு செய்ய முடியாது). சொந்தப் பெற்றோர் பிள்ளையைப் பராமரிப்பது போல் வேறு எவரும் செய்ய முடியாது. செய்ய மாட்டார்கள் என்ற உண்மையை முதலில் புரிந்து கொள்ள வேண்டும். அடுத்த நிலையில் பேரன், பேர்த்தி, வரக்கூடும். அதற்கு அடுத்து நிலையில் பெரியம்மா, சின்னம்மா இருக்கக் கூடும். இப்படி எந்த இரத்த உறவும் இல்லாத ஒருவரை நியமிக்கும் கட்டாயம் ஏற்படும் போது, அவர்கள் பிள்ளைகளின் பாதுகாப்புப்பற்றிப் படித்தவர்களா, அவற்றைச் செயற்படுத்தும் திறனும் மனப்பாங்கும் கொண்டவர்களா, மனதில் இயல்பான கருணை, இரக்கம் உடையவர்களா என்பவற்றைக் கட்டாயம் ஆராயவேண்டும். பிள்ளையின் கழுத்தில் இருக்கும் சங்கிலியும், கையில் இருக்கும் காப்புமே அவர்கள் இந்த வேலைக்கு வந்ததன் குறிக்கோளாக இருக்கலாம். சற்று வளர்ந்த பிள்ளை என்றாலும் கூட, பெற்றோர் இல்லாத வேளைகளில் பிள்ளை கடும் தண்டனை பெறுவதும், அவற்றைப் பற்றிப் பெற்றோருக்குச் சொல்லக் கூடாது என்று அச்சுறுத்தப் படுவதும், அந்தப் பயம் காரணமாகப் பிள்ளை நிரந்தர மௌனாகி விடுவதும் சாதாரணம். மனிதர்கள் பலர் பயங்கரமானவர்கள். பிள்ளைகளோ வன்முறைக்குள் இலகு வில் அகப்படக்கூடிய வெள்ளை உள்ளம் கொண்டவர்கள் என்பவை அவதானத்துக்குரியன.

பிள்ளைகளைத் தனியே வீட்டில் விட்டு, வீட்டைப் பூட்டிக்கொண்டு செல்வது ஒரு போதும் உகந்ததில்லை. மேலை நாடுகளில் காரில் விட்டுச் செல்லப்பட்ட பிள்ளைகள் இறந்துபோன சம்பவங்கள் பல அரங்கேறியிருக்கின்றன.

எந்த ஒரு இடருக்கும், இழப்பிற்கும் கடினமான பாதைக்கும், அவசர நிலைக்கும் அவர்களைத் தயாராக இருக்கப் பழக்குவது பெற்றோரின் பணி. அப்போது தான் எதிர்காலத்தில் அவர்கள் தம்மைத் தாமே பாதுகாத்துக் கொள்வர். பள்ளத்தாக்கிலும் பாதுகாப்பாக நடக்க அவர்கள் அறிந்திருக்க வேண்டும். இருளிலும் வழி தெரிய வேண்டும். அவர்களை எங்கும் செல்லவிடாமல் வைத்திருப்பதல்லப் பாதுகாப்பு!

பிள்ளைகள் உயரமான இடங்களில் ஏறும் போதும், நீர் நிலைகளைப் பாவிக்கும் போதும் பெற்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றோர் உடனிருக்க வேண்டும் என்பதற்கப்பால் ஒவ்வொரு விநாடியும் என்ன நடக்கிறது என்பதைக் கவனித்துக் கொள்ள வேண்டும். நீர் நிரம்பிய பெரிய வாளிகள் கிடாரங்கள், நீர்வீழ்ச்சிகள், குளங்கள், கடல்களில் உயிரிழந்த சிறுவர்கள் எமது நாட்டில் அதிகம்.

சுற்றியிருக்கும் விடயங்களால் அவர்கள் இலகுவில் ஈர்க்கப்படுவர். ஆகவே வீட்டில் மருந்துகள், கத்தி போன்ற கூரிய அல்லது ஆபத்தான உபகரணங்கள், சூடான பொருள்கள், சுடுநீர்ப் போத்தல், பெற்றோல், மண்ணெய் போன்ற எரிபொருள்கள், மின் செருகியின் குதைகள், எரியும் அடுப்பு போன்றவை (பிள்ளையின் வயதுக்கேற்றபடி) இலகுவில் அணுக முடியாமல் இருப்பதை உறுதி செய்ய வேண்டும்.

தாய்தான் சிறுபராயத்தில் பிள்ளைக்குச் சோறு ஊட்டுவாள். "நிலா, நிலா ஓடிவா, நில்லாமல் ஓடிவா" என்று பாடிப்பாடி, நிலவைக் காட்டிக் காட்டி ஊட்ட வேண்டும் என்பது எமது கலாசாரத்தில் பலமுறை நாம் கேட்டது. அழ.வள்ளியப்பா போன்ற அருமையான குழந்தைக் கவிஞர்களின் பாடல்கள் எதையும் பாடலாம். கவனிக்க வேண்டியது என்னவெனில் பிள்ளைகள் ஓடி, ஓடி அல்லது நடந்து, நடந்து சாப்பிடுவதை விட, அமைதியாக உட்கார்ந்து ஆறுதலாகச் சாப்பிட உதவ வேண்டும் என்பது, முழுதாக விழுங்கினால் மூச்சுத் திணறலை ஏற்படுத்தக் கூடிய முந்திரிகைப் பழம், நாவல்ப்பழம் போன்ற உணவுகளைப் பிள்ளை தன் கையால் எடுத்துச் சாப்பிடும்போது சற்றே அவதானித்துக் கொள்ள வேண்டும்.

விளையாட்டுப் பொருள்களாயினும் பிள்ளை கேட்டதெல்லாம் வாங்கியாக வேண்டும் என்பது அவசியமில்லை. ஆனால் அவை பிள்ளையின் வயதுக்குப் பொருத்தமானதா என்று பார்த்து வாங்குவதுடன் அங்கு எழுதப்பட்டிருக்கும் அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசிக்க வேண்டும் பெற்றோர். "அது பத்து வயதுப் பிள்ளைக்குரிய விளையாட்டுச் சாமான்தான். என்ரை மகனுக்கு மூண்டு வயது தான். நானும் பாத்தன். சரியாத்தான் அதை வைச்சு விளையாடுறான்" என்று புழுகுவது அர்த்தமற்றது.

அதிக உரப்பான சத்தம் போடும் விளையாட்டுப் பொருளை எப்போதுமே வாங்கா திருப்பது நல்லது. ஏனெனில் "ஒலி" என்பது சூழலை மாசுபடுத்துவது.

தடுப்பூசிகளைப் பிள்ளைக்குத் தவறாமல் போட்டுக் கொள்வதும் முதலுதவி முறைகளைப் பெற்றோர் கற்றுக் கொள்வதும் அவசியம்.

பிள்ளை தாய்க்கும் தாய் பிள்ளைக்கும் மிகப் பெரும் பேறுதான். பிள்ளைச் செல்வத்திற்குச் சமமாக வேறு எந்தச் செல்வமும் கிடையாது என்பதால் பிள்ளையின் பாதுகாப்பை விட வேறு முக்கிய விடயம் பெற்றோருக்கு எது இருக்க முடியும்?

கல்கி எழுதிய "பொன்னியின் செல்வன்" மிகப் பிரபலமாகப் பேசப்படும் காலம் இது. அந்நூலில் கல்கி ஓரிடத்தில் செம்பியன் மாதேவி என்ற பாத்திரத்தினூடு, "பொல்லாத அரக்கியாய் இருந்தாலும், தாய் தன் குழந்தைக்குத் துரோகம் செய்ய மாட்டார்கள்" என்று கூறுவார்கள்.

Peggy Rathmann எழுதிய "officer Buckle and Gloria" என்ற நூலையும் வாசிப்போம். முடிந்தால் தமிழில் மொழி பெயர்ப்போம்.

(தொடர்ந்து பேசுவோம்)

# வருட மலர்

■ த.ஜெயசீலன்



கால விருட்சத்தில் காய்ந்தோர் "வருட"
மலர்
வீழ்ந்து உதிர்ந்தது!
விரிந்து "புது வருட"
மொட்டு மலர்ந்தது!
முகிழ்ந்து அது இனிமேல்
அட்ட திசைகளுக்கும் அருளும்
கருணைசெய்யும்!

நேற்றுதிர்ந்த வருட மலர் நினைவுகள்
அலையலையாய்...
ஊற்றுகளாய்ப்....பாய்கிறது
உள்ளத்தில்.
அதன் நன்மை
தீமைகளை எண்ணித் தெளிந்து,
இலாபநட்டம்
பார்த்துத் திருப்தியுற்று,
கவலைப் படவைத்து,
வாய்த்தநன்மை ஏற்று,
வருத்தங்களை மறந்து,
இன்று பூத்த "வருட" மலர்
என்னென்ன
மணம் எழில் தேன்
கொண்டு வருகிறதோ கூடி
"வண்டாய்த்" தொடர்ந்து,
"வருட" மலர் உயிப்பாக வாழும்
நாட்களில்
நாமும்
தெரிந்து செயற்பட்டு,
தீங்கு பிழைகளுக்கு
முகம் கொடுத்து,
அதனை முகாமைசெய்யும்
முறையறிந்து,
நகரவேண்டும்...
ஓரிடத்தில் நங்கூரம் பாய்ச்சாமல்!

ஆதியந்தம் ஏதென்று நாமறியா...
உயிர்ப்பிழக்கா...
கால விருட்சம் கழித்ததுகாண்
கோடி கோடி
வருட மலர்களை!
மலர்த்துமின்னும் கோடி கோடி
வருட மலர்களை! இருநூறு தசாப்த
வருட மலர்களின் கதைகளை மட்டும்
அறிவோம் இதுவரை!
அடிக்கடி வரும் மாற்றங்
கணித்து மலர்த்திய இவ்
"வருடக்" கவின் மலரின்
குணமறிந்து நாமும் கொள்வோமாம்
நன்மைகளை!
வணங்கி வரங்கேட்போம்...
மாய்க்கும் அதெம் தீமைகளை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

■ கே.எம்.செல்வதாஸ்



# உணர்வுக் கொந்தளிப்போடு பெருவலிகளைப் பாடும் "நின்று தூறும் மழை"

அலைதலும் இழப்புகளும் மனித வாழ்வில் பல அனுபவங்களையும் ஆறா வடுக்களையும் தந்துவிட்டுச் செல்கின்றன. இயல்போடு வாழ்தலில் கிடைக்கும் அனுபவங்களும் இயல்பற்று வாழ்தலில் கிடைக்கும் அனுபவங்களும் வேறுபட்டமைகின்றன. அத்தகைய வாழ்வியல் முறைமைகளில் கிடைக்கப்பெறுகின்ற அனுபவங்களே மனித மனங்களையும் அவற்றின் இயங்கியல்ப் போக்குகளையும் கட்டமைக்கின்றன. இத்தகைய பின்னணியில் தன் வாழ்வின் பெரும்பகுதி வரை அலைவுகளையும் இழப்புகளையும் சந்தித்த தானா விஷ்ணு அவர்களின் மூன்றாவது கவிதைத் தொகுதியாக வெளிவந்திருக்கின்றது "நின்று தூறும் மழை"

தொண்ணூறுகளின் பிற்பகுதியிலிருந்து கவிதைகளைப் படைத்து வருகின்ற இவர் தனது கவிதைகளால் இலக்கியப் பரப்பில் கவனம் பெற்ற படைப்பாளியாக காணப்படுகின்றார். இத்தொகுப்பு மொத்தம் இருபத்தொன்பது கவிதைகளைக் கொண்டு தாயதி வெளியீடாக ரஷ்மியின் வடிவமைப்பில் வெளிவந்திருக்கின்றது. அட்டை வடிவமைப்பிலும் பக்க வடிவமைப்பிலும் ரஷ்மியின் தனித்துவப் பாணி வழமைபோன்று மேலோங்கி நிற்கின்றது.

ஒரு படைப்பிலக்கியத்துக்கு இடப்படுகின்ற தலைப்பு என்பது அந்த இலக்கியப் பிரதியின் திரட்டிலிருந்து மேற்கிளம்புகின்ற கனதிமிக்க சொற்களால் கட்டமைக்கப்படுகின்றது. நின்று நிதானித்து வாசகனை உள்ளிழுத்துச் செல்கின்ற செயற்பாட்டினை அது மேற்கொள்கின்றது. "நின்று தூறும் மழை"யும் அத்தகைய பின்னணியில் அமையப்பெற்ற கனதிமிக்க, அதே நேரத்தில் பரந்துபட்ட வெளிகளைத் திறந்துவிடுகின்ற தலைப்பிடுகையாக அமையப் பெற்றுள்ளது. தொடர்ச்சியாகப் பெய்கின்ற மழை தருகின்ற அனுபவத்திலிருந்து நின்று தூறுகின்ற மழை தருகின்ற அனுபவம் சற்று வித்தியாசமானது. அதுபோல மனித மனங்களிலும் நிறைந்து காணப்படுகின்ற வாழ்பனுபவங்களும் அது தந்த வலிகளும் நின்று தூறும் போது ஏற்படுத்துகின்ற தாக்கமும் அது சொல்லவருகின்ற செய்திகளும் கனதியாகின்றன. துயரங்கள் பெருந்துயரங்களாக மாறுகின்ற வேளைகளில் வார்த்தைகள் ஒலிப்பதை நிறுத்திவிட்டு மௌனங்களோடு பேச ஆரம்பித்து விடுகின்றன. உள்ளத்துள் உறைந்து போகின்ற வலிகளை மொழிகளின் வழியே இறக்கிவிடுகின்ற போது வழிந் தோடுகின்ற துயரங்கள் எதிர்நிற்பவர் மனங்களை யும் ஆட்கொண்டு விடுகின்றன. "நின்று தூறும் மழை" அத்தகு உணர்வுக் கொந்தளிப்போடு பெரு வலிகளைப் பாடி முடித்திருக் கின்றது.

ஒரு காலகட்டத்தில் வாழ்வை இரசிக்க வைத்த இயற்கை, இன்னொரு காலகட்டத்தில் துயரத்தின் பெருங்குறியீடாக மாறிநிற்கின்றது. போரும் அது தந்த வடுக்களும் மனித மனங்களில் உறைந்து நின்று அவ்வப் போது நின்று தூறும் மழையாக மேற்கிளம்பலே செய் கின்றன.

"அற்றைத்திங்கள் அவ்வெண்நிலவில்
எந்தையு முடையோம் எம் குன்றும் பிறர்கொள்ளார்
இற்றைத் திங்கள் இவ்வெண் நிலவில்
வென்றி எறி முரசின் வேந்தரெம்
குன்றும் கொண்டார் யாமெந்தையுமிலமே..."

என்று போரின் வலிமிகு பக்கங்களைப் புறநானூறு பாடியுள்ளது. பாரிமகளிர் தாம் பிறந்து வளர்ந்து வாழ்ந்த சூழலை போரின் நிமித்தம் பிரிந்து செல்கின்றனர். அது அவர்கள் மனத்திடையே ஆறா வடுவாக மாறிவிடுகின்றது. பறம்பு மலையை விட்டுப் பிரிவதென்பது மலையைவிடக் கனக்கிறதே என அவர்கள் துயர் கொள்கின்றனர். இத்தகு துயர்மிகு வலிகளோடு வாழ்ந் தலைந்த படைப்பாளியான தானா விஷ்ணு அவர்களின் கவிதைகளும் பேரவலத்தின் தகிப்புத் தணியாத வலிகளைக் கூறிச் செல்வனவாகக் காணப் படுகின்றன. பெரும்பாலான கவிதைகள் அவரது தன்னுணர்வுகளின் வெளிப்பாடுகளாக அமையப் பெற்றுள்ளன.

"அலைதலையும் இழத்தலையும் வலியையும்
இன்றும் சலிப்பையும் சுமந்தபடியிருக்கும்
என்னைப் போலவே என்னுடைய
கவிதைகளும் இருக்கின்றன..."

என்னும் அவரது வரிகளையே இதற்குச் சாட்சியமாக்கு கின்றேன்.

"காடுகள் மூண்டெரியும் வெப்பத்தில்
கருகிக் கொண்டிருந்தது
எம் நட்பின் பசுமை" (பிரிவுக்காடு)

நட்பின் பிரிவு- பொய்மை முகம் - துரோகங்கள் என்பவற்றை முன்னிறுத்தி அவை ஏற்படுத்திய வலி மிகு தாக்கங்களை பல்வேறு படிமங்களை கொண்டு எழுதப் பட்டிருக்கும் பிரிவுக்காடு எனும் கவிதையோடு தொகுப்பு ஆரம்பமாகின்றது. எப்போதும் படிமங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதையைச் செம்மைப்படுத்தி செறிவுபடுத்தும் பண்புடையன.

"சொற்களால் வரையப்படும் ஓவியம்"

என சி.டே.லூயில் படிமத்தை விளக்கியுள்ளார். அத்தகு சொற்களால் வரையப்பட்ட பல ஓவியங்களை இவரது கவிதைகள் முன்னிறுத்தியுள்ளன.

"நேற்றோடு
சருகாய்ப் போன நிலத்தில்
வழிந்தோடி நிறைகிறது நீர்
வீணாய்ப் பெய்கிறது இந்த மழை" (கால்தப்பியமழை)

என்று பாடும் கவிஞர் இழந்து போன வாழ்வியலின் கையறு நிலைதனை சொற்செட்டு மிக்க வரிகளின் வாயிலாக எடுத்துக் கூறியுள்ளார்.

"மரணமும் ஓலமும் இழப்பும்
இருள் கொண்டமைந்த காடு
கால் இடறும் இடமெங்கம்
புதைகுழிகள்..." (மரணக்காடு)

"அலையைக் கொன்றழித்த கடலும்
கடலைக் கொன்றழித்த அலையும்
பெருக்கெடுத்து எல்லோர்
முற்றங்களுக்கும் விரைய
மூக்கில் வியர்த்தபடி தெருநாய்
பசியாறப் பாய்கிறது நீருள்..."(மாயக்குகை)

என்றவாறு அமையப் பெறுகின்ற வரிகளிலே காட்சிப்படிங்கள் பல்வேறு உணர்வுக் கிளரல்களை ஏற்படுத்திவிடுகின்றன.

உணர்வுகளை மொழிகளின் வழியே இறக்கி வைத்து அவற்றை வாசகரோடு பேச வைத்துள்ளார். அந்த உணர்வுகள் வாசகரிடத்து பலத்த உரையாடல் களைத் தொடக்கி வைப்பனவாகவும் அமையப் பெற்றுள்ளன.

"குரூரத்தின் வலிகளைச் சுமந்தலைதல்
மரணத்தை விடவும் கொடியது"(பூனையின் பிரியம்)

"ஒடுங்கிப் பறத்தலற்று
கிளையோடு ஒட்டிக் கிடக்க
ஏகிறது வாழ்வு" (காலம் தப்பிய மழை)

"நீ அறியாப் பொழுதொன்றில்
பலநூறு நான் முளைத்து நிற்பேன்
உன்முன்" (தன்னை விதைப்பவன்)

"எனை யொறுத்தும் காலத்தை சபித்தேன்
வழியுள் இறங்கும்
இனிய பொழுதுகள் இனியில்லை" (பிண்டம்கரைத்தல்)

என்றவாறாக வலிமிகு வாழ்வின் பக்கங்களையும் அது தந்த வடுக்களையும் அலைவுகளையும் இயற்கையின் அம்சங்களை முன்னிறுத்தி அவற்றினைப் படிமங் களாக்கி, வாசகனிடத்து கருத்துத் திணிப்பினை ஏற்படுத் தாது அவர்களே சுதந்திரமாகச் சிந்தித்துப் பொருள் கொள்ளல் என்றும் இருண்மைத் தன்மையைப் புகுத்தி இலக்கிய வெளியில் புதிய கருத்தாடல்களுக்கு வழி சமைக்கும் கவிதைகளைத் தந்த காத்திரமான தொகுப் பாக "நின்று தூறும் மழை" அமையப்பெற்றுள்ளது.


உங்கள் திறமைக்கு அதிஷ்டம் காத்திருக்கிறது

வெல்லுங்கள் 150,000 ரூபாய்கள்!

## எழுத்தாளர் "குரு அரவிந்தன் வாசகர் வட்டம்" நடத்தும் உலகளாவிய திறனாய்வுப் போட்டி – 2023

தமிழ் இலக்கிய உலகில் புகழ் பெற்ற எழுத்தாளர் குரு அரவிந்தன் அவர்களின் தமிழ் இலக்கிய சேவையைப் பாராட்டும் முகமாகவும், வாசிப்பு, எழுத்துப் பழக்கத்தை ஊக்குவிக்கும் நோக்கமாகவும் இடம்பெறும் குரு அரவிந்தன் எழுதிய நாவல், சிறுகதை தொடர்பான திறனாய்வுப் போட்டி.

15 பரிசுகள், மொத்தம் 150,000 ரூபாய்கள், இலங்கை ரூபாயில் வழங்கப்படும்.

முதலாம் பரிசு இலங்கை ரூபாய்கள் - 30,000.

இரண்டாவது பரிசு இலங்கை ரூபாய்கள் - 25,000.

மூன்றாவது பரிசு இலங்கை ரூபாய்கள் - 20,000.

நாலாவது பரிசு இலங்கை ரூபாய்கள் - 15,000.

ஐந்தாவது பரிசு இலங்கை ரூபாய்கள்- 10,000.

10 பாராட்டுப் பரிசுகள் இலங்கை ரூபாய்கள் தலா 5000.

குரு அரவிந்தன் அவர்களின் படைப்புக்களுக்கான திறனாய்வுப் போட்டி. குறைந்தது 2 புதினங்கள் அல்லது 4 சிறுகதைகள் பற்றி உங்களின் கருத்துரைகளைத் தமிழில் அல்லது ஆங்கிலத்தில் 5 பக்கங்களுக்குள் அல்லது 1500 சொற்களுக்கு மேற்படாமல் யூனிக்கோட் மற்றும் வேர்ட் (Unicode and Word) அச்சுப்பிரதியாக அனுப்பவும். மாணவ, மாணவிகளாயின் தனியாகக் குறிப்பிடவும். வயது வரம்பு இல்லை. ஒருவர் ஒரு கட்டுரை மட்டுமே அனுப்பலாம். பரிசுபெற்ற கட்டுரைகளைத் திருத்தி நூலாக வெளியிடும் உரிமை வாசகர் வட்டத்திற்கு உரியது.

மின்னஞ்சல் வழியாக ஆங்கிலத்தில் உங்களின் முழுப்பெயர், தெளிவான அஞ்சல் முகவரி, மின்னஞ்சல் முகவரி, செல்போன் எண் விவரங்களோடு அனுப்பவேண்டும்.

**உங்கள் திறனாய்வு எமக்குக் கிடைக்க வேண்டிய கடைசி நாள்: 31. 03. 2023.**

போட்டி முடிவுகள் 2023 ஏப்ரல் மாதம் 30 ஆம் திகதி இணையத்தில் வெளியிடப்படும்.

மின்னஞ்சல்: kurufanclub@gmail.com

(kurufanclub@gmail.com)

இணையம்: https://kurunovelstory.blogspot.com/

(kurunovelstory.blogspot.com)

https://canadiantamilsliterature.blogspot.com/

http://tamilaram.blogspot.com/

இந்த அறிவிப்பினை உங்களின் முகநூல் பக்கத்திலும் பகிரிக்குழுக்களிலும் (whattsapp) பகிர்ந்து உதவுங்கள்.

நன்றி!

சுலோச்சனா அருண்,

செயலாளர்,

குரு அரவிந்தன் வாசகர் வட்டம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அலையும் மனதின் நிழல்




■ தாட்சாயணி ■

நாடற்றுப்போன ஏதிலிகள் யுத்தத்தினால் சொந்த மண்ணைப் பிரிந்து, தேசந்தேசமாய் அலைந்து, தெரியாத மனிதர்களுக்கிடையிலும், மொழிகளுக்கிடையிலும் அல்லலுற்று அலைகின்ற பாடுகளைச் சொல்லும் படைப்பாக "அகதியின் நாட்குறிப்பு" அமையக்கூடுமெனவே அத்தலைப்பைப் படித்தபோது தோன்றியது. அது ஓரளவுக்கு உண்மையாயினும் கூட, அலையும் மனதின் நிழலாக, மண்ணிலிருந்து புலத்திற்கு நகர்ந்த ஒருவனின் அலைச்சல்களின் ஒரு பகுதி பேசப் பெற்றாலும் கதையின் அழுத்தமான கரு அதுவன்று. அகதி ஒருவனின் பார்வையில் புலத்தில் காணப் படக்கூடிய நம்மவர் வாழ்க்கைச்சித்திரத்தினூடே, ஒரு சில மாந்தர்களின் அந்தரிப்புகளும், தத்தளிப்புகளும், இறுதியான பழிவாங்கலுமாக நாவல் நகர்ந்து செல்கிறது.

ஈழ இலக்கியத்தைப் பொறுத்தவரை, சிறுகதையைப் போலன்றி, நாவல்களின் வரவு சற்றுத் தேக்க முற்றே காணப்படுகிறது. ஏறத்தாழ முப்பதாண்டுகள் முன், வீரகேசரி பிரசுரத்தின் நாவல் வெளியீட்டுக் காலம் ஒப்பீட்டளவில், ஈழத்து நாவல் துறையில் சில குறிப்பிடத் தக்க நாவல்களைத் தந்ததெனலாம். அதற்குப் பின்னரான போர்க்காலம் செங்கை ஆழியான் தவிர்ந்த ஏனைய எழுத்தாளர்களிடமிருந்து, நாலைந்து நாவல் களுக்கு அதிகமான பிரசவங்களைக் கண்டிருப்பது அரிதென்றே சொல்லலாம். அதன் தொடர்ச்சியாக யுத்தத்தின் முடிவிற்குப் பின்னரான இக்காலத்தில், எழுத்தாளர்களிடமிருந்து நாவலுக்கான எத்தனங்கள் ஈழத்திலும், புலத்திலுமாக எழுச்சி பெற்று வருவதை அவதானிக்க முடியும். அவ்வகை எழுச்சியின் ஒரு பங்களிப்பாக குடத்தனை உதயனின் "ஒரு அகதியின் நாட்குறிப்பு" எனும் இந்நாவலையும் கருதிக் கொள்ள முடியும்.

நவீன இலக்கியம் நிகழ்த்திய பாய்ச்சலில் நாவலின் கூறுமுறை வேறுபட்ட பரிமாணங்களை எட்டியுள்ள இவ்வேளையில் பெரும்பாலான ஈழ நாவல்கள், வெறுமே நேர்கோட்டு முறையிலான கூறு முறையில் அமைந்திருத்தல் குறித்து ஆதங்கப்படாதிருக்க முடியாவிட்டாலும், அடுத்தடுத்த பாய்ச்சல்களை நோக்கி நகர, முதலாவது அடி என்பது எவ்வளவு முக்கியமானது என்பதையும் இங்கு கவனத்திற் கொள்ளலாம். அவ்வகையில் குடத்தனையூர் உதயன் நாவல் மூலம் வாசகர்களுக்குத் தரும் செய்தியைப் பார்ப்போம்.

ஆதித்தன் இந்நாவலின் கதைசொல்லியாக அறிமுகமாகிறான். ஈழத்திலிருந்து புலம்பெயர்ந்து, ஜெர்மன் நாட்டில் கால் பதிக்கும் போது, அவனுக்கு அறிமுகமாகும் நடேசனுடையதும், அவனை ஜெர்மனிக்கு அழைப்பிக்கும் குட்டி மாமாவினதும் கதைகளால் நிரம்பியபடி நாவல் நகர்கிறது. ஊரிலிருக்கும் பாத்திரங்களாக, அம்மா, மாமாக்கள், செல்லன், வள்ளி, ஐயம்மா, அம்மம்மா, கவிதா, சதீஸ், அன்ரி, பேபியக்கா ஆகியோரும், புலத்தில் செல்லப்பர், சந்திரன், சுரேஸ், மொனிக்கா, சுந்தரி, வானதி, முல்லர், அவன் மனைவி, ஆதியோடு சமையலறையில் வேலை பார்க்கும் ஜெர்மானியர்கள், நசார், மார்ட்டின் ஆகிய பாத்திரங்களுமாக நாவலுக்கேற்பத் தத்தம் உணர்வுகளை வெளிப்படுத்துகின்றனர்.

இக்கதையில் மூன்று இழைகள் ஒன்றோடொன்று பிரிந்து இழையோடுவதை இனங்காண முடிகிறது. ஒன்று ஆதியின் கதை. ஊரில் அவன் வாய்த்துடுக்கு, இளவயதுக்கேயுரிய குழப்படிகள் என்பன அவன் தனியனாக ஊரைப் பிரிந்து கண்காணாத் தேசத்தில் அலைகிற போது தாயை நினைவூட்டி, அவளிடம் தன் துன்பங்களையெல்லாம் கொட்டி ஆற மடி தேடும் விதத்தில் நகர்கிறது. இன்னொன்று குட்டி மாமாவின் கதை. ஊரிலிருந்த பேபியக்கா ஆதிக்கு சிறு வயதுத்தோழியாகவிருந்தவள். இந்திய இராணுவக் காலத்தில் இராணுவத்தினால் வன்புணர்வுக்காளாக்கப் பட்டவள். அவள் இயக்கத்தில் இணைந்து கொள்கிறாள். இயக்கத்திலிருந்து இராணுவத்தோடு மோதி பல பேரைச் சாகடித்து விட்டுத் தற்கொலைக் குண்டுதாரியாகிறாள். பேபியை ஒருதலையாகக் காதலித்து வருபவன் குட்டி மாமா. அவனால் அவ்விழப்பைத் தாங்க முடியவில்லை. தனது குடும்பப் பொறுப்புகள் நிறைவேறிய பின் அவள் விரும்பினால் அவளைத் திருமணம் செய்வதாகச் சிறுகச் சிறுகத் தனக்குள் மனக்கோட்டை கட்டிய குட்டி மாமா அவளது மரணத்தினால் நிலை குலைந்து போகிறான். மனநிம்மதிக்காக அந்தப் பிரிவு தாங்காது குடிக்கு அடிமையாகிப் போகிறான்.

இந்நாவலின் மையக்கதையாக விரிவது நடேசனின் கதை. நடேசன் பல்கலைக்கழகக் காலத்தில் கவிதாவைக் காதலிக்கிறான். கவிதாவும், வானதியும் 1980 களின் இறுதிப்பகுதியிலேயே லெஸ்பியன்களாக விருக்கிறார்கள். இருவருக்குமே நடேசன் மீது காதல் இருக்கிறது. நடேசன் கவிதாவையே விரும்புகிறான். விமானக் குண்டுவீச்சில் கவிதா இறந்த பிறகு,வானதி அவனுடன் தொடர்பைப் பேணி அவனைத் திருமணம் செய்கிறாள். ஆனால், ஓரினச் சேர்க்கையில் நாட்டமுள்ள அவள் நடேசனைப் புறக்கணிக்கிறாள். ஜெர்மன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்றுக் கொடுத்த எலிசபெத் எனும் பெண்ணுடன் அவள் நெருக்கமாக இருப்பதை சுரேஸ் புகைப்படம் எடுத்து அவளை மிரட்டுகிறான். தன் வீட்டுக்கு அவளை அழைத்து அவளைப் பலவந்தப்படுத்துகிறான். இவற்றை நடேசன் அறிந்த பிறகு சுரேஸைக் குரூரமான முறையில் பழி வாங்கிச் சிறைக்குச் செல்கிறான். இம்மூன்று இழைகளையும் ஒன்று சேர்த்து மொனிக் காவுக்கு ஆதியால் சொல்லப்படும் கதையினூடாக இந்நாவல் நகர்ந்து செல்கிறது. ஆக, ஆதி தனது பாதையில் கண்டுணர்ந்த மனிதர்களைப் பற்றி, அவர் கள் சந்திக்க நேர்ந்த துன்பங்கள் பற்றி அனைத்தையும் தனக்கு நேர்ந்த இன்னலெனாக் கருதி உருகும் எண்ணவோட்டத்தினூடாகக் கதாசிரியர் நாவலைப் பதிவு செய்கிறார்.

தமிழ்ச் சமூகத்தின் இன்றைய நிலை போருக் குள்ளிருந்து மீண்டு, புதிய தேசங்களின் எல்லை களுக்குள் கால் வைத்து விட்டாலும், அங்கும் நம்மவர் களின் போலி கௌரவம் , ஊர் வம்புகள், பெண்களின் பொறாமை உணர்வுகள் என நம் சமூகத்தின் இன்றைய கீழ்மைகள் நாவலில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. வழமையான புலம் பெயர்ந்தோரிடம் இருக்கின்ற அளவுக்கதிகமான தேசப்பற்று, விடுதலை மோகம் கதையில் வரிக்கு வரி பிரதிபலிக்கிறது. அதே போல கற்புப் பற்றிய கற்பிதங்கள், பெண்கள் மீதான அதிபுனித எதிர்பார்ப்புகள் என்பன கதையில் பாத்திரங்களின் கூற்றுகள் தோறும் வெளிப்படுகின்றன.

கதையின் யதார்த்தத்தன்மை பற்றி பார்த்தால் இலட்சியத்தனமான பாத்திர உருவாக்கத்திற்கான முயற்சி ஒரு சினிமாத்தனத்தை வரவைக்க முயல்கிறது. புலம்பெயர் தேசத்தில் தன் இருப்பைத் தக்க வைக்கிற ஒரு இளைஞன் வேற்று இனத்தவன் ஒருவனோடு பொருதுகிற போது, அதற்கு கிடைக்கின்ற வரவேற்பு நம்பகத்தன்மை கொண்டதாக இல்லை. அதுவும் முல்லர் எல்லாவற்றையும் அவதானிக்கிற ஒருவனாக இருந்தாலும், தன் கட்டுப்பாட்டினுள் இருக்கும் ஓர் இடத்தில் ஏற்பட்ட சண்டையை ஏற்றுப் பாராட்டக்கூடிய நிலையில் இருப்பான் என்பது சற்று முரணாக இருக்கிறது. மேலும் சினிமாத்தனமான பழிவாங்கல், நீதிமன்றக்காட்சிகள், நடேசன் தன் நியாயத்தைப் பந்தி, பந்தியாக வெளிப்படுத்தக் கூடிய சந்தர்ப்பங்கள் சற்றே நாடகத்தன்மை கலந்து நாவலின் உயிர்த்தன்மையைச் சற்றுக் குறைப்பதையும் உணரக் கூடியதாகவுள்ளது.

கதையின் சொல்முறையை எடுத்துக் கொண்டால், எழுதி, எழுதிச் சீராக்கவேண்டிய தேவை எழுத்தாளருக்கு இன்னும் இருக்கிறது என்பதையே இவ்விடத்தில் குறிப்பிட விரும்புவேன். சில அத்தியா யங்கள் வரை சீராக நகரும் கதை இடையில் ஒரு அத்தியாயத்தில் சடுதியாகத் திரும்புகிறது. ஆதி மொனிக்காவை நீண்ட காலத்திற்குப் பிறகு சந்திக்கின்ற வேளை அது. அவ்வத்தியாயம் மொனிக்கா ஏதோ ஒரு மனவேறுபாட்டினால், அவனை விட்டுப் பிரிந்திருந்து பின் சந்திக்கிறாள் எனும் ஒரு பிரமையை ஏற்படுத்து கிறது. ஆனால், கதையின் அத்தியாயங்கள் விரிய,விரிய மொனிக்கா ஒரு உலகச் சுற்றுப் பயணத்திற்குச் சென்று விட்டு வந்திருக்கிறாள் எனப் புரிகிறது. ஆரம்பத்தில் ஒரு தொடர்கதைக்குரிய ஆச்சரியப்புள்ளி வைப்பது போல மொனிக்காவுக்கும், அவனுக்கும் பிரிவு ஏன் ஏற்பட்ட தென்றதொரு கேள்வி வாசகன் மனதில் எழுந்து இறுதியில் சப்பென்று போவது நாவலின் போக்கில் ஒரு வெறுமையை ஏற்படுத்துவதாகவே உணர்கிறேன்.

ஆதி, மொனிக்கா உரையாடல் பரிமாற்றத்தி னூடாக நகரும் கதை உண்மையில் நடேசன், வானதி யுடையது. கரு வானதிக்கு இருக்கின்ற ஓரினச்சேர்க்கை இயல்பு பற்றியது. தற்காலத்தில் ஓரினச்சேர்க்கை மேற்கு நாடுகளில் சாதாரணமாக ஆகிவிட்ட ஒன்று. இந்திய சினிமாக்களிலும் சில திரைப்படங்கள் அது பற்றிய சர்ச்சையை ஏற்படுத்தி ஓய்ந்திருக்கின்றன. ஆனால் அதற்கு முந்திய எண்பதுகளின் இறுதிப்பகுதியில் ஈழத்தின் வடக்குச் சூழலில் இத்தகைய உறவு நிலை யொன்று பல்கலைக்கழகச் சூழலில் இருந்ததென்பது ஒரு ஆச்சரியத்தை ஏற்படுத்துகிறது. கதாசிரியஉ தற் போது வாழ்கின்ற சூழல் அதற்கான சாத்தியத்திற்கான நியாயப்பாட்டைத் தோற்றுவித்திருக்கலாம். என்றாலும் தற்போதைய ஈழப் புலம் பெயர்ந்த பெண்கள் ஓரினச் சேர்க்கையில் ஈடுபட்டிருந்தாலும் கூட, எண்பதுகளில் யாழ்ப்பாணச் சூழலில் இது இங்கு இருந்தது என வானதி யின் வாய்மொழி மூலம் நிறுவுவது பல கேள்விகளை ஏற்படுத்துகின்றது. அப்படி நடந்திருக்காது என்பது எனது வாதமல்ல. இது நடந்த கதை எனக் கதாசிரியர் தன் கதைகள் பற்றிய முற்கூற்றில் எப்போதும் சொல்வ துண்டு. அவற்றைப் புனையும் போது சொல்லப்படும் சில நிறுவல்கள் குறித்தே எனது கேள்வி. பல்கலைக்கழகத் தில் கவிதாவும், வானதியும் ஒரே போல உடை உடுத்தி, ஒரே போல செருப்பு அணிகிறார்கள். என் வரையில் அப்படியான செயற்பாடு உள்ளவர்களை இரட்டையர்கள் என்று தான் கேலி செய்வார்கள். லெஸ்பியன்கள் எனக் கேலி செய்வார்கள் எனத் தோன்றவில்லை. அதிலும் “பயர்” போன்ற திரைப்படங்கள் வருவதற்கு முன்னர், லெஸ்பியன்கள் என்ற சொல் புழக்கத்திலிருந்ததாக, என் அறிவிற்கு எட்டிய வரையில் எனக்குத் தெரியவில்லை. இந்த நாவலில் வானதி ஒரு லெஸ்பியனாக இருக்கிறாள் என்பதை நான் மறுக்கவில்லை. ஆனால், அதற்காக ஊரிலிருக்கையில் அவள் கவிதாவோடு அப்படி இருந் தாள் என்று தான் நிரூபிக்க வேண்டும் என்பதில்லையே. அது கதாசிரியரின் சுதந்திரம். அதில் நான் தலையிடக் கூடாது. அதன் மூலம் கவிதாவின் புனிதத்தன்மையைப் பிரகடனப்படுத்தும் எண்ணமும் என்னிடம் இல்லை. மனிதர்கள் பலஹீனமானவர்கள் என்பதை ஒத்துக்க கொள்ளத்தான் வேண்டும். ஆனாலும் நாவலின் இயல்பு நிலையை இத்தன்மை கேள்விக்குள்ளாக்குகிறதோ என நினைக்கிறேன். வானதி சிறு வயதிலிருந்தே அவ்வாறான வேட்கைக்குரியவள் என வலிந்து திணிக்கப்படுகிறது எனத் தோன்றுகிறது.

கதை கூறுமுறையிலும், தன்னிலை, படர்க்கை முறைகள் மாறி, மாறி வருவதை அவதானிக்க முடிகிறது. தன் நிலையில் நின்று கதை சொல்லல் ஒரு முறை. இல்லாவிடில் பொதுவான கூறுமுறை படர்க்கையில் அமையும். ஆனால், படர்க்கைக் கதை கூறல் முறையில் தன்னிலை உணர்த்தும் சில கூற்றுக்கள் ஆங்காங்கே காணக் கிடைக்கின்றன. அவை உரையாடலின் கூறு களாகக் காட்டப்படுவது ஏற்றுக் கொள்ளக் கூடியது. ஆனால், உரையாடல் அற்ற இடங்களிலும் தன்னிலைக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூற்றுக்கள் வருகின்றன. அவை ஆதி சார்ந்தும், நடேசன் சார்ந்தும், குட்டி மாமா சார்ந்தும் இருக் கின்றன. தெளிவான வரையறையற்ற சிந்தனைப் போக்கில் தாறுமாறாக சுழன்றோடும் எண்ணங்களை எழுத்தாக்கியது போலத் தோன்றுகிறது. தேர்ந்த வாசகன் ஒருவனுக்கு இப்பகுதி வாசிப்பின் ஆர்வத்தைச் சுருக்கி விடும் அபாயம் இருப்பதை ஆசிரியர் அடுத்த பிரதிகளில் கவனத்தில் கொள்ள வேண்டும்.

நாவலின் பாத்திரங்கள் வழியே கதை நகர்கிற போது, ஒரு பாத்திரத்தின் வழியே கதை சொல்லப்படும் போது, அப்பாத்திரத்தின் உணர்வினூடாகவே சூழலை யும், மறு பாத்திரத்தின் இயல்பையும் சித்தரித்தல் கதைக்கு ஒரு முழுமையை அளிக்கும். இந்நாவலின் சில இடங்களில் ஆதியின் சிந்தனைப் போக்கினூடு ஒரு விடயம் சொல்லப்படும் போது சடுதியாக மாதவனின் மனப்போக்கு அல்லது நடேசனின் எண்ணம் என்பன சொல்லப்படுவது கதையின் ஈர்ப்பைத் தக்க வைப்பதில் சிரமத்தை ஏற்படுத்துகிறது.

இந்நாவலில் குறிப்பிடக்கூடிய அம்சமாக நான் கருதுவது கிராமியப் பேச்சுமொழி, பழமொழிகள் போன்றனவாகும். கதையோட்டத்தோடு இயல்பாகப் பொருந்தி வரும் சொல்லாடல்களும், கடவுள் தொடர் பான கேள்விகளும் தத்துவ விசாரணைகளும் இந்த நாவலுக்கு இன்னொரு பரிணாமத்தை அளிக்கின்றன.

ஒரு நாவலின் எண்ணக்கருவை வளர்த்து அதனை வாசகர் கையில் கொடுப்பது வரை ஒரு எழுத்தாளனின் உழைப்பு மகத்தானது. அந்த வகையில் குடத்தனை உதயன் இந் நாவலை வாசகன் கையில் தருவதற்காகத் தனது பெரும் உழைப்பைக் கோரியிருக் கிறார். இத்தகைய உழைப்பின் பெறுமதி நீண்ட நாள் வாசகர் மனதில் நிலைக்கக் கூடிய ஒரு நாவலைத் தருவதேயாகும். அத்தகு முயற்சியில் தொடர்ந்தும் ஈடு பட்டிருக்கும் குடத்தனை உதயனிடம் இன்னும் சொல்வ தற்குக் கதைகள் இருக்கும். அக் கதைகளை செப்பமான முறையில் தேர்ந்த வாசகன் பாராட்டும் வகையில் தொடர்ந்து தர வேண்டும் எனும் எண்ணத்தில் என் மனதில் தோன்றிய சில எண்ணங்களையும், கேள்வி களையும் இக்கட்டுரையில் தொகுத்திருக்கிறேன். இக்கேள்விகளைக் குடத்தனை உதயன் தனக்குள் எழுப்பிக் கொள்வாரேயாயின் அவருடைய எதிர்காலப் படைப்புகள் மேலும் செழிப்புறும் என்பதை நிறைவாகக் கூறிக் கொள்ள விரும்புகிறேன். •

---

## பியானோவில் கீதம்

கொம்மன் வேலயின் காட்சி
மென்மையானது எனக்கு
ஒரு பாடல் மற்றும் காகிதம் என்னை
பல வருடங்களின் நினைவாக
அழைத்துப் போகிறது
பியானோவின் கீழ் யார் இருக்கிறார்கள்
என்னால் பார்க்க முடிகிறது
உடைந்த சரங்களுக்குள்
ஒரு சிறியவர் இருக்கிறார்
சிரித்துப் பாடும் தாயிடம்
உறுதியாய் நெருங்கிய குழந்தை
கடந்த காலத்தை நோக்கி ஓடிய
அமைதியற்ற இதயம் இன்றும்
அந்த சகோதரப் பாடலின் மகிமை
பியானோவின் இசைதான்
ஒருநாள் சூரிய ஒளியில் இருந்து
தாழ்வாரத்தை சூடேற்றியது
பியானோவின் இனிமையான
உணர்வுகளை
நிரம்பி வழியும் பாடகர் எங்கே
அந்த குழந்தைப் பருவம்
இனிமை நிறைந்தது
என் இளமை
நினைவு நதியில் மூழ்கியது
நான் ஓர் அந்நியனாய்
கடந்ததை நினைத்து அழுகின்றேன்

மூலம் :- டி.எச்.லோரன்ஸ்
மேலைத்தேய பாரம் பரிய கவிஞர் நாவல் எழுத்தாளர்

தமிழில் : மாவனல்லை எம்.எம் மன்ஸூர்
டி.எச்.லோரன்ஸ்

டி.எச்.லோரன்ஸ் 1885ம் ஆண்டு ஈஸ்ட்வூட் ஐக்கிய ராஜ்யத்தில் (செப்டம்பர் 11, 1885) ஆர்தர் ஜான்லாரன்ஸ் லிதியா போர்தல் ஆகியோருக்கு நான்காவது மகனாகப் பிறந்தார். தந்தை நிலக்கரிச் சுரங்கத் தொழிலாளி. தாய் ஒரு பயிற்சி பெற்ற ஆசிரியை. டி.எச்.லோரன்ஸ் நாட்டிங்ஹாம் பல்கலைக்கழகப் பட்டதாரியாவார். டேவிட் ஹர்பர்ட் லாரன்ஸ் என்பது இவரது முழுப்பெயர். ஆங்கிலப் கவிஞரான இவர், சிறந்த ஓர் எழுத்தாளர். இவரது படைப்புக்கள் யாவும் தொழில் மயத்தின் பால்பட்டது. நவீனமயமாதல் போன்றவற்றினால் ஏற்படும் மனிதத்தன்மைக்கு அப்பாற்பட்ட செயல்களினால் பிரதி பலிக்கப்படும் விடயதானங்களை உள்ளடக்கியதாகக் காணப்பட்டது. சில படைப்புகள் பாலியல், பலம், தன்னிச்சையான இயல்பு, உள்ளுணர்வுகள், மனநிலை போன்றவற்றைப் பிரதிபலித்தன. 1907 - 1930 வரையான காலப்பகுதியில் இவர் எழுதினார். நவீனத்துவ இலக்கியத்தோடு, சன்ஸ் அண்ட் லவர், த.ரெயின்போ, வுமன் இன் லவ், ஜான் தாமஸ், லேடி ஜோன், சாடர்லியின் காதலி முதலிய புதினங்களோடு கிரிஸ்சாந்தமசின் வாசம், கன்னியும் நாடோடியும் சிறுகதை நூல்களுடன், 1911 வெள்ளை மயில் நாவல், உட்பட தேர்வு செய்யப்பட்ட கவிதைகள் என்ற நூல் தொகுப்புகளையும் எழுதியுள்ளார்.

லோரன்ஸின் நாவல் பாலியல் மூலம் மறுபிறப்புக்கு எதிரானது என்ற கருத்து அவரது பார்வையின் வெளிப்பாடு என விமர்சகர்கள் கூறுகின்றனர்.

ஆனால் இருபதாம் நூற்றாண்டின் அரை இறுதியில் நவீன மேற்கத்திய கவிதைகளை ஆராய்பவர்களுக்கு கடந்த காலத்தை வைத்து ஒரு குறிப்பிட்ட கருத்தியலை மையமாகக் கொண்டது என்பது வெளிப்படையானது. லாரன்ஸின் மேற்சொன்னது போல அவரது நாவல் பாலுணர்வின் வெளிப்பாடாக இருந்தாலும், அவரது கவிதையின் தொடுகை வித்தியாசமானது. ஐரோப்பாவில் இவரது நாவல்களை விட கவிதைகள் தான் மிகவும் பிரபல்யம் பெற்றுத் திகழ்ந்தது. எனினும் இவரது கவிதைகள் விமர்சன உலகில் கருத்துக் கணிப்பீட்டுக்கு உட்பட்டதும், பலராலும் பரவலாக பேசப்பட்டது. அவரது மறைவை அடுத்துத்தான் எழுத்தாளர்களும், கவிஞர்களும், வாசகர்களும் டி.எச்.லோரன்ஸ் என்பவரின் படைப்புக்களைத் தேடத் தொடங்கினர். பழைய சமூக அமைப்புக்குள் நடை பெற்ற தாய் - மகன் உறவில் நுட்பமான பின்னலை கவிதைக்குள் கொண்டு வரும் லோரன்ஸ் இந்த கவிதைப் படைப்பில் தனது தாய் பற்றிய மகனின் நினைவுகளை வர்ணனைக்கு இசையுடன் கலந்து உருவாக்கியுள்ளார்.

இங்கு சேர்க்கப்பட்டுள்ள திஸ்ஸ அபேசேகரவின் அட்ஹோம் லிப்பிப் உடன் இந்த வட்டங்களை இணைத்து ரசிக்க முடியும். அதே போன்று லோரன்ஸின் (Snake) பாம்பு என்ற கவிதையில் இருந்து கவிதையில் இருந்து கவிஞர் குணதாச அமரசேகர பெற்ற உத்வேகம் அவரது "அஹரகுக்கா" கவிதையில் தெளிவாக வெளிப்படுகிறது. அதில் லோரன்ஸ் மற்றும் அமரசேகர இருவரும் நவீன புலனாய்வு அமைப்பின் மனிதாபிமானம் அற்ற தன்மை குறித்து கேள்வி எழுப்பியுள்ளனர். லோரன்ஸ் பாம்பைக் கொன்றதைவிட அமரசேகர பாம்பை கொன்றது உயர்ந்த கண்ணோட்டத்துக்கு நீண்டுள்ளது. ஏனெனில் அது நமது கலாச்சார உணர்வின் செயற்பாட்டை பிரதிபலிக்க முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னார் மண் வாழ்வியலின் ஓரங்கம் “கோவர்த்தனம்” நாவல்




சிவ. ஆரூரன்

மன்னார் மண்ணில் வெள்ளாமைக் காலத்தில் ஆநிரைகளை அவிழ்த்து மேயவிட முடியாது. பயிர்களை அவை அழித்துவிடும். ஓரிரு மாடுகளை வைத்திருப்போர் வீடுகளில் கைத்தீன் போட்டு வளர்க்க முடியும். அவ்விதத்தில் நூற்றுக் கணக்கான மாடுகளை வளர்ப்பது என்பது இயலாத காரியம். அவ்வாறு பெருந்தொகை மாடுகளைப் பட்டியாக வைத்திருப்போர் ஒதுக்காக இருக்கும் மேய்ச்சல் தரவையை நோக்கி அவற்றை ஓட்டிச் சென்று, அறுவடைக்காலம் நிறை வடையும் வரை அங்கேயே தங்கியிருந்து விட்டு மீண்டும் தம் ஆநிரைகளோடு ஊர்திரும்புவர். விடத்தில் தீவு, இலுப்பைக்கடவை, தேத்தாவடி போன்ற இடங்களில் மேய்ச்சல் தரவைகள் உண்டு. மன்னார் நகரை அண்மித்த பகுதியில் உள்ளோர் தம் ஆநிரை களை பல பத்துக் கிலோமீற்றர் தொலைவிலுள்ள மேற்படி மேய்ச்சல் தரவையை நோக்கி ஓட்டிவருவர். அதனை மையச் சரடாக வைத்து ஸ்ரீலேக்கா பேரின்பகுமார் புனைந்துள்ள நாவலே கோவர்த்தனம். இது ஜீவநதி பதிப்பகத்தின் 225வது வெளியீடாக அமைந்துள்ளது.

**1. கதை**

தேவராசா என்பவரிடம் 248 மாடுகள் கொண்ட பட்டி இருக்கிறது. வெள்ளாங்குளத்திற்குச் சமீபமாக உள்ள தேத்தாத்தீவில் பாலி ஆற்றோரமாகத் தற் காலிகப் பட்டி அமைத்து ஆநிரைகளைப் பராமரிப்பதற்கு யூலியன், செபஸ்ரின் என்ற ஈரிளைஞர்களை கூலி கொடுத்து பணிக்கு அமர்த்துகிறார். கார்த்திகை மாதத்தின் நடுப்பகுதியில் நறுவிலிக் குளத்திலிருந்து புறப்பட்டு, ஆறுமாதங்கள் தேத்தாத்தீவில் தங்கியிருந்து விட்டு மீண்டும் ஊர்திரும்பும் வரையில் அவர்களின் அனுபவங்களே மையக்கதை.

தங்குமிடம் அமைத்தல், பட்டி அமைத்தல், ஆறுகடந்து ஆநிரைகளை மேய்ச்சலுக்கு ஓட்டிச் செல்லல், சமையல் செய்தல், மீன்பிடித்தல், வேட்டை யாடுதல், தேனெடுத்தல் போன்ற சுக அனுபவங்களை யும்; வெள்ள அபாயம், யானைத்தொல்லை, குரங்குத்தொல்லை, நோய்வாய்ப்பட்ட மாடுகளைப் பராமரித்தல், மாடுகள் களவு போதல், மாடுகள் பட்டிமாறல் போன்ற நெருக்கடிகளையும் தவறவிடாது ஆசிரியர் பதிவு செய்துள்ளமை சிறப்பு.

இப்படி மாடு மேய்ப்பது காலாகாலாக நடை பெற்றுவரும் ஒரு விடயம். தற்போது தொழில்நுட்ப வளர்ச்சியினால் கைப்பேசிப் பயன்பாடு இருப்பது ஓர் ஆறுதல். குடும்பங்களோடு உறவுகொள்ள முடிகிறது. யூலியனும் செபஸ்ரியனும் ஆள்மாறி ஆள் வீடு சென்று வருகின்றனர். இடையிடையே தேவராசா தேவை நிமித்தம் பட்டிக்கு வந்து செல்கிறார். கில்மன் என்பவனின் பட்டியும் அருகே உள்ளது. அவனின் குடும்பம் இடையிடையே அங்கு வந்து தங்கியிருக்கும். கில்மனின் தங்கை றொக்ஸிக்கும் யூலியனுக்கும் இடையிலான அரும்புநிலைக்காதலையும் கதையில் காண முடிகிறது.

**2. சுகானுபவம்**

ஆற்றில் மீன்பிடித்தல், பொந்தில் தேனெடுத் தல் என ஆசிரியர் விவரிக்கும் வேளை நானும் அந்த அனுபவத்தை அடைந்தேன். அந்தநாள் ஞாபம் நெஞ்சில் சூழ்ந்தது காடு என்பது வீதியோரம் கைகட்டி நின்று இரசிக்கத்தக்க ஒன்றல்ல. இறங்கிச் சென்று அதில் கலந்து ஆழ்ந்து அனுபவிக்கத்தக்கது. அது உயிரினங்களின் ஆலயம். வாசகன் ஒருவன் நேரில் சென்று அந்த அனுபவத்தைச் சுகிப்பது அருமையாக இருக்கும். இவ்வாறு பட்டி அமைத்து வாழும் தொழி லாளரோடு மூன்று நாள்களுக்குக் குறையாது கூடிக் குலாவி வாழும் பட்சத்தில், சுகானுபவம் கிடைக்கும். இது என் அனுபவமும் வாதமும். நம்பிக்கைக்குரிய, நன்கு காடு பழக்கமானவரோடு மட்டுமே இத்தகைய சுற்றுலா செல்ல வேண்டும். இல்லையேல் அதுவே சிரமமாகிவிடும்.

**3. கவனத்தை ஈர்க்கும் காட்சிகள் சில**

அ. “தவித்த முயல் அடித்தல்” என்ற சொலவடை தமிழில் இருக்கிறது. அடை மழை பொழியும் போது வெள்ளப் பெருக்கினால் தாழ் நிலங்கள் நீரில் மூழ்கி விடும். ஒரு சில மேட்டுப்பகுதிகள் நீரில் மிதந்து தெரியும். அந்தரித்த காட்டு விலங்குகள் அடைக்கலம் நாடி அந்த மேட்டு நிலத்திலேறி நிற்கும். அவ்விலங்குகளை வேட்டையாடல் “தவித்த” என்ற பொருளில் தவித்த முயல், தவித்தமான், தவித்த மரை என நீண்டு செல்லும் இலகு வேட்டை. இதனை எந்தவொரு வேட்டையாளியும் செய்ய முடியும். ஏனைய காலங்களில் வேட்டையாடுவதற்கு திறமை அவசியம். தேர்ந்த வேட்டையாளிகள் மிருகங்கள் சினைப்படும் காலத்தை கணித்து, அக் காலத்தில் அந்த மிருகங்களை வேட்டையாடுவதில்லை. கதையில் யூலியனும் செபஸ்ரியனும் ஒரு முயலை வேட்டையாடுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்முயலின் வயிற்றில் குட்டிகள் இருக்கின்றன. யூலியன் அதற்காக வருந்துகிறான்; இறைச்சியை உண்ணாது விடுகிறான். அது யூலியனை முதன்மைப் பாத்திரமாக வைக்கும் ஆசிரியரின் முயற்சியாகும்.

ஆ. இங்கு மழைபொழியாது இருந்தாலும் ஆறுகள் கரைபுரண்டு ஓடும் சந்தர்ப்பங்களும் உண்டு. அனுராதபுர பொலனறுவை பக்க வெள்ளங்கள் வடதிசை பாய்ந்து வருவதால் இந்நிலை ஏற்படுகிறது (பக்31). பாலி ஆற்றில் வெள்ளம் கரைபுரண்டு ஓடுகிறது; தரவைப் பகுதிக்குள்ளும் வெள்ளம் புகுந்துவிட, மேய்ச்சலுக்கு சென்ற மாடுகள் பிரிந்து விடுகின்றன. ஒரு பிட்டியில் ஒரு தொகுதி மாடுகள் "தவித்த மாடுகள்" ஆகிவிடுகின்றன. வெள்ளம் வடிய ஏழு நாள்கள் எடுக்கின்றன. அதுவரை அவை அந்தப் பிட்டியிலேயே தரித்து நிற்கின்றன. (பக் 33, 34) தினசரி யூலியனும் செபஸ்ரியனும் சென்று பார்வையிட்டு வருகின்றனர். கூடவே தேவராசாவும் நிற்கிறார். இதற்கிடையில் ஒருவன் தவித்த மாடுகளில் ஒன்றை நாட்டு வெடிகுண்டு வைத்துக் கொன்று இறைச்சிக்காகக் கொண்டு சென்றுவிடுகிறான். ஒருவாறு திருடனைக் கண்டுபிடித்து பொலிஸூக்குச் சொல்வதாக மிரட்டி, "எரியிற வீட்டில் பிடுங்கினது லாபம்" என்பது போல 20000 ரூபா வாங்கி விடுகிறார் தேவராசா. காட்டு விலங்கை வேட்டையாடி விற்கும் போது அவன் வேட்டைக்காரன்; மக்களின் மாட்டை வேட்டையாடும் போது அவன் திருடன் என்றாகி விடுவான். அவனைப் பொலிஸில் பாரப்படுத்தலாம் (பக் 38). ஆனால் யாரும் அதைச் செய்வதில்லை. ஏனெனில் அவனே நாளை மான், மரை, பன்றி இறைச்சி என விதம் விதம் விதமாகக் கொண்டு வருவான். அப்போது அவன் தேவைப்படுவான். யதார்த்தமான காட்சி நன்று.

இ. ஊர் திரும்பும் போது தரவையிலுள்ள கொட்டில்களைப் பிரித்து உழவு இயந்திரத்தில் ஏற்றுகின்றனர். புதிய மரந்தடிகள் இருக்கின்றன. அவற்றைக் கொண்டு செல்ல முடியாது என்பதால் செபஸ்ரியன் அவற்றின் மேல் சாணகத்தைப் பூசி உருமறைக்கிறான். அது தான் உண்மை. யதார்த்த மானது.

ஈ. ஆநிரைகளோடு விடத்தில் தீவில் இடைத்தங்கள் ஏற்படுகிறது. யூலியனும் செபஸ்ரியனும் உழவு இயந்திரத்தில் தங்க, தேவராசா தனக்கு தெரிந்த ஒருவரின் வீட்டில் தங்குகிறார். தொழிலாளரின் முதுமைத் தடவி வேலை செய்விக்கும் சிறந்த பண்ணையாளராக இருக்கிறார்.

**4. தொகுப்புரை**

யூலியன் என்ற பாத்திரம் முதன்மையாகிறது. ஏனைய பாத்திரங்கள் தமக்கே உரிய பலம் பலவீனங் களோடு இருக்கின்றன. சிறந்த மொழிக் கையாட்சி எழுத்தில் நுணுக்கம் உள்ளது. கதை நகர்த்தும் விதம் சிறப்பு.

"கதை என்பதற்கு அப்பால், இங்கு ஆவணப் படுத்தலை தன்மைப்படுத்த வேண்டிய தேவை ஏற்படுகின்றது..." (என்னுரை) 136 பக்கத்துக்குள் அனைத்து விடயங்களையும் உட்படுத்தியிருக்கிறார். அவரின் நோக்கிற்கு வெற்றி எனலாம்.

மூப்பு அடிப்படையில் ஆண் கதாமாந்தர்கள் மதிப்பளிக்கப்படுவார்கள் எனின் பெண் கதாமாந்தர் களுக்கும் அந்த உரிமை உண்டு என்பது எனது நிலைப் பாடு. ஆசிரியர் நாவலில் அதனைக் கவனிக்கவில்லை. எடுத்துக் காட்டாக; (பக் 107) "திரேசம்மாவின் இளைய சகோதரன் வந்திருந்தார்" "திரேசம்மாவும் அங்கு வந்தாள்"(திரேசம்மா என்பவர் யூலியனின் தாயார்) ஆக்க இலக்கியத்தில் இவ்வாறான ஆணாதிக்கத் தமிழ் வழக்கில் இருந்து வந்தது தான். ஆயினும் இளைய வர்கள் அவற்றைக் களைதல் அவசியம்.

"கோவர்த்ததனம்" ஆசிரியரின் கன்னி நாவல் எனும் போது அது சிறப்பாகவே உள்ளது. பேசாப் பொருளை பேச வேண்டும் என்ற அவரின் எண்ணம் மெச்சத்தக்கது. இத் திசையில் அவர் தொடர்ந்து பயணிக்கையில் ஈழத்து நாவலாசிரியர் வரிசையில் ஸ்ரீலேக்கா பேரின்பகுமாருக்கும் ஒரு தனித்துவமான இடம் அமையப்பெறும் என்பது என் அபிப்பிராயம்.

ஸ்ரீலேக்கா அவர்கள் தொழில் முறையில் ஒரு நாடகமும் அரங்கியலும் பாட ஆசிரியர். நாடக நூலுக் காக அரச இலக்கிய விருது பெற்றவர் (கிணற்றங்கரை 2015). நான் முன்னதாக கலாநிதி.த.கலாமணி அவர்களின் "பாட்டுத்திறத்தாலே", "முதுசொம்"; ஈழ நல்லூர் கண்ணதாசன் அவர்களின் "கலியுக காண்டம்" ஆகிய சிறுகதைகளைப் படித்த போது மூத்த கலைஞர்களின் வாழ்வியலின் ஒரு பக்கத்தைக் கண்டு மனம் நெகிழ்ந்தேன். என்னை மிகவும் கவர்ந்த சிறுகதைகள் அவை. ஏலவே நீ.பி.அருளானந்தம், எஸ்.ஏ.உதயன் போன்றவர் கலைஞர்களின் வாழ்வி யலை மண் வாசனையோடு படைத்திருக்கிறார்கள். அதேபோல யாழ் மண்வாசனையோடு நாடக /கூத்துக் கலைஞர்களின் வாழ்வியலை முழுமையான தரிசனமாக, விரிந்த தளத்தில் நாவலாகக் காண வேண்டும் என்ற ஆவல் எப்போதும் எனக்கு உண்டு. தற்போது ஸ்ரீலேக்கா அவர்கள் அதை நிறைவேற்றுவார் என நம்பிக்கை பிறக்கிறது. அதற்கான பூரண இயலுமை அவரிடம் உள்ளது.

அவர் மென்மேலும் பயணிக்க எனது வாழ்த்துக்கள்!



தானா விஷ்ணுவின் "நின்று தூறும் மழை" கவிதைத்தொகுதி வெளியீடு 29.01.2023 அன்று இமையாணன் முன்பள்ளி மண்டபத்தில் சி.ரமேஷ் தலைமையில் நடைபெற்றது. விமர்சன உரைகளை இ.இராஜேஸ்கண்ணன், நா.நவராஜ் ஆகியோர் நிகழ்த்தினார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிரோவியன் பக்கம்... 4

ஆள் பார்த்து கொள்வனவு செய்கிறார்களா?

இன்றைய காலத்திலே நூல்களை அச்சடித்து விட்டு ஈழத்து படைப்பாளர்கள் அதனை விநியோகிக்கப்படும் பாட்டை நாம் அறிவோம். ஈழத்தைப் பொறுத்தவரையில் படைப்பாளர்கள் சொந்த செலவிலேயே புத்தகத்தை வெளியிடுகிறார்கள். வட மாகாண பண்பாட்டு அலுவல்கள் அமைச்சு ஆண்டு தோறும் ஒரு படைப்பாளரிடம் இருந்து 5000.00 பணத்திற்குரிய புத்தகங்களை சில ஆண்டுகளாக கொள்வனவு செய்து படைப்பாளர்களை ஊக்குவித்து வருகின்றது. பாராட்டுக்குரிய செயல். வருட ஆரம்பத்தில் குறித்த ஒரு திகதியைத் குறிப்பிட்டு நூலின் ஒரு பிரதியைப் பெற்று பரிசீலனை செய்யப்பட்டு வருட இறுதிக்குள் நூல்கள் கொள்வனவு செய்யப்பட்டு குறித்த படைப்பாளரது வங்கி கணக்கிலக்கத்துக்கு பணம் வைப்பிடப்பட்டு வருகின்ற செயன் முறை நடைபெற்று வருகின்றது. மிகவும் நேர்த்தியாக இந்த நடைமுறை செய்யப்படுவதும் பாராட்டிற்குரியது. ஆனால் இந்த நூல்கள் என்ன வகையில் கொள்வனவிற்கு தேர்வு செய்யப்படுகின்றது என்பது புரியாத புதிராக இருக்கின்றது. சில முக்கியமான நூல்கள் கொள்வனவில் இருந்து தவிர்த்து விடுதலின் மாயம் தெரியாமல் இருக்கின்றது. உதாரணமாக சென்ற ஆண்டு ஈழத்தின் பிரபல எழுத்தாளர் அ. யேசுராசா அவர்களின் "அங்குமிங்குமாய்" கலை - இலக்கியம், மொழி, பயணம், ஊடகம் பற்றிய கட்டுரைகளும், 'பத்தி' எழுத்துகளும் நிறைந்த 412 பக்கங்களில் 75 விடயங்களை உள்ளடக்கி சிறந்தொரு நூல் வெளியானது. ஈழத்தின் இலக்கியவோட்டத்தின் பல்வேறு வகையான விடயங்களையும் இந்நூல் வெளிப்படுத்தி இருந்தது. 1000.00 விலை. அ.யேசுராசாவின் நூல்கள் என்றும் விற்பனையில் பின்தங்கியது இல்லை. யேசுராசா அவர்களும் நூற் கொள்வனவுக்கு தனது நூலை வடமாகாண பண்பாட்டு அலுவல்கள் அமைச்சுக்கு அனுப்பியிருக்கின்றார். ஆனால் அவரது நூல் கொள்வனவு செய்யப்படவில்லை. இதன் பின்னால் உள்ள காரணிகள் என்ன? இந்த தேர்வுக்குழுவில் உள்ளவர்கள் பலர் பல்கலைக்கழக விரிவுரையாளர்களும் பேராசிரியர்களுமே. இந்நூலில் சில பல்கலைக்கழகப் பேராசிரியர்களின் தவறுகள் சுட்டிக்காட்டப்பட்டமையே இந்த புறக்கணிப்புக்கு காரணமாக அமையும் என எண்ணத் தோன்றுகின்றது. ஏன் இந்த நடு நிலைமைத்தன்மை அற்ற செயலை செய்கிறார்கள். யேசுராசா அவர்கள் பிழைகளை சுட்டிக்காட்டும்போது ஆதாரத்துடனேயே நிரூபிக்கின்றார். பிழையை பிழை என்று தானே சொல்ல வேண்டும். பதவிநிலை கருதி பிழையை சரியென பூசி மெழுக வேண்டும் என இவர்கள் எதிர் பார்க்கிறார்களா? விமர்சனம் என்பது பிழைகளை கண்டும் காணாமல் எழுத வேண்டுமெனவா இவர்கள் எதிர் பார்க்கிறார்கள். கலாசார உத்தியோகத்தர்கள் பலரும் நூற்கொள்வனவுக்கு தெரிவு செய்யப்பட்ட புத்தகங்களை எழுதிய எழுத்தாளர்களுக்கு தகவல் தெரிவிக்காமல் இருந்துள்ளார்கள். பலர் தாமாக தொடர்பு கொண்டு நூற் கொள்வனவுக்கான புத்தகங்கள் பெறும் திகதி முடிவடைய உள்ளது. எமது நூல் கொள்வனவு செய்யப்பட்டதா என வினவிய பின்னரே விழிப்படைந்துள்ளார்கள். ஏன் இந்த அசண்டையீனம். குறிப்பாக பெயர்களை சுட்டி கலாசார உத்தியோகத்தர்களை இனங்காட்ட முடியும். எதிர்காலத்தில் திருந்துவார்கள் என்ற எதிர்பார்ப்பினால் தவிர்க்கின்றேன்.

(இடையிடையே பேசுவோம்)

யாழ் மருதனின் "விரல்களிலும் வேர் முளைக்கும்" வெளியீடு 29.01.2023 அன்று கரைச்சி பிரதேச சபை அரங்கில் பி.எல்.றெஜிஸ் தலைமையில் நடைபெற்றது. வாழ்த்துரையை கே.ஏ.றொபின்சன் வழங்கினார். வெளியீட்டுரையை திசா ஞானச்சந்திரன் ஆற்றினார். கருத்துரையை யோ.புரட்சி நிகழ்த்தினார்.









அண்ணாவியாரும் பிரபல இசை நாடக நடிகரும் சோதிடருமான எஸ்.தம்பிஜயா அவர்களின் உருவச்சிலை அல்வாய் கலைஅக முன்றலில் 22.01.2023 அன்று அவரது பேரன் க. பரணீதரனின் முன்னெடுப்பில் அமைக்கப்பட்டு பேராசிரியர் அ. சண்முகதாஸ் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. சிறப்புரையை கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் நிகழ்த்தினார். கலாநிதி த.கலாமணியால் எழுதப்பட்ட "அண்ணாவியார் எஸ்.தம்பிஜயாவின் கலைப்புலம்" என்னும் நூலும் வெளியிடப்பட்டது. வெளியீட்டுரையை த.அஜந்தகுமார் நிகழ்த்தினார். அண்ணாவியார் எஸ்.தம்பிஜயா பற்றிய நினைவுப் பகிர்வுகளை ந.துரைராசா, மா.செல்லத்தம்பி, சீ.இராசநாயகம் ஆகியோர் நல்கினர். நன்றியுரையை க.பரணீதரன் நல்கினார். அண்ணாவியார் எஸ் தம்பிஜயா 2000 இற்கு மேற்பட்ட இசை நாடகங்களை நடித்ததுடன் 35 வகைக்கு மேற்பட்ட இசை நாடகங்களை அண்ணாவியம் செய்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இச் சஞ்சிகை அல்வாய் கலையகம் வெளியீட்டு உரிமையாளர் கலாநிதி த. கலாமணி அவர்களால் மதி கலர்ஸ் நிறுவனத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org